# கம்பர்

மூதறிஞர்
வ. சுப. மாணிக்கம்

மெய்யப்பன்
பதிப்பகம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# கம்பர்

தமிழக அரசின் பரிசுபெற்றது

மூதறிஞர் செம்மல்

வ.சுப. மாணிக்கம், பிஎச்.டி., டி.லிட்டு.

மெய்யப்பன் பதிப்பகம்

53, புதுத்தெரு, சிதம்பரம்-608001.

முதல் பதிப்பு : சனவரி, 1990

மூன்றாம் பதிப்பு : அக்டோபர், 2001

திருவள்ளுவர் ஆண்டு : 2032

உரிமை : வ.சுப.மா. ஏகம்மை ஆச்சி

**விலை : ரூ. 40.00**

பதிப்பாசிரியர்

முனைவர் ச. மெய்யப்பன்

ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

தமிழகப் புலவர்குழுவின் துணைத் தலைவர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

**'வள்ளுவம்'** இதழின் சிறப்பாசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

**'பதிப்புச்செம்மல்'** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

**கிடைக்குமிடம்:**

12-B, மேல சன்னதி, சிதம்பரம்- 608001. **✆:230069**

31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600108. **✆:25361039**

5, சிங்காரவேலுதெரு, தி. நகர், சென்னை-600017. **✆:24357832**

110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001. **✆:2622853**

15, ராஜ வீதி, கோயமுத்தூர்-641001. **✆:2397155**

28, நந்தி கோயில் தெரு, திருச்சி-620002. **✆:2706450**



மூதறிஞர், செம்மல்

வ.சுப. மாணிக்கனார்

1917 - 1989

## மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார்
## வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு : 17.4.1917 (புதுக்கோட்டை மாவட்டம் மேலைச் சிவபுரி)

பெற்றோர் : வ. சுப்பையா - தெய்வானைஆச்சி

கல்வி : அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'வித்வான்' படிப்பு, முதல் வகுப்பு தேர்ச்சி (1940) பி.ஓ.எல் - 1945; எம்.ஓ.எல் - 1948; எம்.ஏ - 1951; பி.எச்.டி - 1957

பணி : அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'விரிவுரையாளர்' ஏழு ஆண்டுகள் (1941 - 1948); காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் (1948 - 1964)

முதல்வர் : அழகப்பா கல்லூரியில் ஆறு ஆண்டுகள் முதல்வர் (196 அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவர் (1970-1977).
அங்கு ஏழு ஆண்டுகள் புல முதன்மையர்.

துணை வேந்தர் : மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 17-8-1979 - 30-6-1982.பண்டிதமணி கதிரேசனார் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியமை.

**பல்கலைக்கழகத்தில் உருவாக்கிய துறைகள்:**
1979: எரியந்துறை; 1980:மேலாண்மைக் கல்வி;
1981: பதிப்புத்துறை - மொழியியல்துறை;
1982: தமிழியற்புலம்

எழுத்துப் பணி : மனைவியின் உரிமை - முதல்நூல் - 1947
வள்ளுவம் - 1953; தமிழ்க்காதல் - 1957;
கம்பர் 1965 - தமிழக அரசு முதற்பரிசு பெற்றது
மாணிக்கக் குறள் - 1989

**தமிழ்ப் பல்கலைக்கழக வடிவமைப்புக்குழுத் தலைவர்** - 1981

**புலவர் குழுத் தலைவர்:** (1974 - 1989)

**பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவர்**

**தமிழ்வழிக் கல்வி இயக்கம்:** 1988

தமிழ்ப் பல்கலைக்கழக 'தொல்காப்பிய தகைஞர்' - 1985-86

**குடும்பம்:**

உடன் பிறந்தோர்: வ.சுப. திருப்பதி செட்டியார்
வ.சுப. சொக்கலிங்கம்

மனைவி: ஏகம்மை ஆச்சி

மகன்கள்: தொல்காப்பியன், பூங்குன்றன், பாரி

மகள்கள்: தென்றல், மாதரி, பொற்றொடி

**வெளிநாடு பயணம்:** இலங்கை, மலேசியா, ஐரோப்பா

**பெற்ற பட்டங்கள்:**

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை: **'செம்மல்'**

குன்றக்குடி ஆதீனம்: **'முதுபெரும் புலவர்'**


ஈப்போ பாவாணர் தமிழ்ச்சங்கம்:
**'பெருந்தமிழ்க்காவலர்'**

திருவனந்தபுரம் திராவிட மொழியியற்கழகம்:
**'முதுபேராய்வாளர்'**

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொன்விழாவில்
**'டி.லிட்' பட்டம் - 1979**

**தமிழக அரசு:** திருவள்ளுவர் விருது - 1989

**மறைவு:** 24-4-1989



# கம்பன் ஆய்வில் புதிய தடங்கள்


## பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்

**நிறுவனர் – மெய்யப்பன் தமிழாய்வகம்**


தமிழ்மொழி காப்பியங்கள் நிறைந்த மொழி. நெஞ்சை அள்ளும் சிலம்பு தொடங்கிப் ‘பாண்டியன் பரிசு’ வரை பல்வகைக் காப்பியங்கள் மொழிக்குச் செழுமை சேர்த்து வருகின்றன. காப்பியங்களின் கட்டமைப்பை அடியார்க்கு நல்லார் மிக நுட்பமாக விளக்கியுள்ளார். நச்சினார்க்கினியரும் காப்பியக் கவின்களைச் செவ்விய முறையில் ஆராய்ந்துள்ளார். நீண்ட இடைவெளிக்குப் பின் மேலைப் புலங்களில் வளர்ந்து வரும் திறனாய்வு அடிப்படையில் தமிழ்க் காப்பியங்கள் ஆராயப் பெற்றன. இலக்கியக் கலைகள், இலக்கியத் திறனாய்வுகள் என்று நூல்கள் பல்கின, பெருகின. வெளிநாட்டு அளவுகோல்களைக் கொண்டு இந்திய இலக்கியங்களின் பெருமை பேசப்பெற்றது.

தமிழ்க் காப்பியங்களின் தனிச்சிறப்பினை, அமைப்பினை, அழகினை மூதறிஞர் செம்மல், வ.சுப. மாணிக்கனார் தூய தமிழ்த் திறனாய்வு நெறியில் ஆராய்ந்துள்ளார். கடந்த ஐம்பது ஆண்டு களாகக் கம்பராமாயணம் போற்றப் பெற்றாலும், ஆராயப் பெற்றாலும் **கம்பர் என்னும் இந்நூல் கம்பர் ஆய்வில் முடிமணியாகத் திகழ்கிறது.** மூத்த தமிழுக்குப் புது ஆய்வு நெறியை அளிக்கிறது. பெருங்காப்பியத்தின் பரப்பளவு, களங்கள், கட்டமைப்பு, தொடர்ச்சி, ஒருமை இந்நூலில் மிகச் சிறப்பாக இதற்குமுன் கூறப்படாத வகையில் நிறுவப் பெற்றுள்ளன. காப்பியப் புலவனின் அறிவாற்றல், படைப்புத் திறன், காவிய நயங்கள் நுண்ணாய்வு நெறியில் ஆராயப் பெற்றுள்ளன.

பெருங்காப்பியப் புகழ் பரவி வரும், காப்பியக் கல்வி சிறந்து வரும் இந்நாளில் இவ்வகை நூல்கள் தனிச் சிறப்பிடம் பெறுகின்றன. பெருங்காப்பிய ஆய்வுக்கு வழிகாட்டி மட்டுமன்று, வளர்தமிழ்

ஆய்வுக்கு எடுத்துக்காட்டாகவும், தமிழ்த் திறனாய்வுக்குக் கோட்பாடுகளை உருவாக்கும் கொள்கை நூலாகவும் திறனாய்வுச் சட்டமாகவும் தலை சிறந்த ஆய்வேடாகவும் இந்நூல் விளங்குகிறது. தமிழ்க் காப்பிய ஆய்வு வரலாற்றில் இந்நூல் ஒரு திருப்புமுனை; வரலாறு படைக்கும் திருநூல், பெருநூல்.

செந்தமிழ்க் காப்பியங்களின் செந்நெறியை ஆய்வார்க்கும், காப்பிய நலம் துய்த்துக் களிப்பார்க்கும் வளர் தமிழில் புதுமைக் காப்பியம் படைப்பார்க்கும் இந்நூல் வழிகாட்டும் என்பது என் உறுதியான நம்பிக்கை.

இந்நூலே மணிவாசகர் பதிப்பகத்தை நாட்டிற்கும் நல்லறிஞர்களுக்கும் அறிமுகப்படுத்தியது; பரிசும் பெற்றது; பலரின் பாராட்டையும் பெற்றது. பத்துக்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் பாடநூலாகவும், பார்வை நூலாகவும் இந்நூல் ஏற்றுக்கொள்ளப் பெற்ற சிறப்பினை எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

மாணிக்கனாரின் புதிய சொல்லாக்கங்கள் தமிழுக்குப் புதுவரவும் தமிழுக்கு ஆக்கமும் ஆகும். இந்தத் தலைமுறையில் இவரைப் போல் புதிய சொற்களைப் படைத்தவர் இலர். வாழும் சொற்களைப் படைப்பதில் வல்லவர்: பழஞ்சொல் புதுப்பிப்பதிலும் வல்லவர். இவர் எழுத்து அனைத்திலும் பழஞ் சொல்ஆட்சிக்கு மிகுந்த இடமுண்டு. இவர் படைத்த பல சொற்கள் பலராலும் ஏற்றுக்கொள்ளப் பெற்று நாளும் பயன்படுத்தப்பெற்று வருவது இவரது சொல்லாக்கச் செந்நெறிக்குச் சான்றாகும்.

இவர் நடை சொற்செட்டும், சுருக்கமும் தெளிவும் செறிவும் திட்பமும் நுட்பமும் வாய்ந்தது. புலமை நலம் சான்ற பெருமித நடை. பழந்தமிழ்ச் சொற்கள் மிகுந்து வரும் இலக்கிய நடை. 'திட்டமிட்டுச் சொல்லும் கலையழகு' இவர் நடையிலுள்ளது. புதுச்சொற்கள் பொலியும் புதுவகை நடை. எல்லா வகையாலும் இவரது நடை தனித்தன்மை சான்றது. பேராசிரியருடைய மூன்று வரிசைகளைக் கொண்டே இவர் தமிழ்நடையின் தனித் தன்மையினை இனம் காணலாம். இவர் பயன்படுத்தும் சொற்கள், சொல்லாக்கம், சொல்லாட்சி ஆகியவை இவர் நடையின் இயல்பினை இனங்காட்டுவன.

ஆய்வு இவருக்கு இயல்பாக அமைந்ததொன்றாகும். திருக்குறளைச் செயல் நூலாக வள்ளுவமாக ஆக்கினார், கம்பனைக் கற்கும் நெறியில் புதிய தடம் அமைத்தார். அகத்திணையியல் ஆய்வில் 'தமிழ்க் காதல்' நெறி விளக்கினார். இவை என்றும் தமிழுக்குப் பொன்றாப் புகழ் தருவன. 'மறைமலை அடிகளாரின் ஆய்வுத் திறனும் கொள்கை உறுதியும், திரு.வி.க. வின் மொழி

நடையும் சமுதாய நோக்கும் பேராசிரியரின் எழுத்தில் பளிச்சிடுகின்றன' எனத் திறனாய்வாளர்கள் மதிப்பீடு செய்துள்ளனர்.

மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் தமிழ்மை போற்றும் தகைஞராக விளங்கியதற்கு, அவர்தம் தமிழ்க் கல்வியே அடிப்படையாகும். மொழிநடை என்பது செம்மையும் செறிவும் சீர்மையும் நோக்கியதாகவே இருக்க வேண்டுமென்ற கோட்பாடு உடையவர். அதனின்றும் அணுவளவும் பிசகாத உறுதியினர்.

கம்பரைப் போல் தமிழ் ஒலி மரபு, மொழி மரபைக் காத்தவரும், சொல்லாக்க நெறி கண்டவரும் எவருமிலர். ஒரு செய்யுளின் ஈற்றடிகள் முன்னைய அடிக் கருத்துக்களைத் தாங்கி, முத்தாய்ப்பாக விளங்குவதைக் கம்பன் பாடல்களின் ஈற்றடிகளை வைத்து, இவர் விளக்கும் திறம் புதிய அணுகு முறையாகும். அதற்கு இவர் "உடற் பாரத்தைக் காலடி தாங்குவது போலக் கூற்றின் புகலிடமாக ஈற்றடிகள் உள" என்று விளக்குகிறார்.

"காப்பியம் ஒரு கல்லில் செய்யும் குடவரைக் கோயிலன்று; ஒரு கோபுரமுடைய கோயிலுமன்று. கல்பல அடுக்கிய உள்ளும் புறமும் கோபுரங்கள் கொண்ட வானளாவிய கட்டுமானக் கோயிலாகும்" என்பார். கம்பன் காப்பிய முழுமையைத் தம் அறிவுக் கண்ணாடியில் கண்டுகளித்த, இக்கவித்திறனாளி, அக் காப்பியத்து வரும் நாடகப் பண்பு மீக்கூர்ந்த படலங்களையும் நம்முன் வரிசைப்படுத்துகிறார். இராமாயணத்தின் பல படலங்கள் தனித்தனி நூல் எனத் தகும் சிறப்புடையன. செகப்பிரியரின் நாடகங்கள் அனைத்தையும் தொகுத்தால் இராமாயணத்தின் பாதியளவுதானே இருக்கும்! காப்பியங்களில் காட்சிகள் பலவும் 'இரத்தினக் கம்பளம்' விரித்தாற்போலக் காட்டப்படுகின்றன.

எங்கள் பதிப்பகத்திற்குப் பெருமை சேர்க்கும் நல்லாசிரியப் பெருமக்களுள் முதன்மையான இவர்தம் படைப்புக்களைப் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து வெளியிட்டுப் பதிப்பகம் பேரும் புகழும் பெற்று வருகிறது. பயனுள்ள நூல்களை வெளியிடும் ஒவ்வொரு முறையும் பூரிப்போடும் உவகையோடும் களிப்போடும் சாதனை மலர்களைச் சூடி மகிழ்கிறது.

பெரும் பேராய்வுக்குப் பதிப்புரை எழுதும் பேறு கிடைத்ததை எண்ணிப் பெருமகிழ்வு கொள்கிறேன். நல்ல நூலை நாட்டிற்கு அளிக்கும்போதெல்லாம் என் சிந்தை மகிழ்கிறது. தோள்கள் பூரிக்கின்றன. பதிப்புத் துறையில் உயர்வு தரும் நெறிகளை மேற்கொள்ள உறுதி கொள்கிறேன்! உவகை அடைகிறேன்.

# முன்னுரை

தமிழ்ப் பேராசிரியர் மூதறிஞர் இரா. பி. சேதுப்பிள்ளைதம் அன்னையார் நினைவாகச் சொருணாம்பாள் நிதிச் சொற்பொழிவு என்னும் ஓர் அறக்கட்டளையை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிறுவினர். இவ்வமைப்பின்கீழ் கம்பர் என்ற புலவர் பெருமான் தலைப்பில் 1964 பிப்பிரவரி 21-22-23 ஆம் நாட்களில், காப்பியப் பார்வை, காப்பியக் களங்கள், காப்பிய நேர்மை என்ற முத்திறப் பொருள் பற்றிச் சொற்பொழிந்தேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவனாகப் படிப்புதவி பெற்றுச் சேர்ந்து 1940இல் வித்துவான் பட்டம் எய்தியதும், ஆய்வு மாணவனாக இருந்தபின் விரிவுரை யாளனாகப் பணி தொடர்ந்ததும், நெட்டிடைக்குப்பின், முத்துறையும் ஒருங்கிணைந்த தமிழ்ப்பெருந்துறைக்கு 1970 முதல் ஏழாண்டுக் காலம் தமிழ்ப் பேராசிரியனாகவும் இந்தியப் புல முதன்மையராகவும் பணியில் இருந்ததும், பல்கலைக்கழகம் 1979இல் பொன் விழாக் கொண்டாடிய ஞான்று மூதறிஞர் (D. Litt) என்ற சிறப்புப் பட்டம் எனக்கு வழங்கியதும் எல்லாம் என் வாழ்வின் நற்கூறுகளாகும். வள்ளல் அண்ணாமலையரசர் மேல், 'நில்லாத செல்வத்தை நிலைக்கச் செய்தான்' என்று யான் பாடிய எண்சீர்ப் பாட்டும், அரசர் முத்தையவேள் மேல், 'மணி காட்டும் கோபுரம் போல் உயர்ந்த நெஞ்சும்' என்று தொடங்கும் எனது எண்சீர்ப் பாட்டும் பல்கலைக்கழக வாழ்த்துப் பாடலாக ஏற்றுக் கொள்ளப் பெற்றன. இப்பாடல்கள் என் நன்றியுணர்வுப் பதிகங்களாகும்.

கம்பர் என்ற முப்பொழிவுகளும் காப்பியவிலக்கியத்தின் முழுப் பார்வையை வலியுறுத்துவன. பெருங்காப்பியச் செய்யுட்களைத் தனிப்பாடற்றிரட்டாக மதித்துத் தொகுக்கும் குறும்பார்வை முழுவுண்மையங்களைப் புலப்படுத்த மாட்டாது. காப்பியங்களில் பல செய்யுட்களைத் தேர்ந்து பொதுவிலக்கியப் பரப்புக்காகத் தொகுத்துத் திரட்டு வெளியிடுவதையும், தனிப் பாடல்களில் இலக்கிய நயங் காண்பதனையும் நான் குறையாகக் கருதவில்லை. அவை ஒருவகை இலக்கியத் தொண்டுகள். எனினும் காப்பியம் என்ற இலக்கியவினத்தைப் பொறுத்தவரை, முழுப் பார்வையே உரிய நெறியாகும். ஆழ்ந்து நின்று தொடர்ந்து ஓடிக்கிடக்கும் கவியுள்ளத்தையும் அனைத்துப் பாடல்களிலும் பாய்ந்தோடும் உணர்ச்சியொருமையையும் கவிஞனின் நினைவாற்றலையும் அமைப்புக் கட்டுமானங்களையும்

காண்பதற்கு முழுப்பார்வையே தலைப்பார்வையாகும் என அறிக. முழுப்பார்வையம் என்ற இலக்கியக்கண் எனைக் காப்பியங்கட்கும் எம்மொழிக் காப்பியங்கட்கும் பொருந்தும் எனவும் உணர்க.

**'மயிலுடைச் சாய லாளை வஞ்சியா முன்னம் நீண்ட**
**எயிலுடை இலங்கை நாதன் இதயமாஞ் சிறையில் வைத்தான்.'**

*ஆரணிய. (3151)*

**'கள்ளிருக்கும் மலர்க்கூந்தற் சானகியை**
**மனச்சிறையிற் கரந்த காதல்**
**உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து**
**தடவியதோ ஒருவான் வாளி.'**

*உயுத்த. (9940)*

இதயமாஞ் சிறையில் சீதையை வைத்தான் இராவணன் என்ற ஆரணியக் கருத்துக்கும் மனச்சிறையில் கரந்த காதல் சுவடற்று அறவே ஒழிந்தது என்ற உயுத்தக் காண்டக் கருத்துக்கும் இடைப்பட்டு 6589 செய்யுட்கள் கிடக்கின்றன. இவ்வளவு பெரிய தொகைச் செய்யுட்களின் உள்ளோட்டமும் பயனும் இராவணன் தூய்மையாக்கம் என்ற முழுப் பார்வையினாற்றான் வெளிப்படும்.

இன்றைய கல்வியுலகிலும் ஆய்வுக்களத்திலும் முழுப் பார்வையம் என்ற திறப்பாடு கடைப்பிடிக்கப்படவில்லை. அதனால் பெருங்காப்பியர்களின் சிந்தனையோட்டங்கள் வெளிப்படாமல் திருமறைக்காடாயின. இதன் விளைவு என்ன? சிலப்பதிகாரம், பெருங்கதை, சீவகசிந்தாமணி, பெரியபுராணம், இராமாயணம் போன்ற பெருங்காப்பியம் இயற்றும் படைப்பாற்றலை இக்காலக் கவிஞர்கள் இழந்து வருகின்றனர். முழு நூற்படிப்பும் முழுச் சிந்தனையும் வாயாதபோது, தனிச்செய்யுள் வேட்கையும் சிந்தனைக் குறுக்கமும் மேலோங்கும் போது, அகல் நெடுங்காப்பியப் படைப்புக்குத் தக்க சூழ்நிலை எங்கே வரும்?

முன்னைக் காப்பியங்களை முழுப்பார்வையோடு திறனாடுவதற்கும், வருங்காலத்துப் பெருங்காப்பியப் பனுவல்கள் முழுப் பார்வையோடும் பிறப்பதற்கும் கம்பர் என்ற இத்திறனூல் தூண்டுகோலாகும் என்று நம்புகிறேன். இப்பொழிவுகளின் முழுநோக்கம் இதுவே.

மணந்த ஞான்றினும் மக்களை ஈன்ற ஞான்று வயாவும் வருத்தமும் உற்ற பெண்குலம் பெரிதும் உவக்கின்றது. அதுபோல

நூல்களை வரைந்தெழுதிய காலத்தைக் காட்டிலும் அவை முகவழகும் முதுகழகும் பெற்றுப் பதிப்புருவம் கொண்டபோது, எழுத்துக்குலம் செம்மாப்பு எய்துகின்றது; தம் கருத்துக்கள் மக்கட் சந்தையில் அங்காடும்போது எழுத்தாண்மையர் ஏதோ ஒருவகைக் கொடை உலகிற்குச் செய்தது போன்ற பெருமித உணர்வு பெறுகின்றனர். இவ்வுணர்வே எழுத்தின் உண்மைச் செல்வம்.

என் எழுத்துப் பலவற்றைச் செவ்வரிசைப்படுத்தி யான் கண்டு மகிழவும் மன்பதையினர் கற்று மகிழவும் பதிப்பித்து வரும் மணிவாசகர் பதிப்பகத்திற்கும் பதிப்புச் செம்மல் மெய்யப்பனார்க்கும் நன்றியுணர்வோடு வாழ்த்துக் கூறுகின்றேன். பதிப்பகம் பல பரிசு பெற்று நாடு மதிக்கும் நூலகமாக மேலும் வளர்ந்தோங்குக என்று வாழ்த்துவன்.

என் வரிசை நூல்கள் பிழைத்திருத்தம் இல்லாத பதிப்பாகச் செப்பமொடு வெளிவருதற்கு உறுதுணை செய்து வரும் என் வகுப்புத் தோழர் நண்பர் முன்னை முதல்வர் திரு. சி. செல்வத் தாண்டவர்க்கு நன்றி கூறல் நட்புக்கு மிகையாகி விடாதா? எனினும் நன்றியை உணர்கின்றேன்.

**வ.சுப. மாணிக்கம்**

# வ.சுப. மா. வாழ்க்கை வரலாறு

முனைவர் இரா. சாரங்கபாணி

அண்ணாமலை யெனப் பிள்ளைத் திருநாமங் கொண்ட மாணிக்கனார் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மேலைச் சிவபுரியில் 17.4.1917இல் சுப்பையா செட்டியார்க்கும் தெய்வயானை ஆச்சிக்கும் மகவாய்த் தோன்றினார். இளம்பருவத்திலே பெற்றோரை யிழந்த இவர் தம் பாட்டனாரால் புரக்கப் பெற்றார். பின் பர்மாவுக்குச் சென்று கடையிற் பணிபுரிந்தகாலை பொய் கூற வேண்டிய கட்டாய நிலை ஏற்படவே அப்பணி துறந்து தமிழ் பயிலத் தொடங்கினார். பண்டிதமணி கதிரேசனார் முதலியோர்தம் உதவியால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் வகுப்பிற் பயின்று முதன்மையாகத் தேர்ச்சியுற்றார். சில திங்கள் அப்பல்கலைக் கழகத்திலேயே ஆய்வு மாணவராகவிருந்து பின் ஏழாண்டுகள் அங்கேயே விரிவுரையாளராகப் பணியாற்றினார். அப்பொழுதே தனிமையாகப் படித்துப் பீ.ஓ.எல்., எம்.ஏ. பட்டமும் 'தமிழில் அகத்திணைக் கொள்கைகள்' பற்றி ஆய்ந்து பிஎச்.டி. பட்டமும் பெற்றார். பின்னர் 1948 தொடங்கி இருபதாண்டுகள் காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் முதல்வராகவும் பணிபுரிந்தார். மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போந்து, தமிழ்த்துறைத் தலைவராகவும் இந்திய மொழிப்புல முதன்மை யராகவும் தொண்டாற்றினார். பின் மதுரை - காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவியேற்றுத் தமிழியல் வளர்ச்சிக்கும் பிற அறிவியல் துறைகளின் வளர்ச்சிக்கும் வழிவகுத்துத் துணை நின்றார். திருவனந்தபுரத்தின் மொழியியற் கழக ஆய்வு முதியராக வேலை பார்த்தபோது தமிழ் யாப்பு வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதினார். தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் 'தொல்காப்பியத் தகைஞ'ராகப் பணி செய்ததன் பயனாகத் தொல்காப்பியத்துக்கு இவர்தம் புத்துரை விளக்கம் கிடைத்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பொன்விழாவில் இவர்க்கு டி.லிட். பட்டம் நல்கிச் சிறப்புச் செய்தது. குன்றக்குடி ஆதீனம் 'முதுபெரும் புலவர்' என்னும் சிறப்புப் பட்டத்தையும் மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை 'செம்மல்' என்னும் சிறப்புப் பட்டத்தையும் நல்கின. அரசு இவர் மறைவிற்குப் பின் 'திருவள்ளுவர் விருது' வழங்கிச் சிறப்பித்தது.

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொடக்க நிலையில் செயன் முறைகளை வகுக்க அமைக்கப் பெற்ற வல்லுநர் குழுவின் தலைவராகவிருந்து அதன் வளர்ச்சிக்கு வழி வகுத்தார். தமிழகப் புலவர் குழுவிற்கும் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்திற்கும் மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை கணேசர் செந்தமிழ்க் கல்லூரிக் குழுவுக்கும் தலைவராகத் திகழ்ந்து இவர்

ஆற்றிய பணிகள் மிகப்பல. 'காரைக்குடி தமிழ்ச் சங்கம்' நிறுவிச் சங்கவிலக்கிய வகுப்பு நடத்தியும் இளஞ்சிறார்க்கு 'அறநூல்கள் ஒப்பித்தல் போட்டி' வைத்துப் பரிசுகள் வழங்கியும் ஒல்லும் வகையெல்லாம் தமிழ்த் தொண்டு செய்தார். தில்லையில் அம்பலத் தின்கண் நின்று திருமுறைகள் ஓதி வழிபடப் பேராசிரியர் வெள்ளை வாரணனார் போன்றோரின் துணையோடு போராடி வாகை சூடினார்.

வள்ளல் அழகப்பரின் கொடைவளம் ஏத்திக் 'கொடை விளக்கு' என்னும் கவிதைநூல் படைத்தார். இவர்தம் தனிப்பாடல்களின் தொகுப்பு 'மாமலர்கள்' என்னும் பெயரில் வெளிவந்துள்ளது. இவர்தம் படைப்புக்களுள் வள்ளுவமும் தமிழ்க் காதலும் இரு கண்களெனப் போற்றத்தக்கவை. தொல்காப்பியக் கடல், திருக்குறட்சுடர், சங்கநெறி, காப்பியப் பார்வை, இலக்கியச் சாறு, தமிழ்க் கதிர், தலைவர்களுக்கு முதலியவை இவர்தம் பிற படைப்புக்கள். திருக்குறளை யாவரும் எளிதில் புரிந்துகொள்ள 'உரை நடையில் திருக்குறள்' என்னும் நூலை இயற்றியுள்ளார். மணிவாசகர் நூலக வெளியீடான 'கம்பர்' என்னும் இவரது நூல் தமிழக அரசின் பரிசு பெற்றது. தமிழ் யாப்பு வரலாறு, தமிழில் வினைச் சொற்கள், தமிழில் அகத்திணைக் கொள்கைகள் என்னும் நூல்கள் இவரால் ஆங்கிலத்தில் எழுதப் பெற்றவையாகும். மன்பதையின் முன்னேற்றங் கருதி இவர் படைத்த நாடகங்கள் மனைவியின் உரிமை, நெல்லிக்கனி, உப்பங்கழி, ஒரு நொடியில் என்பனவாம்.

மழலையர் ஆங்கிலப் பள்ளிகளைத் தமிழ்ப்பள்ளிகளாக மாற்றவேண்டும்; தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயிற்று மொழி தமிழாதல் வேண்டும் என்னும் கொள்கையினைப் பரப்பத் தமிழ்வழிக் கல்வி இயக்கங் கண்டு அதனைத் தமிழகம் எங்கணும் நடத்தி வந்தார். எழுத்துச் சீர்திருத்தம் என்னும் பெயரில் எழுத்து மாற்றம் செய்து தமிழுக்கு ஊறுசெய்தலாகாது என்பதனைத் தம் கட்டுரைவழி அறிஞருலகத்திற்கு உணர்த்தினார். தமிழ்வழிக் கல்வி என்பதும் எழுத்துச் சீர்திருத்தம் தேவையில்லை என்பதும் அன்னாரின் இறுதிக் குறிக்கோளாக அமைந்தன.

இவர் எளிய தோற்றமும், உயரிய நோக்கமுங் கொண்ட பழுத்த தமிழறிஞர். சிறந்த சிந்தனையாளர், தனித்தமிழ் இயக்கத்திற்குத் தாமே புதிய சொற்களைப் படைத்து எல்லா நிலைகளிலும் எங்குந் தமிழ்வளர ஓய்வென்பதறியாது உழைத்த உரஞ்சான்ற வித்தகர். அனைத்துக்கும் மேலாகப் பண்புவழி உலகினை நடத்தத் தம் மதிநுட்பத்தையும், நூற்புலமையையும் அசைவிலா ஊக்கத்தோடு பயன்படுத்தி வந்த சான்றோர். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில், இத்தலைமுறையில், பல நிலையினும் சிறந்தோங்கித் தமிழ்ப் பணிக்காகவே வாழ்ந்து பண்பின் திருவுருவாகத் திகழ்ந்த மூதறிஞர், செம்மல் மாணிக்கனார் 24.4.89இல் எதிர்பாரா வகையில் மறைவெய்தியது தமிழன்னையின் தவக்குறையேயாம்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | காப்பியப் பார்வை | 15 |
| 2. | காப்பியக் களங்கள் | 55 |
| 3. | காப்பிய நேர்மை | 101 |

# 1. காப்பியப் பார்வை

பேராசிரியப் பெருமக்களே!

மூதறிஞர் சேதுப்பிள்ளையவர்களின் கொடையால் நிகழும் சொற்பொழிவுத் தொடருக்குப் பழைய மாணவனாகிய என்னை இவ்வாண்டு நம் பல்கலைக்கழகம் அழைத்துப் பெருமைப் படுத்தியுள்ளது. சேதுப்பிள்ளையவர்கள் சொல்லின் செல்வர் என்ற புகழ்ப்பெயர் கொண்டவர். சொல்லின் செல்வன் என்ற தொடரைச் சேதுப்பிள்ளைக்குப் பிற்காலத்தார் வழங்குமாறு ஆயிரம் ஆண்டுகட்குமுன் சொல்லி வைத்த காப்பியப் புலவர் எவரோ அவரே இம்மூன்று நாளும் என் சொற்பொழிவின் பொருளாவார். 'இல்லாத உலகத்து எங்கும் ஈங்கிவன் இசைகள் கூரக், கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி, சொல்லாலே தோன்றிற் றம்ம யார்கொல் இச்சொல்லின் செல்வன்' என்று இராமபிரான் என்றும் வாழ் அநுமனுக்குக் கொடுத்த பெயர் இன்றும் வழங்கக் காண்கின்றோம்.

இச் சொற்பொழிவைத் தொடங்கும் இத் தொடக்கத்து, இருபத்தைந்தாண்டுகட்கு முன் இப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் புகுமுகவகுப்பு நான் படிக்கத் தொடங்கிய போது, பிள்ளையவர்கள் எழுதிப் பாடமாக இருந்த வீரமாநகர் என்னும் நூலைப் படித்த நினைவும், ஒரு சடையும் திரிசடையும், தென்னிலங்கைத் தெய்வம், சிறையிருந்த செல்வி என்பன போன்ற அழகுத் தொடர்களின் நினைவும் கண்முன் ஓடுகின்றன. சொற்பொழிவுத் தொடரில் இவ்வாண்டு ஐந்தாவதாண்டு. ஐந்தாமாண்டில் இராமாயணம் பேசுவதில் ஓர் எண்ணுப் பொருத்தம் இருக்குமோ என்று கருதினாலும் கருதலாம். ஏன்? 'அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி, அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியற்காக ஏகி, அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலா ரூரில், அஞ்சிலே ஒன்றை வைத்தான்' என எல்லாம் அஞ்சு அஞ்சாக

இராமாயணச் சொல்லின் செல்வனுக்கு அமைந்திருப்பதைக் காண்கின்றோம்.

## இராமாயணத் தலைப்பு

இவ்வாண்டு கம்பர் பற்றி உரையாற்றுவோம் என்று எண்ணியபோது, சேதுப்பிள்ளையின் பட்டப்பெயரோ, 'வீர மாநகர்' படித்த நினைவோ, அஞ்சு என்ற சிறுநயப் பொருத்தமோ எனக்குப் படவில்லை. இதற்குமுன் நடந்த சொற்பொழிவுத் தலைப்புக் களைக் கேள்விப் பட்டேன். இளங்கோ பேசப்பட்டார், வள்ளுவர் பேசப்பட்டார், கொங்கு வேளிர் பேசப்பட்டார் என்பதனை அறிந்து, இது காறும் பேசப்படாத புலவர் பெருமகனாகிய கம்பரைப் பற்றி இவ்வாண்டு உரை நிகழ்த்தலாமே என்று எண்ணினேன். அதற்கு அப்புறந்தான், சொல்லின் செல்வராம் சேதுப்பிள்ளையின் கொடை நிதியில் கம்பரைக் குறித்துப் பேவதற்குரிய பல பொருத்தங்கள் மேலே காட்டியவாறு எனக்குத் தோன்றின.

சொற்பொழிவுகள் பற்றி நாட்டில் சில தவறான போக்குகளும் பிறழ்ச்சியான மனப்பான்மைகளும் காணப்படுகின்றன. ஒருசிலர் ஒருசில நூல்களையே அடிக்கடி பேச்சுக்கு மேற்கொள்வதால், ஏனை நூல்களிடத்தும் அந்நூல்களைச் செய்த புலவர்களிடத்தும் அவர்கட்கு வெறுப்புண்டோ என்றுகூடக் கருதிவிடுகின்றார்கள். இக்கருத்துக்கு ஒருசிலர் இடமும் கொடுத்து விடுகின்றனர். பொதுவாக, பேச்சுப் புலவர்களின் பண்பு எப்படியிருக்க வேண்டும்? கேட்பார் மனப்பக்குவம் எப்படியிருக்க வேண்டும்? இலக்கிய வரலாற்றில் வரும் எந்நூல்களையும் பற்றியும் பேசுவதற்குப் புலவனுக்கு உரிமையும் உண்டு; கடமையும் உண்டு. ஒரு சில நூல்களில் விருப்பம் மிகுதியாக இருந்தாலும், புலவனுக்கு எந்நூல் மேலும் பகை கூடாது. ஒவ்வொரு புலவனும் எல்லா நூல்களையும் பேசிக் கொண்டு திரிய வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் தவறாகும். தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிந்தாமணி போன்ற பழம்பெரும் நன்னூல்கள் மக்களிடத்து மிகுதியும் பரவவில்லை என்று கருதிச் சில பெருமக்கள் அந்நூல்களையே திரும்பத் திரும்பப் பேசலாம், எழுதலாம். இது வரவேற்கத்தக்க போக்கே. சிலப்பதிகாரம் வல்லார், பெரிய புராணம் வல்லார், இராமாயணம் வல்லார் என்றாங்குச் சிலர் தனி நூற்புகழ் பெறக் காண்கிறோம். இதுவும் வரவேற்கத்தக்க போக்கே. ஆயின் எந்த ஒரு பெருநூலின் நற்படிப்புக்கும் நல்லாராய்ச்சிக்கும் ஆழ்ந்த அறிவுக்கும் வேறு பல நூல்களின் படிப்பு கட்டாயம் வேண்டும். இன்றேல் அந்த ஒரு நூற்படிப்பும் தெளிவாகாது. பன்னூல் கற்று ஒரு நூலிற் படிவானுக்கு அறிவு விரிவும் அறிவுக் கூர்மையும் அறிவோட்டமும் இருக்கும்.

இராமாயணம் எல்லா வகையாலும் பெருநூல். 'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்றபடி கம்பரின் காப்பியம் கல்விப் பெருங்காப்பியமாகவே இலங்குகின்றது. சிலப்பதிகாரம் பெருநூல்தான் எனினும் அளவிற் சிறுநூல்; அச்சிற் சிறுநூல். 3000 செய்யுட்கள் கொண்ட சீவகசிந்தாமணி இராமாயணத்தின் இரு காண்டத்துக்கே அளவில் நிகராகும். மணிமேகலை இராமாயணத்தின் சிறு படலங்கள் அளவே உடையது. பெரியபுராணம் அதன் இரண்டு காண்டம் அளவினதே. தமிழி உள்ள பல பெருங்காப்பியங்களைக் காட்டிலும் இராமாயணத்தின் கனம் கூடுகின்றது. கூடிய கனத்துக் கேற்பக் கூடுதலான காப்பியக் குணங்களும் உள்ளன. சொருணம்மாள் சொற்பொழிவில், முன்னர்ப் பேசப்படாத நூல் என்று இராமாயணத்தை மேற்கொண்டேன். கொண்டபின், எவ்வளவு பெருநூல், நூல் நலங்கள் எவ்வளவு புதைந்து கிடக்கும் நுண்ணூல், எவ்வளவு தலைப்புக்களுக்கு உரிய விரிவுநூல். இந்நூலை மூன்று தலைப்பில் மூன்று மணியளவில் எங்ஙனம் முடியப் பேசுவது என்ற அச்சம் உண்டாயிற்று. இராமாயணம் அஞ்சாப் பாத்திரங்கள் பேசும் அதிராக் காப்பியமாதலின், அதனைப் பேச அஞ்ச வேண்டியதில்லை யல்லவா?

தலைப்பின்மேற் சொற்பொழிவதற்குமுன், என்னை இவ்வாண்டுப் பொழிவுக்கு அழைத்த நம் பல்கலைக் கழகத்தார்க்கும் நிறுவிக் காத்துவரும் அரசத் தோன்றலுக்கும் நன்றியுடையேன். கேட்கக் குழுமியிருக்கும் பேராசிரியப் பெருமக்கட்கும் மாணவ இளையர்க்கும் நன்றியேன். நன்றி கூறக்கேட்டதும் பேச்சு முடியப் போகிறதோ என்று சிலர் நினைக்கலாம். சில கூட்டத்து நன்றிகூறத் தொடங்கும் போது பலர் இருப்பதில்லை. நன்றி கூறுவதைக் கேளாத குற்றத்துக்கு அவர்கள் ஆளாக வேண்டாமேயென்று நன்றிக்கடன் மொழிந்து சொற் பொழியத் தொடங்குகின்றேன்.

## திறனாய்வு

'காப்பியப் பார்வை' என்ற தலைப்பில் இன்றும், 'காப்பியக் களங்கள்' என்ற தலைப்பில் நாளையும், 'காப்பிய நேர்மை' என்ற தலைப்பில் நாளை நின்றும் பேசுவதெனை என் பொழிவுகளை வகுத்துக் கொண்டுள்ளேன். காப்பியப் பார்வை என்னும் தலைப்பு பொதுவாக இருந்தாலும் கம்பர் பெருமானின் இராமாயணக் காப்பியமே இங்கு ஆராய்வதற்கு உரியது.

காப்பியம் என்ற சொல்லின் பொருள் என்ன? காப்பிய இலக்கணம் என்ன? நம்நாட்டவர், மேனாட்டவர் கண்ட இலக்கணங்கள் என்ன? மேனாட்டவர்தம் இலக்கணம் நம் காப்பியங்கட்கு எத்துணையளவு பொருந்தும்? இவ் வினாக்களை எழுப்பிக்கொண்டு, விடை விளக்கம் கூறிக்கொண்டிருந்தால் கம்பரிடத்து வருவதற்கு மணிகள் பல ஆகும். சொற்பொழிவுக்கு இடையிடையே அவற்றைத் தொட்டுச் செல்வதன்றித் தொடக்கத்து விரித்துக் கொண்டிருப்பது, அவைக்குச் சுவைபடாது. நம் முன்னோர் நடைமுறையிற் கொண்ட ஓர் இலக்கிய வுண்மையைத் திறனாய்வாளர்கள் இன்று அழுத்தமாகக் கூறுகின்றனர். நாம் உடலுக்குச் சட்டை தைக்க வேண்டுமெனின் நம் உடம்பை அளந்து பார்க்க வேண்டுமே தவிர, நம் அரிய பெரிய நண்பனாயினும் அவன் உடலளவு நமக்கு ஒத்துவருமா? இரட்டைப் பிள்ளைகளுக்குக்கூடச் சட்டையளவு தனித்தனிதானே பார்க்க வேண்டும். ஒரு காப்பியத்தைப் படித்து ஆராய முனையும் போது, அதற்குத் திறன்கோல் அதனினின்றே வடிக்க வேண்டும். இன்னொரு காப்பியக் கோலைக் கைக்கொள்ள முற்படுவது நெறிப்பிசகாகும். 'இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்புக' என்று அளவெடுக்கு முறையைத் தமிழ்த் திறனிகள் அழகாக மொழிந்தள்ளனர். தன்மை மொழியியல் என்பது மொழியியல் வகைகளில் ஒன்று. ஒரு மொழியின் ஒலி, சொல், தொடரமைப்புக் கூறுகளைக் கிடந்தபடி கண்டு அதனளவில் நின்று ஆராய்வதே இம்மொழியியலின் நோக்கம். இது போலவே இலக்கியத் துறையிலும் தன்மைத் திறனாய்வு என்னும் நேர் வகையை நாம் வளர்க்க வேண்டும். ஒரு நூலின் தன்மையை மற்றொரு நூலுக்குச் சார்த்தி யளக்கும் புறவளவு உண்மையை மறைத்து விடும்.

## ஒப்புமை முறை

நூலுக்கு நூல் ஒற்றுமை வேற்றுமை காண்பது இன்று ஒருவகை இலக்கியப் போக்காக ஒருசார் அறிஞர்களிடைப் பரவிவருகின்றது. இது பெருமையாகவும் கருதப்படுகின்றது. ஆயினும் ஒரு நூலின் ஆற்றல் ஒப்புமை முறையால் வெளிப்படுவதில்லை. இரு மனிதர்களை அவர்களின் குணங்களை ஒப்பிட்டுக் கூறுவதில் எவ்வளவு தொல்லையுள்ளது? ஒருவர் பண்பிற் சிறந்தவர், மற்றவர் அறிவிற் சிறந்தவர் என்று பாராட்டுவதாக வைத்துக் கொள்ளுவோம். இப்பாராட்டு இருவருக்குமே சினத்தை உண்டாக்கலாம். இருவரும் பண்பிலும் அறிவிலும் நிகரானவர் என்று புகழ்ந்தாலும், தன்னை ஏற்றமாக உரைக்கவில்லையே என்று அவருள் ஒருவர் கசக்கலாம். ஒரு மேடையில் உள்ள பலரை அவர்

மனம் நிறையவும் கேட்பார் மனம் குளிரவும் தன் மனம் ஒப்பவும் பாராட்டி விடுதல் என்பது உலகில் அரிய காரியம். ஒற்றுமை வேற்றுமை நெறி தொடக்கத்து இலக்கியப் பூசலாய், எழுத்துப் பூசலாய்ச் சில சமயங்களில் மன்பதைப் பூசலாய் வளர்ந்துவிடப் பார்க்கின்றோம்.

ஒரு மொழியில், ஒரு காலத்தில், ஒரு இனவாயத்தில் தோன்றிய இலக்கியங்களுக்குள்ளேயே ஒப்புமை காண்டல் சரிப்படவில்லை. ஒப்புமை காட்டினால், அவரைப் பார்த்து எழுதினார் இவர் என்ற இகழ்வுணர்ச்சி பரவுகின்றது. வேற்றுமை காட்டினால் ஏற்றுத் தாழ்வு பிறக்கின்றது. இந்நிலையில் மொழிமாறு, இடமாறு, நாகரிக மாறான கிரேக்கம், இலத்தீன், பிரான்சு, ஆங்கிலம் முதலிய இலக்கியங்களோடு நம் இலக்கியங்களை உராய்வதும் வெளியிலக்கியங்களை இலக்கியக் காட்டியாக மேற்கொள்வதும் மிகவும் கடைபோகாது என்பது வெளிப்படை. சிலப்பதிகாரத்துக்கும் இராமாயணத்துக்கும், இராமாயணத்துக்கும் பெரியபுராணத்துக்கும், பெரியபுராணத்துக்கும் சிந்தாமணிக்கும் இவ்வாறே ஒரு மொழி ஒரு மன்னாய ஒரு நாகரிகத்திற்கு உட்பட்ட காப்பியங்களுக்குள் ஒப்புமை காட்டிப் பேசுவார் எழுதுவார் படும் வெறுப்புக்களை நாம் அறியாதவர்கள் அல்லர். ஒப்புமை நெறியால் ஏதோ ஒரு நூல் குறைவாகத் தோன்றுகின்றது. இஃது ஓர் இலக்கிய நெறி என்று எடுத்துக் கொள்வார் அரியராக உளர்.

ஓர் ஆசிரியன் எழுதிய ஒரு நூலுக்குள்ளேயே ஒப்புமை நெறி புகுந்து விட்டது. இராமாயணத்தில் சுந்தரகாண்டமே சிறந்தது என்று அதனையே பூச்சாத்தித் தொழுது முன் படிப்பவர் பலர். பாலகாண்டம் தேவையில்லை என்று கூறுவாரும் உளர். ஒப்புமை நெறி அறவே கூடாது என்பது என் கருத்தன்று. எந்த நெறியும் ஒரு நூலின் உண்மையை, அகத்தன்மையை வெளிக்கொணர்தற்குப் பயன்படவேண்டும். அப்பயன் வரும் அளவிற்கு ஒப்புமுறையை ஆளலாம். வெறும் ஒப்புமை நோக்கம் கல்வி விளம்பரம் ஆகுமேயன்றி நூலாசிரியன்தன் கருத்து வெளிப்பாடு ஆகாது.

வெவ்வேறு காப்பியங்கள் எழும்போது வெவ்வேறு புதுக் கூறுகள் வருதல் இயல்பு. காப்பியத் தொடக்கம் எப்படி இருக்க வேண்டும்? பிறப்பு முதல் தொடங்குவதா? வேறு வகையாகத் தொடக்கஞ் செய்யக் கூடாதா? சிந்தாமணி சீவகன் பிறப்பிலிருந்தா தொடங்குகின்றது? சீவகன்தன் தந்தை பிறப்பிலிருந்தே தொடங்குகின்றது என்று சொல்லலாம். சிந்தாமணிக்கு மணநூல் என்று ஒரு பெயர் உண்டு. அது சீவகன் மணவினைகளை மட்டும் கூறவில்லை; அவன் தந்தையின் மணத்தையும் கூறுகின்றது. நாமகள்

இலம்பகம் என்னும் முதலிலம்பகம் சச்சந்தன் விசயையை மணந்து இன்புற்று இன்ப வீழ்ச்சியால் ஆட்சியை அமைச்சன் கையில் ஒப்பித்துப் பட்ட அவலநிலைகளை விரித்துப் புனைவதைப் பார்க்கும் போது, அதுவே ஒரு காப்பியமாக மிளிர்கின்றது. அது மட்டுமன்று; பல்வேறு சுவைகளையும் அவ்வொரு இலம்பகத்திலே கற்குமளவுக்கு அவ்விலம்பகம் தன்னிறைவு உடையதாகவும் விளங்குகின்றது.

மணிமேகலைக் காப்பியம் மணிமேகலையின் பிறப்பு முதலாக வாழ்வைப் பேசவில்லை. அவள்தன் துறவுச் சூழ்நிலையில் தொடங்குகின்றது. பிற காப்பியங்கள் துறவாகக் கொண்டு போய் முடிக்கும் அவை போலாது, துறவாகத் தொடங்குதலின், மணிமேகலைக் காப்பியம் 'மணிமேகலை துறவு' எனப் பெயர் பெறுகின்றது. 'மாவண் தமிழ்த்திறம் மணிமேகலை துறவு' என்பது பதிகம். சிலப்பதிகாரம் கண்ணகி கோவலன் திருமணத் தொடக்கமாக மங்கல வாழ்த்துப் பாடலாக எழுகின்றது. பெரிய புராணக் காப்பியம் தனிப்போக்கு உடையது. பல தனித் தலைவர்களின் அரிய வாழ்வைப் புனைந்து காட்டுவது. யார் பிறப்பை, யார் வாழ்வை முன் கூறுவது? திருத்தொண்டத் தொகை யருளிய சுந்தரரின் நாட்டையும் ஊரையும் பிறப்பையுமே முன்சுட்டிக் காப்பியம் நடத்துகின்றார் சேக்கிழார். இவ்வாறு தமிழ்க் காப்பியங்களிடை தொடக்க வேறுபாடுகள் இருத்தலின் இப்படித்தான் தொடங்க வேண்டுமென்று நேர்கோடிட்டாற்போல ஒரு வரம்பு விதிக்க முடியுமா? பெரும் புலவன் செய்யும் படைப்புக்கு அவன் கொள்வதே விதி. வல்லான் வகுத்ததே வாய்க்கால். தன் கருத்துக்கும் கற்பனைக்கும் கதைக்கும் எதனைத் தொடங்கினால், எதனை வளர்த்தால், எதனைக் கற்பித்தால் சிறக்கும் என்று காணும் உரிமையைப் புலவனுக்கு விட்டு விட வேண்டும்.

## முழுப்பார்வை

இராமாயணக் காப்பியத்துக்குப் பாலகாண்டம் தேவையான பகுதியா, என்று நல்லாசிரியர் சிலர் ஐயப்படுகின்றனர். இவ்வையம் மேனாட்டுக் காப்பிய முறையொடு ஒத்துப்பார்ப்பதால் தோன்றுகின்றது. இராவணன் வதையே இராமாயணத்தின் கருத்து எனவும், இக்கருத்து நிறைவேறுவதற்க இராமன் சீதையோடு காடு செல்வதே விதை எனவும், நாடு துறத்தலைக் கூறும் அயோத்தியா காண்டமே உண்மைக் கதை துவங்கும் காண்டம் எனவும், காப்பியத்தோடு பாலகாண்டத்துக்கு அவயவ சம்பந்தம் இல்லை எனவும் வ.வெ.சு. அய்யர் விளக்குவர். இராமன் பிறப்பையும்

திருமணத்தையும் விரித்துக்கூறும் பாலகாண்டம் இன்றியும் இராமாயணம் எழுதலாம் என்பது அவர் குறிப்பு. கிட்கிந்தா காண்டம் கிளைக் கதை கூறுவது எனவும், வாலிவதை கூட இராமாயண நோக்கத்துக்கு அவயவ சம்பந்தம் இல்லையாதலின் அதனை எடுத்து விட்டாலும் கதைக்கு யாதொரு ஊறும் வராது எனவும் ஆராய்வர் வ.வெ.சு. அய்யர். இவ்வகை ஆராய்ச்சிகள் பிற நாட்டுக் காப்பிய இலக்கணத்தை முன் மாதிரியாகக் கொள்வதால் வந்த விளைவுகள்.

திறனாய்வு என்பது ஒப்பாய்வென்று, உள்ளாய்வு, புறனாய்வென்று, அகனாய்வு. இராமாயணப் பெருங்காப்பியம் வடிக்க முனைந்த கம்பர் தம் காப்பியத்தில் என்னென்ன கூறுகள் எவ்வாறு எவ்விடத்து அமைய வேண்டுமென்று கருதினார். அவர் காட்டுகின்ற காப்பிய இலக்கணங்கள் என்ன, என்று அந்நூலுக்கு உரிய தனியளவு கோலைக் கண்டுபிடித்து உலகிற்குக் காட்டுவதே நம் நோக்கமாதல் வேண்டும். வ.வெ.சு. அய்யர் பன்மொழிக் காப்பியங்களைக் கற்றவர். கம்ப இராமாயணத்தைத் தலையான உலகக் காப்பியம் என்று மதிப்பவர். வான்மீகியின் முதனூலினும் வழிநூலான தமிழ் இராமாயணம் சிறந்த படைப்பு என்று துணிவாக மொழிபவர். சிறந்த திறனாய்வு இராமாயணத்துக்குச் சுருக்கமாக எழுதியவர்; எனினும் பன்மொழிக் காப்பிய அறிவு அவரை ஒப்புமை காணும் கண்ணோட்டத்தில் தள்ளிவிட்டது. அதனின்று அவரால் மீள முடியவில்லை.

ஒரு காப்பியத்துக்கு முதலாவது காண வேண்டுவது தன்மைநெறி என்னும் தனிநெறி. அதன் பின் ஒப்புமை நெறி கடைப்பிடிப்பது ஓரளவு சில உண்மை காண உதவும். அவயவ சம்பந்தத்திற்கு அதாவது உறுப்புக்களின் இணைந்த ஒருமைத் தொடர்புக்கு அது தேவையில்லை. இது தேவையில்லை என்று காண்டங் காண்டமாக, கதை கதையாக ஒதுக்கிக் காட்டுவது எங்குப்போய் முடியுமோ? அவயவ சம்பந்தம் என்பதுதான் என்ன? அச்சம்பந்தம் எத்துணையளவு இருத்தல் வேண்டும்? விட்டு விட்டு இருக்கலாமா, விடாதே இருக்க வேண்டுமா? எது எதற்கு அவயவம்? எது அவயவம் இல்லை? இவற்றிற்கு ஒரு தெளிவு செய்து கொண்டன்றோ ஒதுக்கம் செய்ய வேண்டும். இராமன் சீதையொடு காடேகுவதைக் கூறும் அயோத்தியா காண்டம் இயைபுடையது என்றால், அவள் அவனை உலகம் பாராட்ட வில்லொடித்து மணந்ததைக் கூறும் பால காண்டம் இயைபுடையது ஆகாதா? சிலப்பதிகாரத்துக்குக் கோவலனும் கண்ணகியும் மதுரைக்குப் புறப்படுவதைப் பேசும் நாடுகாண் காதைதான்

ஒருமையியைபு உடையது எனவும் முன்னர்க் கூறும் திருமண முதலிய ஒன்பது காதைகளும் காப்பியத்துக்குப் புறமாவன எனவும் கூறலாமா?

தஞ்சைப் பெருவுடையார் கோபுரம் கட்டுவதற்கு இராசராசசோழன் சாரப்பள்ளம் அமைத்தாற்போல, முக்கியமான இடங்களைக் கொண்டுவந்து காட்டுவதற்குமுன் முன்புனைவு செய்து கொண்டு போதல் புலவன் தொழில். இல்லாவிட்டால் சிறந்த இடம் சிறப்பாகப் படா தொழியும். சிறப்பு என்பது பலவாறு ஒட்டிய சூழ்நிலையைப் பொறுத்தது. சூழ்நிலையைச் சிறப்பாகப் புனைந்து காட்டாவிட்டால் சுவை தோன்றாது; சுவை முரண் தோன்றினாலும் தோன்றி விடும். ஆதலின் தள்ளுவது கொள்ளுவது என்ற நிலையில் வெட்டொன்று துண்டிரண்டு என்ற துடிப்பில் காப்பியப் பார்வை பாராது, நூல் எழுதிய புலவன் பார்வை முதற்கண் நமக்கு வேண்டும். அப்பார்வை - நான் இன்றைய முதற் சொற்பொழிவில் வலியுறுத்த விரும்பும் பார்வை ஏதுவென்றால் முழுப் பார்வையாகும். புலவன் படைப்பு முழுவதையும் உளங்கொண்டு பார்க்கும் ஒருமைப் பார்வையே நான் வேண்டுவது. ஒப்புப் பார்வையும், நூலுக்குள் ஒரு சில செய்யுளைக் காணும் உதிரிப் பார்வையும் காப்பியப் பார்வையாகா.

## துண்டுப் பார்வை

தமிழ்க் காப்பியங்களில் மக்களிடைப் பரவி வருகின்ற, பலரால் பரப்பப்படுகின்ற ஒரு காப்பியம் இராமாயணம். இப்பரப்பைக் கண்டு ஒருபால் மகிழ்கின்றேன்; ஒருபால் கவல்கின்றேன். இராமாயணத்தில் நல்ல பாடல்களைத் திரட்டிப் பல பதிப்புகள் வெளியிடுகின்றனர். தனித் தனிச் செய்யுட்களில் நயங் காண்கின்றனர். பல தனிப் பாடல்களை வரப்பண்ணுகின்றனர். இவ்வகையிலேனும் இராமாயணம் பரவுகின்றது கண்டு மகிழ்கின்றோம். இன்றுள்ள மக்கள் தம் வாழ்க்கை நிலையில் உதிரிப் பாடல்களாகவேனும் இலக்கிய அறிவு பெற்றாற்போதும் என்று எண்ணுகின்றோம். முழுமையாகப்படிக்க வாழ்க்கைப் போராட்டம் இடம் கொடுக்கவில்லை; இடம் கொடுக்குமளவில் சில பாடல்களையேனும் தெரிந்து கொள்ளட்டும் என்று அமைதி யடைகின்றோம். ஆனால் இத்துண்டுப் பார்வை காலப்பார்வையாகுமே யன்றிக் காப்பியப் பார்வையாகாது. முழுப்பார்வை பாராவிட்டால் கம்பரின் அறிவுப் பெருங்கூறுகள் ஒளிந்து விடுகின்றன. அவர் அமைத்த நலப்பாடுகள் புலப்படா தொழிகின்றன. காப்பியம் பரவி வருகின்ற இக்காலத்தில் உரிய பார்வையோடு மக்களிடம் பரப்பாவிட்டால், படிப்பவர்களும்

இராமாயணத்தைக் காப்பிய இலக்கியம் என்ற கண்ணோடு பாராவிட்டால், கம்பரை இழக்கின்றோம்; கம்பர் காட்டும் உண்மையை இழக்கின்றோம். மேலும், காப்பியங்களை முறையோடும் முழுமையோடும் கற்காவிட்டால் புதிய படைப்புக்கள் ஒருமொழிக்கு எவ்வாறு தோன்றும்?

ஓரளவாயினும் முழுமை யுணர்ச்சியை வளர்க்க வேண்டும். பாடம் வைக்கும்போது ஒரு படலத்தையேனும முழுமையாக வைக்கக் கூடாதா? 50 செய்யுள் 100 செய்யுள் என இராமாயணத்திலிருந்து வைத்தால் அந்த ஐம்பதும் நூறும் தொடர்ந்த பாடல்களாக இருக்க வேண்டும் என்பது என் ஆசை. அப்போதுதான் காப்பியவுணர்வு மாணாக்கர்களுக்குத் தோன்றும். நல்ல பாடல்கள் என்று தொகுத்தால் கம்பரின் மனவோட்டம் விட்டுக்காட்டும். 'தோள்கண்டார் தோளே கண்டார்' என்றபடி, தனிப்பாடலைக் கண்டார் தனிப்பாடலையே கண்டார், படலங்கண்டார் படலத்தையே கண்டார் என்ற குறுநிலைக்குக் காப்பியம் குறைந்து வருகின்றது.

இலக்கியம் பல வகைப்படும். வகைக்கேற்ற உணர்ச்சி முகிழ்க்க வேண்டும். சிறுகதை படிப்பார்க்குச் சிறு கதையுணர்வும், புதினம் படிப்பார்க்கப் புதினவுணர்வும் நாடகம் படிப்பார்க்கு நாடகவுணர்வும் தோன்றுதல் போல் காப்பியம் படிப்பார்க்குக் காப்பியவுணர்வும் தோன்ற வேண்டும். சிறப்புவகை யுணர்வு தோன்றாது இலக்கியப் பொதுவுணர்வு மாத்திரம் தோன்றுவது இலக்கிய வளர்ச்சிக்கு உரஞ் செய்யாது. ஏதோ பாடபேதம் பார்க்கின்றவர்கள், பேதப் பதிப்பு வெளியிட ஆராய்பவர்கள் ஓரளவு முழுப்பார்வை நாடுகின்றனர். பலர் பார்வை படலப் பார்வையாக - உதிரிப் பார்வையாக - அங்கொன்று இங்கொன்றும் பார்வையாகப் போய்க்கொண்டிருக்கின்றது. கம்பர் பரவுகின்றார் என்றால் 'க' பரவுகின்றது, 'ம்' பரவுகின்றது, 'ப' பரவுகின்றது, 'ர்' பரவுகின்றது என்று வேடிக்கையாகச் சொல்லத் தோன்றுகின்றது. முழுப்பார்வை - காப்பியத்தின் இலக்கணமான தொடர்புப் பார்வை வரவரக் குறைந்துபோயிற்று என்பது மட்டுமன்று; தொடர்பான முழுப் பார்வையே வேண்டியதில்லை என்ற அளவிற்குக்கூடப் போய்விட்டோம். இது கவலுதற்கு உரிய இலக்கியப் போக்கல்லவா?

முழுப்பார்வை வளரவேண்டுமெனின், ஒரு நூலை முழுமை முழுமையாக, தொடர்பு தொடர்பாகச் சில முறையேனும் படிக்க வேண்டும். இக்காலத்து ஒரு நூல் கற்பவர்கள் படிக்கும்போதே நல்ல பாடல்கள் என்று தாம் தாம் கருதுவனவற்றைக் குறித்துக் கொண்டு

தொகுத்துக் கொண்டு நூலை விட்டுவிடுகின்றார்கள். இது முற்றும் தகாது என்பது என் கருத்தன்று. இஃது ஒருவகைப் படிப்பு முறை என்றுகூட ஒத்துக் கொள்வேன். இப் படிப்பு முறையாவது பெரும்பாலார்பால் வளரட்டும் என்று கூட வாழ்த்துவேன். எனினும் காப்பியவுண்மையை எதற்கும் பலி கொடுக்கக் கூடாது. தனி மரம் எவ்வளவு வானுற ஓங்கி வளர்ந்திருந்தாலும் தோப்பாகாது. எவ்வளவு நயப் பாடலாக இருந்தாலும் தனிப் பார்வை காப்பியப் பார்வையாகாது. அந் நயப்பாடலும் காப்பியத்தின் உறுப்பெனக் கொண்டு தொடர்பழகு காணவேண்டும். காணும் சூழ்நிலை, காணத்தக்க காலவமைதி, காணவல்ல அறிவுக் கூறு நமக்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும் காப்பியத்தைக் கற்கும் நெறி தொடர்புநெறி என்ற திறனை நாம் உடன்பட வேண்டும்.

## இராமாயணப் பதிப்பு

முழுப்பார்வை செலுத்தாமையால் இராமாயணத்தின் காப்பிய நலன்களை நாம் காணாது இழப்பது ஒரு புறம் இருக்க, இராமாயணத்துக்குத் தூயபதிப்பு இன்மையினாலும் சில கேடு சூழ்கின்றோம். இப்போது போகின்ற போக்கிற் சென்றால், இன்னும் இராமாயணத்துக்கு என்னென்ன தோன்றல் திரிதல் கெடுதல் விகாரங்கள் வருமோ என்று அஞ்சுகின்றேன். இப்படித்தான் கம்பர் பாடியிருக்க வேண்டும் என்று சொற்களையும் அடிகளையும் புதிதுபுதிதாகப் படைத்து நுழைத்த பதிப்புக்களைப் பார்க்கின்றோம். இராமாயணம் பாடமாக இல்லாத வகுப்புக்கள் இல்லை. அப்பாடப் பதிப்புக்களில் அடிக்கடி சொற்கள் மாறுகின்றன. செய்யுட்களை அக்கக்காகப் பிரித்து இராமாயணப் பதிப்புகள் மலிவாக நலிவாக வெளிவருகின்றன. இப்பிரிவுப் பதிப்புக்களில் உள்ள அறியாப் பிரிவுகள் பல. மேலும் பாடல் பாடலாகத் தள்ளுபடிகள் வேறு செய்யப்படுகின்றன. கவிதையோட்டம் தடைப்படுமாறு ஏராளமான குறியீடுகள் இடையிடையே மடுக்கப்படுகின்றன. இவை கம்பரின் கருத்தோட்டத்தையும் தடைப்படுத்தி விடுகின்றன என்பதைப் பலர் உணரவில்லை.

இராமாயணச் செம்பதிப்பு ஒன்று உருவாக்குவதற்கு நம் பல்கலைக்கழகம் அரிய முயற்சி பல்லாண்டுகளாகச் செய்து வருவது கண்டு மகிழ்கின்றேன். அறிஞர் குழு அமைத்து நூற்றுக் கணக்கான ஏட்டுச் சுவடிகளையும் பதிப்புக்களையும் ஒத்துப் பார்த்துச் செலவு பாராது பெரும் பெரும் பதிப்புக்களை வெளியிட்டு வருகின்றது. பாட பேதங்கள் வரம்பின்றி மண்டிக் கிடத்தலின்,

ஒவ்வொரு காண்டமும் இருபாகங்களாகப் பதிப்பிக்கப்படுகின்றது. பாட பேதங்களின் வெள்ளப்பெருக்கை நோக்கினால் இன்னொரு இராமாயணம் அளவு உள்ளது. பாடபேதம் இல்லாத பாட்டு ஒன்று உண்டா என்று பல்கலைக்கழகப் பதிப்பை ஆசையோடு புரட்டிப்பார்த்தேன். ஒரு செய்யுள் சுந்தரகாண்டத்து உருக்காட்டுப் படலத்துக் கிடைத்தது.

எய்தினள் பின்னுமெண் ணாதவெண் ணியீங்கு
உய்திற மில்லையென் றொருப்பட் டாங்கொரு
கொய்தளிர்க் கொம்பிடைக் கொடியிட் டேதலை
பெய்திடு மேல்வையில் தவத்தின் பெற்றியால்.

இராமபிரான் இனி ஒருநாளும் வாரான், வந்து மீட்கான் என்று தானே இறந்து விடுதலை பெறத் துணிந்த சீதை தூக்கிட்டுக் கொள்ள எண்ணிக் குருக்கத்தி மரத்துக்குச் செல்லுகின்றாள். 'ஈதலாது இடமும் வேறில்லை என்றொரு போதுலா மாதவிப் பொதும்பர் எய்தினாள்' என்ற பாட்டுக்குப் பின் மேலே காட்டிய பாடபேதம் இல்லாத பாட்டு வந்துள்ளதே என்று வியந்தபோது, இப்பாடல் 'ஒரே ஒரு சுவடியில் மட்டும்தான் காணப்படுகின்றது. ஏனைச் சுவடிகளிலும் இப்பொழுதுள்ள அச்சுப் புத்தகங்களிலும் காணப்படவில்லை' என்ற ஒரு விளக்கத்தைக் கண்டேன். பாடபேதமில்லா ஒரு பாட்டின் பிறபபும் ஐயத்திற்கு உரித்தாயிற்றே என்று சிந்தித்தேன்.

பாடபேதம் பாட்டுக்கு ஒரு சிறப்பு என்ற நிலை இலக்கிய உலகில் வளர்ந்துவிட்டது. பாடபேத வளர்ச்சிக்குக் கூட ஒரு வரலாறு எழுதலாம் போலும். சில பல பாடல்கள் செருகு கவிகள் என்று கூறுவர். அச்செருகுகளுக்கும் பல பாடபேதங்கள் உளவே. ஒரு சில பாடல்கள் மிகச் சில ஏட்டுப் படிகளிலேதான் உள. இவற்றுக்கும் மாறுபாடங்கள் ஏறியுள்ளன. எல்லாவகைச் செய்யுட்களுக்கும் பாடத்திரிபுகள் இருப்பதைப் பார்க்கும் போது, நம் முன்னோர்கள் ஒன்றுவிடாது பதினாயிரம் பாடல்களையும் படித்தார்கள் எனவும், செருகு கருவிகள் என்று ஒதுக்காது வரப்பண்ணினார்கள் எனவும், நூலை முழுமையாகப் படிக்கும் பழக்கம் முன்பு மரபாக இருந்தது எனவும் அறிகின்றோம். அறிந்து மகிழ்கின்றோம். இனி பல பாடல்களுக்குப் பாடபேதங்கள் வரமுடியாது. ஏன்? சிற்சில பாடல்களையே பொறுக்கி வைத்துக்கொண்டு படிக்கும் காலம் இது.

இராமாயணத்தின் இனிய வளர்ச்சி, அடிப்படையான வளர்ச்சி நாம் உருவாக்கும் நல்ல செம்பதிப்பைப் பொறுத்தேயுள்ளது.

இப்போது பல பதிப்புக்கள் வெளிவராமல் இல்லை. எப்படியாவது நல்லதொரு நிலை பேறான பதிப்பைக் கொண்டு வந்துவிடவேண்டும் என்றுதான் கம்பரன்பர்கள் குழுவாகக் கூடி நன்முயற்சி செய்கின்றனர். ஏட்டுச் சுவடிகளைத் தேடித் தொகுத்து இராமாயணப் பணி ஆற்றுகின்றனர். ஆனால் இம்முயற்சிகளின் விளைவென்ன? 'பழைய குருடி கதவைத் திறடி' என்றது போல், ஒவ்வொரு குழுவின் பதிப்புத் தோறும் பேதங்களின் மலிவையே காண்கின்றோம். இராமாயணக் குழுக்கள் பல தோன்றி மறுபடியும் மறுபடியும் பேதப்பதிப்புக்கள் பிறக்குமாயின், மூல ஆராய்ச்சியிலேயே அறிஞர்கள் காலமெல்லாம் கழியுமாயின், இராமாயணத்தின் வளர்ச்சி வருங்காலத்துச் சிதறுண்டு போகும். காப்பியப் பார்வை மங்கிப் போகும். இதற்கு ஒரு நேர்வழி காணத்தான்வேண்டும் என்று என் உள்ளம் துடிக்கின்றது. இக்காலத்துக் காணத்தவறின் என்றுமே தவறிப்போமோ என்று என் நெஞ்சம் பதறுகின்றது. அரிய ஒரு காப்பியத்தைப் பெற்றும் உரிய ஒரு பதிப்பைப் பெற்றிலோமே என்று என் மனம் கவல்கின்றது.

## செம்பதிப்பு

தமிழில் பாடபேதம் கொண்ட நூல் இராமாயணம் மட்டும் அன்று. திருக்குறளில், தொல்காப்பியத்தில், சங்கத் தொகை நூல்களில், சிலப்பதிகாரத்தில், சீவக சிந்தாமணியில் எல்லாம் மாறுபாடங்கள் இல்லாமல் இல்லை. இப்பாடங்கள் மேலும் பெருகாமல், காலந்தோறும் புகாமல், உரையாசிரியர் தடுத்துவிட்டனர். ஒரு பாடத்தை மூலத்தில் தழுவிக்கொண்டு உரை வரைவர். மாறுபாடங்கள் இருக்கமேல் உரையிடைக் காட்டுவர். நல்ல பாடங்களுக்கும் இஃது உரையென வரைவர். அல்ல பாடங்களாயின் இப்பாடம் சரியன்று என மறுத்து ஒதுக்குவர்; இங்ஙனம் பாடம் கூறுவாரும் உளர் என்று சிற்சில இடங்களில் சுட்டிச் செல்வர். உரையாசிரியர்கள் பண்டைத் தமிழ் நூல்களுக்குச் செய்த ஒரு பெருந்தொண்டு மூலச் செம்மையாகும்.

பரிமேலழகர் என்ற உரைஞாயிறு தோன்றியிராவிட்டால் திருக்குறள் மூலம் பல மூலங்களாகிவிடும். அவர்தம் உரைச் சிறப்பால், இன்று எவ்வளவு வகைவகையான பதிப்புக்கள் வெளிவரினும் மூலம் ஒன்றாகக் காண்கின்றோம். மூவாயிரம் ஆண்டுப் பழமையுடைய தொல்காப்பியத்துக்குக்கூடச் செம்பதிப்பு உண்டு. இஃது இளம்பூரணரின் உரைப்பயன். ஆதலின் ஒன்றை இந்த இராமாயணப் பொழிவின்கண் அழுத்தமாக மொழிய விரும்புகின்றேன். இராமாயணத்துக்கு வெவ்வேறு வகையில் பல்வகைப் பதிப்புக்கள் வரலாம். ஆனால் மூல வேறுபாடான

பதிப்புக்கள் வந்து கொண்டிருத்தல் ஆகாது. நெட்டையோ குட்டையோ ஒரு மூலப்பதிப்பே நாட்டிடைப் பரவுதல் வேண்டும். இதனை எப்படிச் செய்வது? யார் செய்வது? இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியன் ஒருவன் இராமாயணத்துக்கும் தோன்ற வேண்டும். தான் நினைக்கும் பாடத்தை மூலமாகக் கொண்டு உரை எழுதிவிடவேண்டும்.

இனி இராமாயணத்துக்கு எவ்வளவு பெரியவர் உரை எழுதினாலும், சில பாடல்களுக்கு நல்ல பாடபேதங்கள் இருத்தலின் அவற்றைத் தள்ளித் துணிவாக ஒன்றை மாத்திரம் கொள்ளுதல் இயலாது. மூலத்தில் ஒரு பாடம் மரபாகக் கொண்டாலும், இதுவும் பொருந்திய பாடம், இதுவும் பொருந்திய பாடம் என்று நூற்றுக்கணக்கான பாடல்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டிய நிலை இராமாயண உரையாசிரியனுக்கு வரும். பாட பேதங்களின் குவியல்களைக் காட்டிக் கொண்டிராமல், துணிந்து பலவற்றைக் கழிக்கவேண்டி வரும். இராமாயண மூலச் செம்மை பதிப்பாசிரியனையோ, பதிப்பையோ பொறுத்ததன்று; உரையாசிரியனை, அவன் உரையைப் பொறுத்தது என்று நினைவிற் கொள்ளுங்கள். எவன் தோன்றி இராமாயண முழுமைக்கும் ஒரு மூலம் காட்டி வழவழ உரை வரையாமல் இலக்கிய நல்லுரை காண்கின்றானோ, அவன் இராமாயணத்துக்கே தொண்டு செய்தவன் ஆவான். இன்னுங்கூடச் சொல்ல நினைக்கிறேன். இராமாயணத் தற்காப்புக்காகச் சொல்லுகின்றேன். இதுதான் இராமாயண மூலப்பதிப்பு, வேறு பதிப்பு வெளியிடக்கூடாது என்று அரசே பதிப்பு முத்திரையிட்டு விதி செய்தாலும் வரவேற்பேன். எப்படியும் இராமாயணத்துக்கு மூலநோயைக் குணப்படுத்தி ஆகவேண்டும்.

## முழுப்பார்வையின் ஒரு பயன்

ஒரு செய்யுளில் எது நல்ல பாடம் என்று தேர்ந்தெடுப்பதற்குக் கூட முழுப்பார்வை வேண்டும். அவ்வொரு செய்யுள் அளவில் நின்று பாடமுடிவு காண்பது குறையாகும். பல பாடல்களில் ஓடிக்கிடக்கும் புலவனது கருத் தோட்டத்தைக் காண்பது பாடத்தெளிவுக்கு நல்லது. இராமாயணம் அறிந்தார் எல்லாம் தெரிந்திருக்கக் கூடிய ஒரு பாட்டைப் பார்ப்போம்.

ஆழிசூழ் உலக மெல்லாம்
　　பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித்
　　தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப்
　　புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டின் வாவென்
　　றியம்பினன் அரசன் என்றாள்.

பரதன் நாடாள வேண்டும்; இராமன் சடைக் கோலம் - தவக்கோலம் பூண்டு பதினான்கு ஆண்டுகள் காடேக வேண்டும்; இஃது அரசன் ஆணை என்று கைகேயி இராமனுக்குச் சொல்லும் இடம் இது. 'இயம்பினன் அரசன் என்றாள்' என்பது இப்பாடலில் உள்ள பாடம். 'ஏவினன் அரசன் என்றாள்' எனவும் ஒரு பாடம் உள்ளது. இயம்பினன் என்பது சரியா? ஏவினன் என்பது சரியா? தீர்மானிப்பது எப்படி? எத்தனை சுவடிகளில் இயம்பினன் என்பது வந்துள்ளது, ஏவினன் என்பது வந்துள்ளது என்று இலக்கியவுலகிற்குக் குடியரசு முறையைப் பின்பற்றலாமா?

இப்பாடலில் தயரதன் கைகேயி இராமன் என்ற மூன்று பாத்திரங்கள் உள. இவைகளின் தன்மைகள் என்ன? கம்பர் எங்ஙனம் தன்மைப் படுத்துகின்றார் என்று காண வேண்டும். இன்ன பாத்திரம் இன்ன சொல்லைச் சொல்லும், சொல்லுதற்கு உரியது என்ற தெளிவு வேண்டும். இராமனுக்கு முடி சூட்டுவது பற்றி அமைச்சர்களைக் கலந்த தயரதன் மந்திரி சபைக்குத் திடீரென இராமனை அழைத்து வரச் செய்கின்றான். வந்த மைந்தனைத் தழுவிய தயரதன், 'மறுக்காத மகனைப் பெற்ற தந்தை எவனோ அவனே துன்பம் இல்லாதவன்' ('சொல்மறா மகற்பெற்றவர் அருந்துயர் துறந்தார்') என்று ஒரு நீதியைக் கூறிவிட்டு, 'நீ முடிபுனைந்து நல்லறஞ் செய்க; எனக்கு நீ செய்ய வேண்டிய கடன் இது' என்று வேண்டுகிறான்.

தாதை யப்பரி சுரைசெயத்
 தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன் இகழ்ந்திலன்
 கடனிதென் றுணர்ந்தும்
யாது கொற்றவன் ஏவிய
 ததுசெய லன்றோ
நீதி யெற்கென நினைந்துமப்
 பணிதலை நின்றான்.

மகன் செய்யவேண்டிய உதவி இது என்று தந்தை நிலையிலிருந்து வேண்டினான் தயரதன். பெரும்பாரத்தை மன்னன் என்மேல் சுமத்துகிறான் என எண்ணிவிடாதே எனவும், உன்பால்நான் பெறவேண்டிய நன்மை இது எனவும் தாழ்ந்து சொல்லுகின்றான் தயரதன். 'தாதை அப்பரிசு உரை செய' என்ற தொடரால் தயரதன் மன்னன் நிலையிலிருந்து பேசவில்லை என்பது வெளிப்படுகின்றது. ஆனால் இராமன் இங்குத் தயரதனை என்ன நிலையிற் காண்கின்றான்? அமைச்சர்கள் சுற்றியிருக்கும் மந்திர இருக்கை யல்லவா இந்த இடம்! அமைச்சன் சுமந்திரன் அல்லவா

இங்கு அழைத்து வந்தவன்! தயரதன் வேண்டுகோள் குடும்பம் பற்றியதன்று, முடிசூடல் பற்றியது. 'ஆதலால் தயரதன் வேண்டுகோளைத் தந்தை வேண்டுகோளாகக் கருதாமல் அரசன் ஆணையாக மதிக்கின்றான். வீட்டில் கேட்டிருந்தால் ஒருகால் வாதாட இடமுண்டு. அரசவையில், அமைச்சர் முன்னிலையில், அரசன் வாய்மொழியை ஆணையாக மதித்தொழுக வேண்டும். அதுதான் ஊருக்கு வழிகாட்டி. தந்தையின் பாரத்தை மகன் தாங்குதல் கடன் என்று உணர்ந்தான்; இது வேண்டுகோளுக்கே உரியதில்லை என்று கருதினான். அதற்குமேல் இராமன் என்ன நினைத்தான்? கொற்றவனாகிய அரசன் எவனை எது ஏவினான், அந்த ஏவுதலை அவன் செய்வதன்றோ நீதி, அரசமுறைமை என்று எண்ணினான். அவ்வெண்ணம் பிறந்ததும் கட்டளையைப் பணிந்து ஏற்றுக் கொண்டான்.

பொதுவாகவே கம்பர் தம் பாத்திரங்களை மிகப் பேசவிடும் போக்குடையவர். ஒரு பாத்திரம் எவ்வளவு கருத்துக்களைச் சொல்லலாமோ அவ்வளவையும் சொல்லிவிடச் செய்பவர். பேசாப் பாத்திரங்களும் அவர்தம் காப்பியத்துச் சிலவே; பேச்சுக் குறைந்த இடங்களும் சிலவே; பேசச் செய்யாத இடமும் சிலவினும் சிலவே. அச்சிலவிடங்களில் இது ஒன்று. அயோத்தியா காண்டம் மந்திரப் படலத்தைப் பாருங்கள். தயரதன் மந்திரிகளை அழைத்துத் துறவு நாடும் தன் கருத்தைப் பலபடமொழிகின்றான். கேட்ட மந்திரிகள் மன்னன் ஆட்சியையும், மகன் சிறப்பையும் பற்றிப் பாராட்டுகின்றனர். மந்திரி அழைக்கவந்த இராமன் முன்னும் தயரதன் முடிசூடுவது குறித்துப் பலவாறு பேசுகின்றான். இவ்வாறு அறுபத் தொன்பது செய்யுட்கள் நடக்கின்றன. ஆனால் இராமன் மறுமொழியாக ஒரு பாடலேனும் இல்லை. ஒரு சொல்லேனும் உண்டா? தாதை அப்பரிசு உரை செய, மகன் ஏதாவது உரை செய்தானா? தந்தை வேண்டுகோளைக் கேட்டபோது, கடனிதென உணர்ந்தான்; நீதி எனக்கென நினைத்தான்; அங்ஙனம் கடமையை உணர்ந்து நீதியை நினைந்தவளவில் அக்கட்டளையை ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறியாகத் தலை வணங்கி நின்றான். மெய்ப்பாட்டளவில் இப்பாடலை முடித்துக் கொண்டார் கம்பர்.

கொற்றவன் ஏவியது ஏதுவாயினும் அதனை அப்படியே ஆம் என்று கூடச் சொல்லும் அளவிற்குக் கால இடைவெளி கொடாது பணியவேண்டும் என்று அரசு நீதிகாட்டுகின்றார் கம்பர். இதன்பின் தயரதன் தன் அரண்மனை சென்றுவிடுகின்றான். இராமனும் தன் அரண்மனைக்குப் போய்விடுகின்றான். காப்பியத்து ஒரு பெரிய நிகழ்ச்சியை - நிகழ்ச்சிக்கெல்லாம் கருவான நிகழ்ச்சியை - ஒரு

பாட்டில் அதுவும் மெய்ப்பாட்டில் வைத்து மேற்செல்கின்றார் கம்பர். கருவை அதற்குரிய சிறிய அளவாகவே காட்டவேண்டும் என்று கருதினார் போலும். இவ்விடத்து இராமனைப் பேச விடுவது 'காதலுற்றிலன் இகழ்ந்திலன்' என்ற கருத்துக்கு இகழ்ச்சியாகி விடுமோ என்று அஞ்சினார் போலும்.

தயரதன் வேண்டுகோளை இராமன் யாதும் மாறு நினையாமல் ஏற்றுக்கொண்டதற்கு ஒரே ஒரு காரணம், ''கொற்றவன் ஏவியது' என்பது. கொற்றவன் என்ற எழுவாய்ப்பெயர் வரும்போது, அவன் ஒருவனைப் பார்த்து இது செய்க என்று சொல்லும்போது, ஏவுதல் என்ற வினை தானே பொருத்தம். அதுதானே கட்டளை காட்டக் கூடிய வினைச்சொல். இவ்வினைச் சொல்லை மீண்டும் மீண்டும் ஆசிரியர் ஆளும் இடங்கள் பல.

என்று பின்னரும் மன்னன் ஏவியது
அன்றெ னாமை மகனே யுனக்கறன்.

ஏவிய குரிசில்பின் யாவர் ஏகிலார்.

தெருளுடை மனத்து மன்னன்
ஏவலிற் றிறம்ப அஞ்சி
இருளுடை யுலகம் தாங்கும்
இன்னலுக் கியைந்து நின்றான்.

இத்தகைய இடங்களில் எல்லாம் மன்னனொடு அடுத்து 'ஏவல்' என்ற வினைச்சொல் பயின்று வருவதைக் காண்கின்றோம். இங்ஙனம் முழுப்பார்வை பார்க்கும்போது எது நற்பாடம் என்று தீர்மானம் தெளிவாகச் செய்ய முடியும்.

ஏழிரண் டாண்டின் வாவென்று
இயம்பினன் அரசன் என்றாள்.

ஏழிரண் டாண்டின் வாவென்று
ஏவினன் அரசன் என்றாள்.

'ஏவினன் அரசன்' என்ற பாடமே காப்பிய மரபு ஆகும். கருத்துக்குச் சிறப்பும் ஆகும் என்பது வெளிப்படை. இராமன் பண்பை நன்கு அறிந்தவள் கைகேசி. இஃது அரசன் கட்டளை என்று யார் வந்து கூறினாலும், யார் கூறினார்கள் என்று பாரான், அக்கட்டளைக்கு உடனே பணிவான் என்பது அவளுக்குத் தெரியும். இப்பண்பினாலே தான், அரசன் அன்று ஏவியபோதும் முடிசூட்டிக் கொள்ள இசைந்தான் என்பதும் அவளுக்குத் தெரியும். எவனுக்கு எப்பண்பு உண்டோ அப்பண்பு வழியாகத்தானே அவனை உயர்த்தவோ மடக்கவோ முடியும். 'யாது கொற்றவன் ஏவியது அது செயலன்றோ

நீதி எற்கு' என்பது இராமன் குறிக்கோள். எது ஏவினான் என்று அவன் பாரான். கொற்றவன் ஏவினானா, சரி என்பான்; மறுபேச்சுப் பேசான். ஆதலின், இராமன் உணர்தற்கு உரிய சொற்களைக் கைகேசி தெரிந்துகொண்டு, 'ஏவினன் அரசன்' என்று மொழிந்தாள். இவையே இராமனை உணரவைக்கும் சொற்கள். 'இயம்பினன் அரசன்' என்ற பாடத்துக்கு இங்ஙனம் உணர்த்தும் ஆற்றல் இல்லை என்பதை அறிய வேண்டும். இயம்புதல் என்பது பொதுவினை, ஏவுதல் என்பது கட்டளை வினை; செய்ய வேண்டும் என்ற அதிகாரக் குறிப்புடைய வினை.

தாதை யேவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ,

என்று சிலப்பதிகாரமும் இராம காதையைக் குறிக்குமிடத்து, 'தாதை ஏவலின்' என ஏவற் சொல்லைப் பயன்படுத்துகின்றது. ஏவல் என்ற சொல்லால் தாதை என்பவன் அதிகாரமுடைய மன்னன் என்பது குறிப்பிற் பெறப்படும். ஒரு பாத்திரத்துக்குச் சில பண்புகளை அமைத்து நூல் முழுதும் புனைந்து செல்கின்றான் காப்பியப் புலவன். அவன்போல் கற்பவர்க்கும் முழுநூற் பார்வை இருக்குமாயின், பல கசடுகள் நீங்க இடனுண்டு.

## தொடர்பழகு

அகநானூறு முதலிய தொகை நூல்கள் தனிப்பாடல்களின் செயற்கைத் தொகுப்பு ஆதலின், காப்பிய அழகு என்னும் தொடர்பழகுக்கு இடனில்லை. காப்பியம் இல்லாவிட்டாலும் ஓர் ஆசிரியன் எழுதிய நூலில் கருத்து வகையால் (கதை வகையாலன்று) தொடர்பழகு ஓடவே செய்யும். சிறு நூலான ஆத்திசூடியில், 'ஏற்பது இகழ்ச்சி', 'ஐயமிட்டு உண்' என்ற நீதிகள் அடுத்தடுத்து உள. யாசிப்பது கீழ் ஆயினும் யாசித்தார்க்குக் கொடுப்பது மேல் என்ற கருத்தோட்டம் உண்டு. 'பெரியாரைத் துணைக்கொள்' எனவும் 'பேதைமை யகற்று' எனவும் அடுத்தடுத்து வரும் அறிவுரையால் 'பெரியவர்களைச் சார்ந்தால் அறியாமை நீங்கும்' என்ற தொடர்பை உணர்கின்றோம். 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை', 'தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை' என்று வரும் கொன்றை வேந்தன் அடிகளில் இணையழகு உண்டு. 'ஊழிற் பெருவலி யாவுள' என்று ஊழ் அதிகாரத்திற் சொல்லிய வள்ளுவர் 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என ஆள்வினையுடைமை அதிகாரத்தில் கூறும் போது, நீண்ட கருத்தோட்டம் வெளிப்படுகின்றது. கொலையிற் கொடியாரை வேந்தன் தண்டிக்க வேண்டும் என்ற வள்ளுவர்

அடுத்த, கொடிய கொலைஞனினும் கொடுங்கோல் வேந்தன் மிகக் கொடியவன் என்று கூட்டும்போது நினைவுத் தொடர்பு புலனாகின்றது. 'கண்ணோட்டத்து உள்ளது உலகியல்' என்றாலும், கருமம் சிதையாமல் கண்ணோட வேண்டும் என்று ஒரு வரம்பு காட்டும்போது தொடர்நினைவு ஏற்படுகின்றது. ஆத்திசூடி முதலியன எல்லாம் நீதி நூல்களாயினும், இயற்றிய புலவர் ஒருவர் ஆதலின் எண்ணத் தொடர்பு இருத்தல் இயல்பேயாகும். அருள் நூல்களிலும் இத்தொடர்பினைக் காணலாம். நீத்தல் விண்ணப்பத்தில் சிவனைப் பாடிப் புகழ்ந்து கொண்டே வரும் மணிவாசகர்,

மழைதரு கண்டன் குணமிலி
மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபரன் என்றென்
றறைவன் பழிப்பினையே.

உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சன்நஞ்
சூண்பிச்சன் ஊர்ச்சுடுகாட்டு
எரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப்
பிச்சனென் றேசுவனே.

என்றவாறு இறுதிச் செய்யுட்களில் வசை தொடுக்கின்றார். இறைவனை வைகின்றோம் என்ற எண்ணம் அன்பர் உள்ளத்தை அலைக்கின்றது. ஆதலால் மேலும் பாடுகின்றார், 'ஏசினும் யான் உன்னை ஏத்தினும் என் பிழைக்கே குழைந்து வேசறுவேனை விடுதி கண்டாய்' என்று. முன் ஏசினமையால் அன்றோ இப்பாட்டு மேலும் பாடவேண்டிய நிலை ஏற்பட்டது.

கதைத் தொடர்பற்ற, செய்யுள் தொடர்புடைய நூல்களில் மேற்கண்டவாறு தொடர்பழகு இருக்குமாயின், கதையும் செய்யுளும் தொடர்ந்த மாளிகையனைய பெருங்காப்பியங்களில் எவ்வளவு தொடர்பழகு காணவேண்டும். காப்பியம் என்பது தனிப்பாடற்றிரட்டு அன்று; தனிப்பாடற்றொகுதியன்று. இதனை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தனிப்பாடல் என்ற நோக்கொடு காப்பியத்தைக் கற்கப் புகுவது குருடர்கள் தடவிப் பார்த்த யானைபோல் ஆகிவிடும். கம்பரின் பேராற்றல் இராமாயண முழு வுருவத்தில் அடங்கியுள்ளது. தனிப் பாடல் நயமாகப் பாடிவரும் பாடுவோரும் நாட்டில் பலர். அவருள் ஒருவராகக் கம்பரை எண்ணுகின்றீர்களா? பஞ்சிலிருந்து நூலிழைத்தவர் அல்லர் கம்பர்; ஆடை நெய்தவர். மண்ணிலிருந்து ஒரு செங்கல் சுட்டவரல்லர் கம்பர்; வீடே கட்டியவர். ஆதலின் இராமாயணத்தை

முழுமையாக, ஒவ்வொரு பாடலையும் முழுமையின் பாகமாக, ஒவ்வொரு சொல்லையும் பாகத்துட்பாகமாக உறவுமுறையோடு காணவேண்டும். முழுஸ்மயாகப் பார்க்கும் திறம், காலம், கருத்து எல்லாம் நம்மிற் பலர்க்கு இல்லை என்பது வேறு; பார்க்கவே கூடாது என்பது வேறு. மிகச் சிலரேனும் கம்பரின் முழுவுருவத்தைக் காண்பார்களாயின், காணப் பாடுபடுவார்களாயின் தமிழ் இலக்கியவுலகு செழிக்கும். ஆதலின் இன்று காப்பியப் பார்வை என்னும் தலைப்பில் சொற்பொழியும் நான் சிறந்த காப்பியமான இராமாயணங்கூட, தனிச் செய்யுட் சிந்தாமணி போலப் பேசவும் பரப்பவும் படுவது கண்டு வருந்துகின்றேன். இப்போக்கைக் கண்டிக்கவல்ல இராமாயண அன்பர்கள் இல்லாதது கண்டும் வருந்துகின்றேன்.

களைந்த நகத்திற்குச் சிறப்பில்லை. விரலோடு கூடியிருக்கும்போது அழுக்கற்ற நகத்துக்கு நல்லழகு உண்டு. தனி மயிரிழை தீண்டுதற்குரியதன்று. கூந்தலின் உறுப்பாகக் கூடியிருக்கும்போது வனப்பும் நினைப்பும் வேறு. கருத்து மட்டம் என்று பலர் ஒதுக்கும் பாடல்கள்கூடக் காப்பியத்துக்குத் தொடருட்டம் செய்பவை. அப்பாடல் இன்றேல் காப்பியம் அறுத்தோடியாகிவிடும். பெருங் காப்பியத்தின் செய்யுட்களை ஆடையின் இழைகளாகவும், மரத்தின் இலைகளாகவும் கருத வேண்டும்.

## சங்கிலிப் பார்வை

சுந்தரகாண்டத்துச் சூளாமணிப் படலத்து ஒரு காட்சி. சீதையின் இருப்பை அசோகவனத்துக் கண்டு பிடித்த அநுமன் உவகைத்தேன் உண்டு ஆடினான். இராவணன் வரவையும் அவன் காமுகச் சொல்லையும் பிராட்டிபடும் உயிர்க்கலக்கத்தையும் கண்ணிணை சான்றெனக் கண்டான். அவன் பேரன்பிற்குச் சீதையைத் தான் அவ்வனத்தினின்றும் கொண்டு செல்வதே அறிவெனப்பட்டது. தன்னனைய தூதன் வந்த பின்னரும், வந்து காணுவதற்குரிய சீதையைக் கண்ட பின்னரும், வெறுங் கையோடு மீள்வதா என்ற வினா எழுந்தது. கண்டுவரும் என்றிருப்பான் காகுத்த இராமன்; கொண்டுவரும் என்றிருப்பான் கவிக்குல அரசன். விறகு வெட்டிவா என்றால் கட்டி வருதலும் அச்சொல்லுள் அடக்கந்தானே.

> வேறினி விளம்ப வுளதன்று; விதியாலிப்
> பேறுபெற என்கண்அருள் தந்தருளு பின்போய்
> ஆறுதுயர் அஞ்சொல்இள வஞ்சியடி யன்றோள்
> ஏறுகடி தென்றுதொழு தின்னடி பணிந்தான்.

விரைந்து தூக்கிச் சென்றுவிட ஆசைப்படுகின்றவன் இப்போது எவன்? அநுமன் - 'செவிக்குத் தேனென இராகவன் புகழைத் திருத்திய கவிக்கு நாயகன்' என்று கம்பர் பெருமானால் பாராட்டப்படுபவன்; 'மாணியாம் படிவமன்று மற்றுஇவன் வடிவு அமைந்த ஆணி இவ்வுலகுக்கெல்லாம்' என்று இராமபிரானால் பாராட்டப்படுபவன்; 'அம்மையாய் அத்தனாய அப்பனே அருளின் வாழ்வே' என்று சீதைப் பிராட்டியால் புகழப்படுபவன்; அத்தகைய மாசு மறுவற்ற அண்ணல், 'என் மென்மயிர் பொருந்திய தோள் மேல் ஏறிப் புறப்படுக' என்று மன்றாடி வேண்டும்போது மறுப்பது எப்படி? காமுகன் நாட்டிலே இருப்பேன் என்று சொல்வது எப்படி? இது புலவன் காப்பியத்து ஈடுகட்டவேண்டிய ஒருகளம்.

அரிய தன்றுநின் னாற்றலுக் கேற்றதே
தெரிய வெண்ணினை செய்வதுஞ் செய்தியே
உரிய தன்றென வோர்கின்ற துண்டதென்
பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால்.

முன் இரண்டடிகளில் அநுமன்தன் ஆற்றலைப் புகழ்ந்தும் பின் இரண்டிகளில் தன் கருத்தைப் பெண்மைமேல் ஏற்றியும் இவ்வாறு அநுமன் வேண்டுகோளை மறுக்க முயல்கின்றாள் சீதை. என்னை வஞ்சித்து எடுத்த வந்த நாய்களின் எண்ணப்போக்கை நீயும் நினைக்கலாமா எனவும், என் உடலைப் பார்த்த அரக்கனின் கண்களைக் குத்துவதை ஈண்டிருந்து யான் பார்க்க வேண்டாமா எனவும், இலங்கை பகைவரின் எலும்பு மலையாகாவிட்டால் என் இற்பிறப்பும் கற்பும் எங்ஙனம் வெளிப்படும் எனவும், எனக்கே இலங்கையை எரிக்கும் கற்பாற்றல் உண்டெனினும் இராமனது வில்லாற்றலுக்கு மாசு வரக்கூடா தன்றோ எனவும், சீதை அநுமனுடன் வரக்கூடாமைக்கு உரிய காரணங்களைச் சொல்லி வரும்போது, பின்வரும் இரு பாடல் அடுத்தடுத்துள.

வேறும் உண்டுரை கேளது மெய்ம்மையோய்
ஏறு சேவகன் மேனியல் லாலிடை
ஆறும் ஐம்பொறி நின்னையும் ஆணெனக்
கூறும் இவ்வுருத் தீண்டுதல் கூடுமோ.

தீண்டு வானெனின் இத்தனை[illegible]ச் சேண்பகல்
ஈண்டு மோவுயிர் [illegible]மெய்யின் இமைப்பின்முன்
மாண்[illegible] தாவனென் றேநிலம் வன்மையால்
கீண்டு கொண்டெழுந் தேகினன் கீழ்மையான்.

இவ்விடத்தில் வான்மீகத்தோடு ஒப்பிட்டுப் பலர் பேசுவர். கைதொட்டுச் சீதையை இராவணன் தூக்கிச் சென்றான் என்று முதனூல் கூறியிருக்கவும், தமிழ் நாகரிகத்துக்கேற்ப, கம்பர் சிறிது மாற்றஞ் செய்தார் எனவும், பூந்தொட்டியைத் தூக்கிப் போதல்போல, நிலத்தோடும் சீதையை அகழ்ந்து கொண்டு சென்றான் இராவணன் எனவும் பாராட்டியும் பேசுவர். வான்மீகி வாய்மையும் கம்பன் புளுகும் எனச் சிலர் மறுத்துப் பேசுவர். வஞ்சகக் காமுகன் ஒரு நங்கையை வலிந்து மெய்தீண்டி விடுவதால், அவள் கற்பியல் மாசுபடுவதில்லை. அவன் செய்கையால் அவள் திண்மை வெளிப்பட்டதென்றே மன்னினம் பாராட்டும். இது கதையாராய்ச்சி. இந்த இரு பாடல்களிடைக் கிடக்கும் தொடர்பழகை - காப்பியத்தை - நாம் காண்போம்.

காப்பியத்தில் உரையாடல்கள் எப்படி நடக்கின்றன? ஒரு பாத்திரம் நெடுநேரம் பேசுகின்றது. அப்பாத்திரத்துக்குப் பத்து இருபது பாடல் தொடுக்கிறான் புலவன். எப்படித் தொடுக்க முடிகின்றது? காப்பிய உரையாடலை வழக்குரையாடலோடு ஒப்பிடவேண்டும். ஒருவர் ஒருவரோடு பேசும்போது முகம் பார்த்துப் பேசுகின்றார். ஒவ்வொரு பேச்சுக்கும் கேட்பவன் மனக் குறிப்பையோ மெய்ப்பாட்டையோ கண்டு அதற்கேற்ப மேலும் பேசுகின்றார். உனக்குக் கடன் தரமாட்டேன் என்பது முதற் பேச்சு. அதனைக் கேட்டவன் முகஞ் சுளிக்கின்றான் அல்லது தலைகுனிகின்றான். முன்போல அன்றிப் பத்து நாட்களில் திரும்பத் தருவதாயின் கடன் தரலாம் என்பது மறுபேச்சு. இவ்விரு பேச்சுக்களை மாத்திரம் இணைத்துப் பார்த்தால் கருத்தோட்டம் விளங்காது முரண்படும். இவ்விரு பேச்சுக்கு இடையே ஒரு மெய்ப்பாடு நிகழ்ந்தது. அதன் விளைவே மறுபேச்சு என்று கொண்டால் முரண்படாது. எனவே உரையாடல் என்பது பேச்சு - மெய்ப்பாடு - பேச்சு - மெய்ப்பாடு - பேச்சு என இரண்டும் கூடுதலாகவோ குறைவாகவோ இரண்டறக் கலந்து வரும் கலப்பாடல் என்று அறிய வேண்டும். முழுதும் பேச்சுமயம் என்று எண்ணினால் கருத்துத் தொடர்பு அற்றுக்காட்டும்.

பாத்திரப் பேச்சுக்களைப் பாடிவரும் புலவன் பேசி வந்த முறையை நிரல்பட எழுதுவான். ஒரு பேச்சுக்கும் மறு பேச்சுக்கும் இடைப்பட்ட மனவோட்டத்தை - மெய்ப்பாட்டை - அவன் பெரும்பாலும் காட்டமுடியாது. காட்டப் புகின், காப்பியவோட்டம் தடைப்படுவது மட்டுமின்றிக் காப்பியம் விளக்க நூலாகிவிடும். அதனைக் கண்டு கொள்ளுதல் கற்பவர் கடன். முதல் ஒன்று மொழிந்தபின் மற்றொன்று மொழிவதற்கும் பின்னொன்று

மொழிவதற்கும் என்ன குறிப்புக்கள் சொல்பவர்தம் மனத்தோ முன்னிலையார் மனத்தோ ஓடியிருக்கவேண்டும் என்று கண்டு நிரப்பிக் கொள்ள வேண்டும். கற்பனையால் காணும் இவ்விலக்கியப் பயிற்சியே தலைப்பயிற்சி. பாட்டுக்களுக்கிடையே மறைந்து கிடக்கும் நினைவுத் தொடர்பைக் கண்டுகண்டு படித்துச் செல்வது நல்ல காப்பியப் பார்வையாகும்.

மேலே இரு செய்யுட்கள் சீதை கூற்றாகக் காட்டினோமே! இவற்றின் எண்ணவுறவு என்ன? அநுமனுடன் செல்ல மறுக்கும் சிதைப்பிராட்டி காரணங்களை ஒவ்வொன்றாகச் சொல்லி வரும்போது, 'இவைமட்டுமல்ல இன்னும் ஒரு காரணம் உண்டு, கேட்.பாயாக. என் கணவன் திருமேனியல்லால் என் உடம்பு எந்த ஆண் மகனையும் தீண்டியதில்லை. நீ ஐம்புலன்களை முற்றும் ஒடுக்கிக் கொண்டவன்தான். ஆண்மை முழுதும் அடக்கிய நின்னையும் வடிவு நோக்கி ஆண் என்றுதானே மன்பதை கூறும். ஆதலின் எந்நிலைய ஆடவனையும் மெய்தீண்டல் அழகன்று' என்று தன் ஒழுக்கத்தையும் மக்கட் பார்வையையும் இணைத்து மொழிகின்றாள். இவ்வார்த்தை கேட்ட அநுமன் மனம் சும்மா இருந்திருக்குமா? அவன் மனம் வெறுமனே இருக்கும் என்று சீதைதான் எண்ணியிருப்பாளா? புலன் அடக்கிய அன்பனான என்மேனிபடுவது தொடுவது இழுக்கென்றால் இராவணன் எங்ஙனம் கொண்டு வந்தான்? இருபது கைகளாலும் தூக்கி வாரிக்கொண்டுதானே வந்திருக்கவேண்டும்? இராவணன் தீண்டப்பட்டவள் என்று மன்னாயம் கூறாதா? இம்மனவோட்டங்களை அநுமன் தன் முகக் குறிப்பில் சீதைக்குக் காட்டியிருக்கவேண்டும். அல்லது இம்மன வோட்டத்தைத் தடுக்கச் சீதை முந்துற்று அடுத்த பாட்டைச் சொல்ல நினைந்திருக்க வேண்டும். நின் உருவைத் தீண்டுதல் கூடுமோ என்று வினாவிய சீதை, இராவணன் தீண்டியிருப்பான் அல்லனோ என்று ஒரு வினாவுக்கு விடை கூறுபள் போல,

தீண்டு வானெனில் இத்தனைச் சேண்பகல்
ஈண்டு மோவுயிர் மெய்யின் இமைப்பின்முன்
மாண்டு தீர்வனென் றேநிலம் வன்மையால்
கீண்டு கொண்டெழுந் தேகினன் கீழ்மையான்,

என்று தொடர்ந்து உரையாடினாள். அவன் தீண்டவில்லை என்று சுட்டினால் மட்டும் போதாது. தீண்டாது எப்படிக் கொண்டு வந்தான்? என்று மேலும் ஒரு வினாவுக்கு இடம் வையாமல்,

நிலத்தையே அகழ்ந்தெடுத்துக் கொண்டு புறப்பட்டான் என்று விளக்கினாள்.

இங்கு ஒப்புமைக்காக வழக்கில் ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுகிறேன். இந்நிகழ்ச்சி நம் பாராள்மன்றத்தில் நிகழ்ந்தது. தலைமையமைச்சர் நேரு அமெரிக்காவுக்குச் சென்றபோது, தம் ஒருமகள் இந்திரா காந்தியையும் அழைத்துச் சென்றிருந்தார். இருவரும் திரும்பி வந்த சின்னாளில், பாராள்மன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் நீங்கள் அமெரிக்காவுக்குப் போய்வந்த செலவு என்ன என்று ஒரு கேள்வி நேருவைப் பார்த்துக் கேட்டார். என் மகள் செலவு இதில் சேர்க்கப்படவில்லை என்று சட்டென்று விடையிறுத்தார் நேரு பெருமகன். அமெரிக்காவுக்குச் செலவில்லாமல் போகமுடியாது. பெருஞ்செலவு ஆகும். ஒருவர் அதுபற்றி என்ன செலவு எனக் கேட்கின்றார் என்றால் ஏதோ அக்கேள்வியில் ஓர் உட்குறிப்பு இருக்க வேண்டும். குறிப்பிற் குறிப்பு உணர்ந்து பொள்ளென மறுமொழி கூறாவிட்டால் சில சமயங்களில் கேவலமாகி விடும். அமெரிக்காவுக்குப் போய்வந்த செலவு எவ்வளவு என்று கேட்டதற்கு ரூ.50,000 என்று நேர்விடை கூறுவதாக வைத்துக் கொள்வோம். உடனே மறுகேள்வி வரும், உங்கள் மகள் பயணச் செலவும் இதிற் சேர்ந்ததுதானே என்று. இத்தகைய ஒரு கேள்விக்கு இடம் கொடுப்பது நேரு கும்பத்துக்குப் பெருமையா? பாராள்மன்றத்துக்குப் பெருமையா? தகா இடத்து வரும் தும்மலை மூக்கைக் கசக்கி முன்னடக்கம் செய்வது போலத் தகாத கேள்விகள் வருவதற்கு முன்னரே குறிப்பறிந்து முன்விடை கூறல் நல்ல உரையாடல் ஆகும். சில வெளிப்படைக் கேள்விகள் செவிக்கு இனிக்கா.

ஐம்பொறி அடக்கிய நின்னையும், ஆண் எனக் கூறும் என்று பிராட்டி மொழியக் கேட்ட அநுமன், இராவணன் தங்களை மெய்தீண்டி எடுத்து வந்தானா, இல்லையா? எப்படி எடுத்து வந்தான்? என்று சிறு அளவில் கேட்பதாக வைத்துக் கொண்டாலும், அதற்கு இரண்டொரு செய்யுட்கள் எழுதி இருந்தாலும், யார்க்குப் பெருமை? அங்ஙனம் கேட்டு விடுவதே சிறுமை, அல்நாகரிகம். யார் யாரிடத்து எந்தக் கேள்வியைக் கேட்பது என ஒரு தரம் வேண்டாமா? ஆதலின் அநுமன் இடைமறித்து வினவியதாகச் செய்யுள் பாடாது, அவ்வினாக் குறிப்பைத் தொடர்பழகில் கம்பர் காட்டினார். 'அநும' இராவணன் தீண்டியிருப்பான் என்று நீ எண்ணலாம். தீண்டியிருந்தால் நான் ஈண்டு - இவ்வுலகில் - இவ்வளவு காலம் இருப்பேனா? அவன் தீண்டாமைக்கு நான் உயிர் தாங்கியிருப்பதே அறிகுறி' என்ற துடிப்பாக இயம்புகின்றாள் சீதை.

தீண்டின் என் உயிர்போம் என்பது அக்கயவனுக்குத் தெரியுமே. அதனாற்றான் நிலத்தொடும் பெயர்த்து வந்தான் என்று மேலும் விளக்குகின்றாள்.

மேலும்மேலும் சில கருத்துக்களைச் சீதை கூறிச் செல்லுவதற்கு அவள் உள்ளத்துப் பிறந்த சிந்தனைச் செலவுகள் என்னவாக இருக்கும்? தீண்டினான் போலும் என்ற குறிப்பு என் தவக்கோலத்தைக் கண்ட அநுமனுக்கே முகிழ்க்குமாயின், சேணிடையுள்ள ஏனையோர் என்ன எண்ணுவர்? தன் கற்பின் அசையாத் திண்மையை - அசைக்க முடியாத திண்மையை - வந்த தூதுவன்பால் ஐயமறச் சொல்லிவிட வேண்டும் என்று ஏழை நங்கை இறுதியாக எண்ணினாள். இராவணன் தன்னை என்றும் தீண்டான், அத்தகைய சாபம் உடையவன் என்று சுட்டினாள். பலவாறு சொல்லிப் புரிய வைப்பதினும் ஒன்று காட்டிப் புரியவைப்போம் என்று கருதியவள்,

ஆண்டு நின்றும் அரக்கன் அகழ்ந்துகொண்டு
ஈண்டு வைத்த திளவல் இயற்றிய
நீண்ட சாலை யொடுநிலை நின்றது
காண்டி யையநின் மெய்யுணர் கண்களால்.

'அநுமனே நின் கண்களால் பார்த்துக் கொள்; இப் பருண சாலை இலக்குவன் செய்தது; இராவணன் அப்படியே தோண்டிக் கொண்டு வந்து வைத்தது; நன்றாக உண்மையை உணரும் கண்களால் பார்த்துக்கொள்' என்று தீண்டாமைக்கு ஒரு சான்றாகக் கண்முன் காட்டுகின்றாள். இதனை இராமனிடம் போய்ச் சொல்ல வேண்டும் என்பது அவள் குறிப்பு. நீங்கள் காட்ட யான் என் கண்களால் கண்ட சான்றினை அப்படியே சொல்வேன் என்று அநுமன் அவள் முன்னே சொல்வது மிகையல்லவா? எனினும் அவன் திண்ணிய பருணசாலை காட்டிய அவ்வள் மனக் குறிப்பைப் புரிந்து கொண்டான். புரிந்து கொண்டமை நமக்கு எங்கு வெளிப்படுகின்றது?

வேலையுள் இலங்கை யென்னும்
விரிநகர் ஒருசார் விண்டோய்
காலையும் மாலை தானும்
இல்லதோர் கனகக் கற்பச்
சோலையங் கதனின் உம்பி
புல்லினால் தொடுத்த தூய
சாலையில் இருந்தாள் ஐய
தவஞ்செய்த தவமாம் தையல்.

மண்ணொடுங் கொண்டு போனான்
வானுயர் கற்பி னாள்தன்
புண்ணிய மேனிதீண்ட அஞ்சுவான்.

அறுநூறு செய்யுட்களுக்கு அப்புறம், அசோகவனத்துச் சீதை காட்டிய சாலைக்காட்சியைக் கண்ட அநுமன், கண்ட அப்போதே திரும்பிச் சென்று இராமனைக் காணும் போது சொல்லவேண்டிய சான்று இது என்பதை நினைவிற் பொதிந்து கொண்டான் என்று புலனாகிறது. சூளாமணிப் படலத்துச் சாலைக்காட்சிப் பாடலையும், திருவடி தொழுத படலத்துச் சாலைச்செய்திப் பாடலையும் இணைத்துப் பார்க்கும்போது, சிந்தனைத் தொடர்பழகு வெளிப்படுகின்றது. தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கொடு 'காண்டி ஐயய நின்மெய்யுணர் கண்களால்' என்று சீதை கொண்ட சிந்தனையும், இலங்கையில் கனகக் கற்பச் சோலையாயினும் அவளிருந்தது உன் தம்பி தொடுத்த புற்சாலை என்று அநுமன் மறவாது சொல்லிய சிந்தனைக் காரணமும் காப்பிய ஓட்டங்களாகும். தனிப்பாடலின் நயங்களால் இவ்வோட்டம் வெளிப்படுமா? தொடர்பு நயமே முடிவான காப்பிய நயம்.

கொடிய அரக்க வேந்தன் கைப்பட்டு அவன் நகரில் வைக்கப்பட்டிருந்தாலும் சீதையின் கற்புக்குப் பங்கம் இல்லை என்று அநுமன் தெளிவாக அறிவான். அசோக வனத்திடை அரக்கியர் சூழ இருந்த சீதையைக் கண்ட மாத்திரத்தே 'மாசுண்ட கூந்தலாள் கற்பும் காவலும் ஏசுண்டதில்லை' என்று முடிவுகட்டி விட்டான். அதன் மேலும் இராவணன் சீதைமுன் வந்தபோது, கூசியாவி குலைவுறுவாளையும், ஆசையால் உயிர் ஆசழிவானையும் காசில் கண்ணிணை சான்றெனக் கண்டானாதலின் சீதையின் கற்பு நலம் பற்றி யாதும் கவன்றான் இல்லை. அதற்கு மேலும் சீதைப்பிராட்டி தற்கொலை செய்து கொள்ளக் குருக்கத்தி மரத்துக்குச் சென்றதையும் நேரிற் கண்டு தடுத்தானாதலின், கற்புத் தூய்மை பற்றிய சிறுமனக் குறையும் அநுமனுக்கு இருந்திருக்க முடியாது; எனினும் ஓர் ஐயம் அவனுக்கு இருந்தது. அது இடையில் வந்த சிறிய ஐயம். தோள்மேல் எடுத்துச் செல்கின்றேன், ஏறிக்கொள்ளுங்கள் என்று இன்னடி பணிந்தபோது, இராகவன் திருமேனியல்லாமல் யாரையும் தீண்டகில்லேன், ஐம்பொறி அடக்கிய நின்னையும் வடிவால் ஆணென்றுதானே உலகம் கூறும் என்று சீதைமறு மொழிந்த காலை, அநுமனுக்கு எழுந்தது ஓர் ஐயம், இராவணன் தீண்டிக் கொண்டு வந்தானா, இல்லையா என்று.

நன்று நன்றிவ் வுலகுடை நாயகன்
தன்து ணைப்பெருந் தேவி தவத்தொழில்
என்று சிந்தை களித்துவந் தேத்தினான்
நின்ற சங்கை யிடரொடு நீங்கினான்.

*சங்கை எது? இராவணன் மெய்தொட்டுத் தூக்கி வந்தானா என்பது. இடர் எது? எடுத்துச் செல்லாது இவ்வனத்திலே விட்டுச் சென்றால் சீதையை இராவணன் தீண்டித் தொலைப்படுத்த மாட்டானா? என்பது. இலக்குவன் இயற்றிய சாலையைக் கண்டதும் சங்கை (ஐயம்) நீங்கிற்று. விரும்பாத மாதரைத் தீண்டினால் தலைகள் போய்விடும் என்ற சாபம் இராவணனுக்கு உண்டு என்பதைக் கேட்டதும் இடர் நீங்கிற்று.*

*இராவணன் பிராட்டியின் மேனியைத் தீண்டவில்லை என்பதைக் கருவாக வைத்து ஆக்கிய பாடல்களுக்கிடையே ஓடிக்கிடக்கும் எண்ணவுறவுகளை இதுகாறும் கூறினேன். காப்பியப் பார்வை என்பது பாடற் பார்வை மட்டுமன்று; பாடல்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து செல்லும் தழுவற் பார்வை, இணைந்து செல்விக்கும் எண்ணப் பார்வை. 'ஒன்றாகக் காண்பதே காட்சி' என்றபடி காப்பிய முழுமைக்கும் ஒரு நூலோட்டம் காணும் சங்கிலிப் பார்வை வேண்டும்.*

*பிராட்டியைத் தேடிச் சென்ற வானரவீரர்கள் நருமதையாற்றைக் கடந்தனர். அன்னம் ஆடிடங்களையும் அமரப் பெண்கள் ஆடிடங்களையும் வண்டுகள் ஆடிடங்களையும் வழியிடைக் கண்டனர்; எனினும் சீதையை அவர்கள் காணவில்லை என்ற ஒரு கருத்தை எவ்வளவு புதுமையாகப் புலப்படுத்துகின்றார் கம்பர். பாருங்கள்:*

பெறலருந் தெரிவையை நாடும் பெற்றியார்
அறனறுங் கூந்தலும் அளக வண்டுசூழ்
நிறைநறுந் தாமரை முகமும் நித்தில
முறுவலும் காண்பரால் முழுதுங் காண்கிலார்.

*நருமதை யாற்றிடைச் சீதையின் ஒவ்வோர் உறுப்பைக் கண்டனராம் வானரவீரர்கள். அவற்றையும் எப்படிக் கண்டனராம்? கருமணலைச் சீதையின் கூந்தலாகவும், தாமரையை அவள் முகமாகவும், முத்தினை அவள் பல்லாகவும் பார்த்தனராம். இப்பார்வையாற் பயனென்ன? அவள் முழுவுருவத்தையும் பார்த்திலரே என்று முடிக்கின்றார் கம்பர். முழுமை காணவேண்டிய*

இடத்துத் தனித்தனி காணுதல் பயனில்லை என்ற உண்மை இவ்வானரப் பார்வையாலும் விளங்குகின்றது அல்லவா?

## தனிப்பார்வை

தனிப்பார்வை தன்னளவில் கருத்து முற்றிய பாடல்களுக்கே பொருந்தும். அகநானூறு, குறுந்தொகை, நாலடியார் என்றினைய நூல்கள் ஒரு தனிப்பார்வைக்கு உரியவை. வேறுவேறு பொருள்கள்மேல் எழுந்த தனிச்செய்யுட்களாக இருந்தாலும் பாடிய புலவன் ஓரெடுப்பிற் பாடியிருப்பானேல் தொடராத செய்யுட்களுக்கிடையேயும் புலவன்தன் சிந்தனைத் தொடர்பைக் காண முடியும், காணவேண்டும். திருக்குறள், தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம், முத்தொள்ளாயிரம் முதலிய பன்னூலின்கண் இத்தொடர்பு உளது. காப்பியம் என்பது ஒரு பெருங்கதை மேல் தோன்றிய இலக்கியத் தொடர்நூல். கதையாலும் யாப்பாலும் கட்டுப்கோப்பாலும் ஒருவன்தன் படைப்பாலும் காப்பியப் பனுவல் என்பது ஓர் உயிரோடும் ஓர் உடம்பாகும்.

மீண்டும் கூறுகின்றேன்; தவற்றெண்ணம் வரக்கூடாது எபதற்காகக் கூறுகின்றேன். காப்பியங்களில் தனிப்பாடல்களைப் பொறுக்கித் தொகுத்துப் படிப்பதைப் பரப்புவதைப் பதிப்பதை நான் இகழவில்லை. ஒரு தனிப்பாடலின் சொல் நயத்தையோ பொருள் நயத்தையோ ஓசை நயத்தேயோ கண்டு காட்டுவதை நான் இகழவில்லை. பல்வேறு தொழில்களில் ஈடுபட்ட மக்களிடை எனைத்தானும் இலக்கியம் பரவேண்டும் என்பது என் விழைவு. அப்போதுதான் மக்கள் வாழ்வில் சிந்தனை வளமும் உணர்ச்சிப் பாய்ச்சலும் இருக்கும். பாடல் எவ்வளவு எனை வகையாற் பரவினும் அதனை இலக்கிய அன்பர்கள் உளங்குளிர வரவேற்பார்கள். மேலும் காப்பியமாவது தொகுத்த பாடல், திரட்டுப் பாடல் இல்லாவிட்டாலும், தனிப்பாடல்களின் தொடர்ச்சிதானே. தனித் தனிச் செய்யுட்களில் ஆழமான நுண்ணிய பயிற்சி இல்லாவிட்டால் சடக்கென முழுக்காட்சி புலப்பட்டு விடுமா?

இராமாயணம் சொல்தோறும், தொடர்தோறும், பெயர்தோறும், வினைதோறும் மிக்க சுவை பொதிந்தது. 'விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்' என்ற பாராட்டு கம்பனுக்கே தகும். சீனித்துளிகளும் இனிக்குமாப் போல் அவன் பாடலின் ஒரு சீரும் கவிச்சுவை தருவது. 'சுட்டது குரங்குஎரி, சூறையாடிடக் கெட்டது கொடிநகர்' என்று இராவணன் நேரா இலங்கைக்கு நேர்ந்த அழிவைக் கொதித்துப் பேசுகின்றான். கேவலம் ஒரு குரங்கு

நெருப்பு வைக்க அழிந்தது எது தெரியுமா? ஏதோ ஒரு நகரம் அன்று, தலைநகரம் என்பதைக் காட்டுவதற்காக, கொடி நகர் என்று கூறுகின்றான். நெருப்பு நகரை மட்டுமன்று, உயிர் கொடுத்துக் காக்க வேண்டிய கொடியையும் சேர்த்து எரித்தது என்பது குறிப்பு. இலங்கை எரியூட்டு படலத்தின் முதற் செய்யுளிலேயே 'கொடியையும் பற்றி விதானம் கொளுத்தி' என்று தொடங்குகின்றார் கம்பர். கெட்டது கொடிநகர் என்ற தொடரில் கொடி என்ற ஒருசீர் அடையால் தலைநகர் என்பதனை அறிவிப்பதோடு, கொடியும் கெட்டது என்பதனை அறிவித்து விடுகின்றார் புலவர். இதனால் இராவணனது சீற்றப் பெருக்கத்திற்கு உரிய காரணம் தெளிவாகின்றது. அநுமன் இலங்கையில் வைத்த நெருப்பு செல்லாத இடமெல்லாம் சென்று பரந்து இராவணன் மாளிகையையும் பற்றியது என்று மொழியுமிடத்து, 'ஊரை முற்றுவித்து இராவணன் மனைபுக்கது உயர்தீ' என்று பாடுவர் புலவர்; இத்தகைய அழிவெல்லாம் செய்த தீயைக் கொடுந்தீ என்று அடையிட்டுக் கூறாது உயர்தீ என்று கூறினார், அது கற்பு வெளிப்பாடாதலின்.

கோனகர் முழுவதும் நினது கொற்றமும்
சானகி யெனும்பெயர் உலகீன் றம்மனை
ஆனவள் கற்பினால் வெந்த தல்லதோர்
வானரம் கட்டதென் றுணர்தல் மாட்சியோ.

என்று வீடணன் அநுமன் வைத்த தீயைக் கற்புத் தீயாகக் காண்கின்றான். மதுரையை அழித்த தீயை 'கற்பு உண்ண' என்று இளங்கோவும் எடுத்துக் காட்டுவர். 'உயர்தீ' என்று நெருப்புக்குக் கொடுத்த ஒருசீர் அடையால் கம்பர் கருத்துத் தெளிவாகின்றது.

இலங்கை யழிவுகண்டு மனம் கொதித்த இராவணவேந்தன் பலர் கருத்தை அறிய அவை கூட்டுகின்றான். படைத்தலைவர் பலர் கருத்துரை கூறியபின், தம்பி கும்பகருணன் தன் கருத்தை மொழிகின்றான். இவன் அறம் இது என்பது தெரியாதவன் அல்லன். தெரிந்தும் அண்ணன் உறவை விட விரும்பாத குடிப்பற்றுடையவன்; பூசல் குடிக்குள் இருக்கலாமே தவிரப் புறம்படலாகாது என்ற மானமுடையவன்; அண்ணன் உறவை ஒழிக்க விரும்பா விடினும் அவன் செயலை யாரினும் கண்டிக்க முற்படுபவன்; அன்பு விடாதே அறம் கூறுபவன்.

ஓவியம் அமைந்தநகர் தீயுண உளைந்தாய்
கோவியல் அழிந்ததென வேறொரு குலத்தான்
தேவியை நயந்துசிறை வைத்தசெயல் நன்றோ
பாவியர் உறும்பழி இதிற்பழியும் உண்டோ?

'வனப்புடைய தலைநகர் தீப்பட்டுவிட்டதே என்று வருந்துகின்றாய். அரசநீதியே அழிந்தது என்று சொல்லும் படியாக ஒன்று செய்துவிட்டாயே, அதற்கன்றோ வருத்த வேண்டும். ஒரு மன்னன் இன்னொரு மன்னனைச் சிறைவைக்கலாம், அவன் தேவியைக்கூடச் சிறை வைக்கலாம். பாவமும் பழியும் இல்லை. நீ செய்த செயல் அத்தகையதா? பகைவனின் மனைவியென்று இகல் காரணமாகச் சிறையிட்டிருந்தால் நன்று. நீயோ வேறொரு குலத்தவன் தேவியை **'நயந்து'** காமத்தால் விரும்பிச் சிறை வைத்துள்ளாய். இதுவே பெரும் பாவம், பெரும்பழி' என்று கூறுகிறான். இத்தனிப் பாடலின்கண் நயந்து என்னும் ஒரு தனிச் சொல் - ஒரு வினையெச்சமே இலக்கிய உயிர்ச்சொல்லாகும். ஒரு சொல்லால் பாத்திரத்தின் உள்ளம் புலனாகின்றது. ஆசில் பரதாரத்தைச் சிறையடைப்பதோ, புகழ்மேல் காதல் கொள்வதோ, மானம் பேசுவதோ குற்றமில்லை. இச்சிறையடைப்பும் புகழ்ப்பற்றும் மானப் பேச்சும் வீரத்தொடு தொடர்பாக இருந்தால் யார்க்கும் அஞ்சத்தானே வேண்டும்?

> ஆசில்பராரமவை அஞ்சிறை யடைப்போம்
> மாசில்புகழ் காதலுறு வேம்வளமை கூரப்
> பேசுவது மானமிடை பேணுவது காமம்
> கூசுவது மானிடரை நன்றுநம கொற்றம்,

என முரண்படக் காரண காரியங்களை அமைத்து, 'இடை பேணுவது காமம்' என்ற தொடரால், விரும்பியது கடை போகாது என்று இழுப்பான ஓசையால் உணர்ந்துகின்றான் கும்பகருணன். இவ்வாறு தனிப்பாடலை ஆராய்வது வேண்டும். இவ்வாராய்ச்சி முழுப் பார்வைக்கு உய்த்து விடும். கொடிநகர் என்ற சொல்லால் இராவணனது மானப் பெருக்கும், நயந்து என்ற சொல்லால் கும்பகருணனது அற நோக்கும், உயர் தீ என்ற சொல்லால் புலவனது கருத்துரையும் சங்கிலித் தொடரில் ஒரு வளையமாகக் கிடந்து இலங்கக் காண்கின்றோம். எவ்வளவுக்கு எவ்வளவு காப்பியத்தின் ஓர் உறுப்பாக, காப்பிய ஓட்டத்தில் ஓர் அடியாக, காப்பிய மாளிகைக்கண் ஒரு கல்லாகத் தனிப்பாடலைக் காண்கின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு புலவனது நெடிய சிந்தனைப் படைப்பை நாம் வெளிப்படுத்தியவர்கள் ஆவோம்.

## பொருந்தா நயம்

இராமாயணம் நயமலிந்த தனிச் செய்யுட்களால் நிரம்பியது எனினும், அந்நயத்தை முழுமையின் கூறாகக் காண்பது காப்பிய இனிமையாகும். 'காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்' என்பது

கொண்டு இராமாயணத்துக்குக் கண்டபடி சொன்னயம் பார்ப்பது சுவையற்ற ஒரு வழக்காகிவிட்டது. இராமனை நாடு துறந்து காடேகச் சொல்ல வந்த கைகேசி,

> பூழிவெங் கானம் நண்ணிப்
> புண்ணியத் துறைகள் ஆடி
> ஏழிரண் டாண்டின் வாவென்
> றேவினன் அரசன் என்றாள்,

என்பது கம்பர் பாடல். பதினான்கு என்று கூறாது 'ஏழிரண்டு' என்று கூறியதற்குப்பலர் நயஞ்சொல்லக் கேட்டிருப்பீர்கள். வனத்திற்குப் பதினான்கு ஆண்டுகள் போகவேண்டும் என்று மொழிந்தால் பதினான்கு என்ற பெருந்தொகையைக் கேட்டவுடன் இராமன் மறுத்துவிடுவானாம்; குறுந்தொகையாகத் தோன்றுவதற்காக ஏழிரண்டு என்று கைகேசி மொழிந்தாளாம். இவ்வாறு இத்தொகைச் சொல்லுக்கு ஒரு நயம் உரைப்பர். அது கருத்தாயின் ஈரேழ் என்றல்லவா இன்னும் சுருக்கமாகச் சொல்லியிருக்க வேண்டும்? உலகம் எல்லாவற்றையும் பரதனுக்க ஆளக் கொடு; தாழிருஞ் சடைகள் தாங்கு; தாங்கவரும் தவமேற்கொள்ளு; பூழி வெங்கானம் நண்ணு; புண்ணியத் துறைகள் ஆடு என்று ஒன்றின் ஒன்று மிகுதியாகக் கேட்கும் இராமன் பதினான்கு என்றால் பயந்தா இருந்து விடுவான்? போக மறுத்தா விடுவான்? மேலும் கைகேசி கூனிசொற்கேட்டுத் தீயவையாவினும் சிறந்த தீயாளாகியபின், கணவனுக்கே இரக்கமில்லாத அரக்கியாகியபின், நளினமாகச் சொல்வாள் என்று எதிர் பார்க்கலாமா? வரத்தின் வெறி குடித்த அவளுக்குச் சொன்னெறி யாதும் தெரியாது. 'தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்' எனவும். 'கொன்றுழல் கூற்றம் என்னும் பெயரினிற் கொடுமை பூண்டாள்' எனவும் கம்பரே சித்திரித்த பின்னர், அக்கூற்றச்சி வாயிலிருந்து கேட்பவன் மனம் நோவக் கூடாதே என்று 'ஏழிரண்டு' என்னும் அடக்கச் சொல் பிறந்தது என்பது பொருத்தமா? கூனியின் சூழ்வினைக்குப்பின் கைகேசியின் நற்குணம் முற்றும் மாறிவிட்டது. 'மரந்தான் என்னும் நெஞ்சினள் நாணாள் வசை பாராள்' எனவும், 'கேகயத்து அரசன் பெற்ற நஞ்சு' எனவும், 'கேடு சூழ் மாகயத்தி' எனவும் அவள் திரிகுணத்தைப் புலவர் எடுத்துக் காட்டுவர்.

காணும் நயம் பாத்திரத்தின் குணத்திற்குப் பொருந்த வேண்டும். முழுப் பார்வை பார்ப்பதாற்றான் பொருத்தமோ பொருத்தமின் மையோ தென்படும். இராமன் ஏற்றுக்கொள்ள வேண்டுமே என்று இனிய முறையிற் கைகேசி பெய்த சொல்லன்று இது. இன்னா

முறையில் படைக்கப்பட்டவள்மேல் இனிய நயம் ஏற்றுதல் ஆகாது. எண்களைப் பெருக்கல் வாய்பாடாகச் சொல்லுதல் தமிழ் மரபு. 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு (32) பொருளும்', 'நாலிரண்டாகும் (8) பாலுமார் உண்டே' என்று தொல்காப்பியத்தும், 'எண்ணெண்கலையோர் (64) இருபெருவீதியும்', 'எண்ணான்கு இரட்டி(64) இருங்கலை பயின்ற', 'ஆரிய மன்னர் ஐயிருபதின்மரை' (100) என்று சிலப்பதிகாரத்தும், 'அருள் வாதவூரருக்குச் செப்பிய நாலெட்டில்(32) தெய்வீகம்', 'மூவிரு முகங்கள் (6) போற்றி' எனப் பிறவிடத்தும் இம்மரபுத் தொடர் வருதலைக் காணலாம். ஒரு காப்பியத்தின் தனிப்பாடலுக்கு நயம் காண்பதுகூட முழுமைக்கு ஒத்துவருவதாக இருத்தல் வேண்டும். இவ்விலக்கியத்திறனைக் காட்டுவதற்காகவே இதுகாறும் 'ஏழிரண்டு' என்பதன் மேல் வைத்து விளக்கினேன்.

## உலகப்பார்வை

காப்பியத்தைக் கற்கும் நாம் அதனை எப்படிக் கற்க வேண்டும்? ஒரு சொல்லுக்கு ஒரு சொல், ஓரடிக்கு ஓரடி, ஒரு செய்யுளுக்கு ஒரு செய்யுள், ஒரு படலத்துக்கு ஒரு படலம், ஒரு காண்டத்துக்கு ஒரு காண்டம் விடாத் தொடர்பு உடையது, கருத்துப் பின்னிக் கிடப்பது. புலமை பிரிக்க வாராதது என்ற முழுப்பார்வையோடு ஒருமைப்பார்வையோடு கற்க வேண்டும். இது காப்பியக் கல்வி முறை. ஆனால் காப்பியம் படைக்கும் புலவன் கண்ட நெறி என்ன? அவன் பார்க்கும் பார்வை என்ன? நாம் காப்பியத்தை முழுமையாகப் பார்க்கின்றோம். அவன் உலகத்தையே காப்பியமாகப் பார்க்கின்றான். உலகமே அவன் காப்பியத்தின் இயக்கமாக நினைக்கின்றான். உலகப் பொருள்களைத் தனித்தனிப் பொருள்களாக அவன் காண்பதில்லை. ஒவ்வொரு பொருளையும் காப்பியத்தின் ஒரு கூறாகப் பாவிக்கின்றான். சுருங்கக் கூறின் புலவனுக்கு உலகம் என்பது காப்பியவுலகமே.

தயரதன் இறந்து கிடக்கின்றான். பரத சத்துருக்கனர் கேகய நாட்டில் பாட்டன் வீட்டில் உள்ளனர். இராம இலக்குவர் வனம் சென்று விட்டனர். கடன் செய்வதற்கு உரிய மக்களில் ஒருவர்கூடப் பக்கத்தில் இல்லை. ஈமக் கடன் செய்வதைத் தள்ளிப் போடலாம். அரசுக்கடன் செய்வதைத் தள்ளிப்போட முடியுமா? அரசில்லாமல் நாடு ஒரு கணமும் ஓடாது. 'உறங்குமாயினும் மன்னவன் தன் ஒளி கறங்குதெண்டிரை வையகம் காக்கும்' என்பர் சிந்தாமணித் தேவர். கி.பி. பதினோராம் நூற்றாண்டில் சோழன் இராசாதிராசன் கொப்பைப் போர்க்களத்தே உயிர் துறந்த போது, அங்கேயே அக்கணமே முடிசூடப் பெற்றான் அவன் தம்பி இராசேந்திர தேவன்.

ஆட்சி இடையறவின்றி இயங்கிற்று. இந்த அரிய வரலாற்று முறையை, 'கொப்பையிற் பொரு களத்திலே முடிகவித்தவன்' என்று குறிப்பர் பரணிச் செயங்கொண்டார். அமெரிக்கப் பெருநாட்டில் தலைவன் கென்னடியார் சுடப்பட்டு உயிர் நீத்தவுடனே, துணைத் தலைவன் சான்சனார் வானூர்தி தன்னிலேயே அரசத் தலைமை யேற்றதை நம் காலத்தில் கண்டிருக்கிறோம். தலைவன், துணைத்தலைவன் என்ற பதவிகள் அமைப்பது ஏற்றுக்கு? அரசியக்கம் ஒரு கணமும் அற்றுப் போகாது நிகழவேண்டும் என்பதற்காக அன்றோ? ஆதலின் தயரத மன்னன் இறந்த நிலையில் மக்கள் நால்வரும் ஊரில் இல்லா நிலையில்; அயோத்தியாட்சியை யார் இயக்குவது? புலவன்தான் இயக்குவான். புலவனுடைய கற்பனைதான் இயக்க முடியும். இல்லாத நல்லதை இட்டு நிரப்ப வல்லவன் புலவன்.

மீனீர் வேலை முரசியம்ப
    விண்ணோர் ஏத்த மண்ணிறைஞ்சத்
தூநீர் ஒளிவாள் புடையிலங்கச்
    சுடர்த்தேர் ஏறித் தோன்றினான்
வானே புக்கான் அரும்புதல்வன்
    மக்கள் அகன்றார் வருமளவும்
யானே காப்பன் இவ்வுலகை
    என்பான் போல எறிகதிரோன்.

தயரத குலத்துக்கு ஆதித்தன் முதல்வன்; அம்முதல்வன் நிலையானவன். யார் இருப்பினும் இறப்பினும் அவன் தன் குலத்தின் ஆட்சியைச் செய்யமுடியும். ஆதலால் அயோத்தியில் அரசாள்வார் இல்லாமை அறிந்த கதிரோன் கடல் என்னும் முரசு ஒலிக்கக் கதிர் என்னும் வாட்படை ஏந்தித் தேர் ஏறித் தயரதன் மக்கள் வரும் வரை நானே காப்பேன் இக் கோசல நாட்டை என்று புறப்பட்டு வந்தானாம். இவ்வாறு தயரதன் இறந்த அன்று ஞாயிற்றின் உதயம் கம்பருக்கு அரசவுதயமாகத் தோன்றுகின்றது.

சுக்கிரீவன் முடிசூடு நாள் வந்துவிட்டது. இராமன் தன் அறிவுடைத் தம்பியைச் சுக்கிரீவனுக்கு முறையால் முடிசூடும்படி ஏவினான். அனுமன் வேண்டுவன எல்லாம் கொணர்ந்தான். அன்று ஞாயிறு வழக்கம்போல் உதயமாகின்றது. காப்பியப் புலவன் உலக ஞாயிற்றைக் காப்பிய ஞாயிறாகவே கருதுவான்; அதனைக் காணும் உலகில் உதிப்பதாகக் கருதான்; தன் கற்பனையுலகில் உதிப்பதாகவே கருதுவான். உலகம் தன் காப்பிய நடக்கைக்கு இருப்பதாகத் தான் அவன் கருத்து.

புதல்வன் பொன்மகு டம்பொ றுத்தலான்
முதல்வன் பேருவ கைக்கு முந்துவான்
உதவும் பூமகள் சேர வொண்மலர்க்
கதவம் செய்ய கரத்தின் நீக்கினான்.

சுக்கிரீவன் கதிரோன் மைந்தன் அல்லவா? மைந்தன் கிடைத்தற்கரிய முடிசூடுவான் என்றால் முந்திப் பார்க்கும் உவகை தந்தைக்கு இருக்காதா? அதனால் கதிரவன் என் செய்தானாம்? தன் கதிர்க்கரங்களால் தாமரை மலர்களின் இதழாகிய கதவுகளை விரைவாகத் திறந்தானாம். ஏன்? அங்கு வாழும் திருமகள் முடிசூடும் தன்மகனை விரைந்து சேரவேண்டும் என்பது அவன் ஆசை. கதிரவன் உதயத்தை இயற்கைப் போக்கு என்று கருதாது காப்பியத்தின் போக்காகக் காண்கின்றான் புலவன். ஞாயிற்றைக் காப்பியத்தின் ஒரு பாத்திரமாகவே ஆக்கிக் கொள்கின்றான் புலவன்.

பொன்மானைப் பிடிக்கச் சென்ற இராமனைத் தேடி இலக்குவன் போய்விட்டான். பருணசாலையில் சீதை தனித்துள்ளாள். இதுவே சமயம் என்று கருதிய இராவணன் தவக்கோலம் தாங்கி மெத்தென நடந்து அருந்ததி போலும் சீதை இருந்த பருண சாலையை அடைந்தான். அவள் அழகைக் கண்ணுற்றதும் தனக்கு இருபது கண்கள் போதா எனவும் முக்கோடி வாணாளும் போதுமா எனவும் காமவுள்ளத்துள் கற்பனை செய்தான். துறவுக் கோலத்தைப் பார்த்த சீதை நல்வரவு கூறி இருக்கை நல்கினாள். திரிதண்டத்தைப் பக்கத்தில் வைத்துவிட்டு இராவணத் துறவி சாலையில் இருந்தபோது, வஞ்சகம் அற்ற சீதைக்கு யாதும் தெரியவில்லை. ஆனால் உலகம் அறியாமையுடையதா? அஃறிணைகளுக்கு நம்போல் உணர்த்தும் ஆற்றல் இல்லாவிட்டாலும் நம்மினும் உணரும் ஆற்றல் உண்டல்லவா? முல்லைக் கொடிகள் பாரியை நாத்தழும்பேறப் பாடவில்லை; தம் வாட்டத்தைப் பாடியுணர்த்தும் வன்மை அவைகட்கில்லை; எனினும் வாட்டம் போக்கும் வள்ளல் பாரி என்பதனை அக்கொடிகள் உணர்ந்து கொண்டன.

நடுங்கின மலைகளும் மரனும் நாவவிந்து
அடங்கின பறவையும் விலங்கும் அஞ்சின
படங்குறைந் தொதுங்கின பாம்பும் பாதகக்
கடுந்தொழில் அரக்கனைக் காணுங் கண்ணினே.

அரக்கத் துறவியைத் தனித்த சீதைமுன் கண்ட அளவிலேயே அருகில் உள்ள மலைகளும் மரங்களும் என்னாமோ என நடுங்கின. பறவைகள் பகற்பொழுதிலேயே குரல் ஒடுங்கிக் கூட்டில் ஒதுங்கின.

அசையாப் பொருள்களும் தம் அருகில் நடக்கும் காப்பிய மாந்தர்களின், நிகழ்ச்சியை எவ்வாறு கருதின; கருதிப் பங்கு கொண்டன என்று காப்பிய அகத்திற்கும் உலகப் புறத்திற்கும் தொடர்புபடுத்துகின்றார் கம்பர். இத்தொடரின் அருமை பின்வரும் பாடற்றொடர்பால் விளங்கும்.

ஏத்தினள் எய்தலும் இருத்திர் ஈண்டென
வேத்திரத் தாசனம் விதியின் நல்கினாள்
மாத்திரி தண்டயல் வைத்த வஞ்சனும்
பூத்தொடர் சாலையின் இருந்த போழ்தினே.

நடுங்கின மலைகளும் மரனும் நாவவிந்து
அடங்கின பறவையும் விலங்கும் அஞ்சின
படங்குறைந் தொதுங்கின பாம்பும் பாதகக்
கடுந்தொழில் அரக்கனைக் காணுங் கண்ணினே.

இருந்தவன் யாவதிவ் விருக்கை யீங்குறை
அருந்தவன் யாவனீர் யாரை என்றலும்
விருந்தினர் இவ்வழி விரகி லாரெனாப்
பெருந்தடங் கண்ணவள் பேசல் மேயினாள்.

வந்த துறவியை இருங்கள் என்று சொல்லிச் சீதை இருக்கை யளித்தாள்; அவனும் தண்டத்தை அருகில் வைத்துவிட்டு இருந்தான் என்பது முதற்பாட்டு. இருந்தவன் இச்சாலை யாருடையது? இங்கு வாழ்பவன் யாவன்? நீ யார்? என்று கேட்டான். இவ்விருந்தினர் யாதும் அறியாதவர் என்று கருதிப் பேசத் தொடங்கினாள் சீதை என்பது மூன்றாவது பாட்டின் கருத்து. இவ்விரண்டிற்கும் இடையே இருப்பது 'நடுங்கின மலைகளும்' என்ற பாட்டு. காப்பியத் தன்மை அறியாதார்க்கு இந்நடுப்பாட்டு வேண்டாதது போலவும் இடைப்பிறவரல் போலவும் தோன்றும். 'பூத்தொடர் சாலையின் இருந்த போழ்தினே' என்று முதற்பாட்டு முடிதலாலும், மூன்றாவது பாட்டு 'இருந்தவன் யாவது, எனத் தொடங்குதலாலும், நடுப்பாட்டு தொடர்பற்றது போலவும் தோன்றும். நடுப்பாட்டுத்தான் காப்பிய வனப்புப் பாட்டு. கதை காப்பியம் அன்று; கதை நிகழ்ச்சிகள் மாத்திரம் காப்பிய நிகழ்ச்சிகள் அல்ல; கதையில் வரும் மாந்தர்கள் மட்டும் காப்பிய மாந்தர்கள் அல்லர்; கதை கூறும் புலவன் காப்பியப் புலவன் அல்லன். கதை எப்போது காப்பியமாக உருவெடுக்கின்றது எனின், கதையை மையமாக வைத்து உலகத்தை உட்படுத்தும் போது, மாந்தர்களை மையமாக வைத்து மற்றைய உயிர்களைப் பிணைக்கும்போது, கதை மாந்தர்களின் நிகழ்ச்சிகளுக்குச்

சுற்றுப்புறங்களைத் தொடுக்கும் போது, சுருங்கக் கூறின் கதையை உலகமயம் ஆக்கும்போது காப்பியத் தன்மை ஏறுகின்றது.

## பால காண்டமும் அயோத்தியா காண்டமும்

அயோத்தியா காண்டமே கதையின் உண்மையான துவக்கம் என்பர் வ.வெ.சு. ஆனால் கதைத்துவக்கம் வேறு; காப்பியத்துவக்கம் வேறு. காப்பியத்துள் அடங்குவது கதை. கதை என்பது ஒரு முளை, அவ்வளவே; அம்முளை தோன்றுவதற்கு என்னென்னவோ இயற்கைச் சூழ்நிலைகள் வேண்டும். அம்முளை வளர்ந்து பருத்துச் செடியாகி மரமாகிக் காயும் கனியும் பயக்கலாம். அவ்வளர்ச்சிக்கு உலக ஐம்பூதத்தின் துணையும் வேண்டு மல்லவா? உலகச் சூழலே காப்பியம் ஆம். அச்சூழ்நிலையை விரித்து எழுதுபவன் காப்பியன். எவ்வளவு விரித்து எழுதுவது என்பது கதையின் ஓட்டத்தையும் கற்பனையளவையும் பொறுத்தது. கீரை விதைப்பவன் பெருங்குழி தோண்டான்; நீர் விசை வைத்துத் தண்ணீர் பாய்ச்சான்.

அயோத்தியா காண்டம் கதை; பாலகாண்டம் காப்பியம். இங்ஙனம் பெரும்பாலும் கருதவேண்டும். முடிசூட வந்த இராமன் வனம் செல்கின்றான் என்பது கேட்ட அயோத்தி நகர மாந்தர்களின் பல்வேறு அவலங்களைப் பாடுகின்றார் கம்பர். அவர்கள் வாய்விட்டு அழுத பேரோசை விண்ணை முட்டியது. மண் செய்த பாவம், பெண் செய்த பாவம், கண் செய்த பாவம் என்று சொல்லி அழுகின்றனர். பரதன் ஆளான், அவன் ஆளா விட்டாலும் இராமன் இனி மீளான், இன்னும் நாம் மாளாதிருக்கின்றோம் என்று பன்னிப் புலம்புகின்றனர்.

> பெற்றுடைய மண்ணவ ளுக்கீந்து பிறந்துலகம்
> முற்றுடைய கோவைப் பிரியாது மொய்த்தீண்டி
> உற்றுறை தும்யாரும் உறையவே சின்னாளில்
> புற்றுடைய காடெல்லாம் நாடாகிப் போமென்பார்.

கேவலம் இம்மண்ணைக் கைகேசி ஆளட்டும். உலக அரசன் பின்னே நாம் சென்று விடுவோம். போய்விட்டால், இந்நாடு காடாகும்; அவன் சென்ற காடு நாடாகும் என்று அயோத்தியர் புலம்பிச் சொல்லிய அளவில் நிற்கவில்லை; இராமன் கூடவே புறப்படவும் செய்தனர். இராமன் செலவு கண்ட சிலர் மாரடைப்பினால் மாண்டனராம்; துயர மிகுதியால் சிலர் அழுவதுகூடத் தெரியாது அசை வற்று இருந்தனராம்; சிலர் தம் கண்களைப் பெயர்த்துக் கொண்டனராம்; சிலர் மென்துகிலைக் களைந்தெறியச் சிற்றாடை

புனைந்தனராம்; மாந்தர்களின் கண் மழையால் தெருத்தூசி அடங்கியதாம்.

ஏவிய குருசில்பின் யாவர் ஏகிலார்
மாவியல் தானையம் மன்னை நீங்கலாத்
தேவியர் ஒழிந்தனர் தெய்வ மாநகர்
ஓவியம் ஒழிந்தன உயிரிலா மையால்.

இராமன் பின் செல்லாதார் யார் என்று கணக்கெடுக்கின்றார் கம்பர். தயரதன் மனைவியர் செல்லவில்லை, வாடும் கணவனை விட்டுச் செல்வது கூடாதென்பதற்காக. ஓவியங்கள் உடன் செல்ல முடியவில்லை. ஏன்? அவற்றுக்கு உயிர் இல்லை. உயிருடைய எல்லாம் இராமன் பின் சென்றன எனவும் குடும்பம் குடும்பமாகக் கணவன் மனைவியெல்லாம் சென்றனர் எனவும் பரந்துபட விரிக்கின்றார் கம்பர். இப்பிரிவு பொருந்துமா? மிகையில்லையா? இராமன்பால் இப்பேரன்பு எல்லாக் குடிமக்கட்கும் எங்ஙனம் எழுந்தது? எவ்வளவு காலமாக எழுந்தது? அகப்பையில் வரவேண்டுமென்றால் சட்டியில் இருக்க வேண்டுமல்லவா? திருமணத்துக்கு ஓரழைப்புக் கொடுத்து விட்டுச் சாவில் ஆயிரம் இரங்கற் கடிதங்கள் எதிர்பார்க்கலாமா? இராமன்பால் அயோத்தி மக்கள் கொண்ட காதலை விரித்துரைப்பது பாலகாண்டம். அங்ஙனம் அவர்கள் காதல் கொள்ளுமாறு அவன் எளிமையாக நடந்து கொண்டதை எடுத்துக் காட்டுவது பாலகாண்டம்.

எதிர்வரும் அவர்களை எமையுடை யிறைவன்
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா
எதுவினை இடரிலை இனிதின் நுமனையும்
மதிதரு குமரரும் வலியர்கொல் எனவே.

அஃதைய நினையெம தரசென வுடையேம்
இஃதொரு பொருளல எமதுயிர் உடனேழ்
மகிதல முழுதையும் உறுகவி மலரோன்
உகுபகல் அளவென உரைநனி புரிவார்.

இவ்வாறு இராமனுக்கும் நகர மாந்தர்களுக்கும் நடந்த நல்லுரையாடலைப் பாலகாண்டத்தில் திருவவதாரப் படலத்தில் கற்கின்றோம். இராமன் சிறு பருவத்தனாயினும் தன் குடிகளைப் பார்க்கும்போதெல்லாம் மலர்ந்த முகத்தோடு தானே முற்பட்டு உங்கட்கு யாதும் குறைவில்லையே, குடும்பம் நலந்தானே, குழந்தைகள் வளந்தானே என்று உசாவினனாம். உன்னை

*அரசனாகப் பெற்ற நாங்கள் நலமாக இருப்பது ஒரு பெரிய காரியமா? என்று அக்குடிகள் மறுமொழிவார்களாம். முடியரசாயினும் இராமன் குடியரசுத் தன்மையுடையவன் என்று புலப்படுத்துகின்றார் புலவர். இராமன் காட்சிக்கு எளியனாகவும் பேச்சுக்கு இனியனாகவும் எங்கும் யாரிடமும் பழகியிராவிட்டால், அயோத்தியா காண்டத்து அவலச் சுவைக்கு அடிப்படையிருக்குமா? காகிதக் கோபுரமாக அல்லவா இருக்கும்!*

*பாலகாண்டத்து எழுச்சிப் படலம், வனக்காட்சிப் படலம், பூக்கொய் படலம், புனல் விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம் முதலியன காப்பியத்துக்கு உறுப்பு இயைபு உடையனவா? என்ன சுவையுடையன? என்று தள்ளுவார் பலர். இப்படலங்கள் மிகை என்பார் பலர். நான் கூறத் துணிவேனாயின் இராமகதையை இராம காப்பியம் ஆக்கும் இடங்கள் இவையென்று கூறுவேன். இப்படலங்களைப் பாடுவதற்குத்தான் கம்பர் சிந்தனைப் பாடுபட்டிருப்பார். விதவிதமாகப் பாடவேண்டும் என்று கற்பனைப் பாடுபட்டிருப்பார். நகரமே திரண்டு இராமன் திருமணம் காண மிதிலைக்குச் செல்கின்றது. செல்கின்றார்தம் செயலை ஓவியமாகக் காட்டும் கடப்பாடு உடையது காவியம். புகை வண்டியில் ஏற்றி ஓரிடத்து இறக்கிவிட்டாற் போல முடிப்பது காப்பியம் அன்று; விரிப்பது காப்பியம்.*

தன்னைக் கண்டாள் மென்னடை
　　கண்டாள் தமரேபோல்
உன்னக் கண்டாள் தோழமை
　　என்றாள் துணையென்றாள்
உன்னைக் கண்டார் எள்ளுவர்
　　பொல்லாது உடுநீயென்று
அன்னக் கன்னிக் காடை
　　யளிப்பான் அமைவாளும்.

பொன்னே தேனே பூமக
　　ளேகாண் எனையென்னாத்
தன்னேர் இல்லாள் அங்கொரு
　　கொய்பூந் தழைமூழ்கி
இன்னே என்னைக் காணுதி
　　நீயென் றிகலித்தன்
நன்னீலக்கண் கையின்
　　மறைத்து நகுவாளும்.

கடிமணம் காணப் புறப்பட்ட மகளிரில் இருவர்தம் வழிச் செயல்களை இப்பாடல்கள் கூறுகின்றன. அன்னத்தைக் கண்ட ஒருத்தி அதனைத் தோழி எனவும் துணை எனவும் கருதினாளாம்; தன் தோழி ஆடையின்றி யிருந்தால் இகழ்ச்சியாகுமே என்று எண்ணி உடுத்திக்கொள் என்று அன்னக் கன்னிக்குத் தான் கொண்டு வந்த ஆடையை அளித்தாளாம். இஃது ஒரு காட்சி. இன்னொருத்தி தோழியோடு உடன் வந்தாள்; சோலைக்குள்ளே ஒளிந்துகொண்டு என்னைக் கண்டுபிடி என்று கண்ணாம் பூச்சி விளையாடினாள். தோழி காணமாட்டாதபோது பின்னே வந்து அவள் கண்ணைப் பொத்திக் கேலி செய்தாள். இஃது ஒரு காட்சி. இங்ஙனம் முந்நூறு செய்யுட்கள் கொண்ட இப்படலங்களில் ஆடவர் மகளிரின் ஆர்வச் செயல்கள், தயரத குடும்பத்தாரின் பெரும் புறப்பாடு, படைகளின் செலவு, சோலைக்காட்சி, மலைக்காட்சி, விளையாட்டுக் காட்சி எல்லாம் இரத்தினக் கம்பளம் விரித்தாற்போலக் காட்டப்படுகின்றன. இத்திருமணப் புறப்பாட்டை இவ்வளவு இன்ப எழுச்சியாகப் பாடாவிட்டால், எல்லாக் குலத்தாரும் திரண்டு கூடி ஆடிப்பாடி ஆசையோடு புறப்பட்டனர் என்று பாடாவிட்டால், அயோத்தியின் துன்பக்களம் தொடர்புடைய களம் ஆகுமா? மன்னன் வனம் புகுவான் என்ற மாற்றத்தைக் கேட்டு, எல்லாருமே உடன் போவோம் என்ற அவல எழுச்சியைத் தோற்றுவிக்க முடியுமா? அவலக் காண்டம் எனத்தகும் அயோத்தியா காண்டத்துக்கு ஏற்ற இன்பக் காண்டம் பாலகாண்டம் என்று கொள்ளுங்கள்.

### காப்பியப் பாட்டுக்கள்

இடைக்காலப் புலவர் ஒருவர் கூறினாராம், இராமாயணப் போர் அடித்தேன்; 2000 தான் நெல், 8000 பதர் என்று. இக்கருத்துத்தான் இராமாயணம் கற்பவர் பலருக்கு இன்று ஊறிக்கிடக்கின்றது. கதைத் தொடர்பான பாட்டுக்கள் தாம் இராமாயணமாக அவர்களுக்குப் படுகின்றன. ஏன்? புரிதற்கும் சொல்வதற்கும் எளிமையாக இருக்கின்றன. பேச்சுப் பாட்டுக்கள்தாம் இராமாயணத்தில் பலருக்குப் பிடித்த பாட்டுக்கள்.

மன்னவன் பணியன் றாகின்
    நும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வம்
    அடியனேன் பெற்ற தன்றோ
என்னினி உறுதி யப்பால்
    இப்பணி தலைமேற் கொண்டேன்

மின்னொளிர் கானம் இன்றே
போகின்றேன் விடையும் கொண்டேன்.

உன்பெருந் தேவி யென்னும்
உரிமைக்கும் உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி யென்னும்
வாய்மைக்கும் மிதிலை மன்னன்
தன்பெருந் தனயை யென்னும்
தகைமைக்கும் தலைமை சான்றாள்
என்பெருந் தெய்வம் ஐயா
இன்னமும் கேட்டி என்பான்.

இங்ஙனம் வரும் உரையாட்டுச் செய்யுட்களே பொதுவாகப் பல்லோர் உள்ளத்தைக் கவருகின்றன. தயரதன் - விசுவாமித்திரன் பேச்சு, தயரதன் - கைககேசி பேச்சு, சூர்ப்பனகை - இராமன் பேச்சு, வாலி - இராமன் பேச்சு, சீதை - அநுமன் பேச்சு, கும்பகருணன் - வீடணன் பேச்சு என்ற இக் கட்டங்கள் கருத்துச் சுவையுடையன வாயினும், சொன்னலம் மலிந்தன வாயினும், காப்பியத் தன்மை நிரம்பியன அல்ல. பேச்சு வழக்கில் எவ்வளவு பேசுகின்றோம். எவ்வளவு சொல் அளந்து பேசுகின்றோம்; கேட்பார் மனம் பதிய எவ்வளவு பேசுகின்றோம். இங்ஙனம் வழக்கில் உரைநடையாகப் பேசுகின்றோம். இப்பேச்சைப் புலவன் செய்யுளாக்கி இருக்கின்றான். வழக்கு நடை செய்யுள் நடையாக மாறியிருக்கின்றது. அதனால் சில புது நலங்கள் தோன்றுகின்றன. ஆதலின் காப்பியத்து வரும் பேச்சுப் பகுதிகளை யாப்பு நடைப்பட்ட ஒருவகை வழக்குப் பகுதிகளாகவே மதிக்க வேண்டும்.

மெய்யாகக் கூறின் அந்த எண்ணாயிரம் பாட்டுக்களைப் பாடுவதற்குத்தான் புலவன் சிந்தித்திருப்பான், தயங்கித் தயங்கிப் பாடியிருப்பான், ஓவிய மாற்றம் எங்ஙனம் செய்வது என்று களைத்திருப்பான். ஒரேயடியில் நூறு பேச்சுப் பாட்டு யாத்து விடலாம். 'இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும் அம் என்றால் ஆயிரமும் ஆகாதோ' என்ற தொழிற்சாலை வேகத்தில் பேச்சுப்பாட்டுக்களை உண்டாக்கிக் குவிக்க முடியும். விழுந்த ஞாயிறு எழுவதன் முன் எழுநூறு பாடல்கள் பாடித்தள்ளுவது என்பது இத்தகைய கதைப் பாடல்களுக்குத் தான் பொருந்தும்.

அந்த எண்ணாயிரம் பாட்டுக்கள் தாம் இராமாயணக் கதையைக் காப்பியம் செய்யும் பாட்டுக்கள்; கம்பரைக் கதைப் புலவர் ஆக்காது காப்பியப் புலவர் ஆக்கும் பாட்டுக்கள். ஏனைப் புலவர்களின் காப்பியங்களில் இவ்வளவு காப்பியப் பாட்டுக்கள் இல்லை. கம்பர்

பாடுவதற்கு விரிந்த கதை பெற்றவர். அக்கதையை உலகத்தின் நாற்றிசையோடு தொடர்பு படுத்தி விரிந்த காப்பியம் செய்தவர். ஆதலால் காப்பியம் ஆவதற்கு எப்படலங்களை அமைத்தாரோ, எத்துணை ஆயிரம் பாடல்களைப் பாடினாரோ அவற்றை முதன்மையாகப் பார்ப்பது தான் காப்பியப்பார்வை. பாத்திரங்களை மாத்திரம் பார்த்துக் கொண்டிராது, அவற்றின் பேச்சுக்களை மாத்திரம் படித்துக் கொண்டிராது, இப்பாத்திரங்களுக்கு உலக வரங்கம் எவ்வண்ணம் தொடுக்கின்றார், மரஞ்செடி கொடி பறவை விலங்கு மலை நிலம் கடல் முதலானவற்றை எவ்வாறு கதைக்குப் பக்குவப் படுத்துகின்றார் என்று காண்பது காப்பியப் பார்வை. கதை என்பதுஅரிசி போல்வது; காப்பியம் என்பது சமையல் போல்வது. இவ்வேறு பாட்டை யுணர்ந்து வரும்காலம் கம்பர்தம் காப்பியத்தை முழுமையாகக் கற்குமாக, கற்பிக்குமாக, பரப்புமாக, எழுதுமாக.

# 2. காப்பியக் களங்கள்

இலக்கியப் பெருமக்களே!

நல்ல தலைப்புக்களாக இருக்கவேண்டும் என்ற ஆசையினால் சில கவர்ச்சியான தலைப்புக்களை நாம் அமைத்துக் கொள்கின்றோம்; தலைப்பைக் கேட்ட அளவிலேயே ஒரு மதிப்பு இருக்கவேண்டும் என்று விரும்புகின்றோம். ஆசைத் தலைப்பு பேசும்போது அல்லற்படுகின்றது. நம் பல்கலைக்கழகம் என்னை இவ்வாண்டுச் சொற்பொழிவாளனாகக் கேட்டபோது, கம்பர் என்னும் பொருள் குறித்துச் சொற்பொழிவேன் என ஒரு திங்கட்கு முன் எழுதினேன். எழுதியபின் ஒவ்வொரு நாளும் சொற்பொழியவேண்டும் தனித் தலைப்பு என்ன என்று சிந்தித்தேன். சிந்தனை ஒரு மலைப்பாயிற்று. மாணவர்கட்குக் கேட்கும் வினாத்தாள் என் நினைவுக்கு வந்தது. எண்ணிக்கைக்குப் பல வினாக்கள் கொடுத்துவிட்டு இவற்றுள் எவையேனும் இரண்டுக்கு விடையெழுதுக, மூன்றுக்கு விடையெழுதுக என்று குறிப்பிடுகின்றோம். எந்த இரண்டினை எடுப்பது என்று சில மாணவர் தடுமாறுகின்றனர்; சிறிது நேரம் ஒரு கேள்விக்கு விடையெழுதி மேல் கருத்து வராமையால் எழுதியதை அடிக்கின்றனர்; மறுபடி வேறொரு கேள்வியை விரும்புகின்றனர்; அதுவும் பாதியில் தடைப்படுகின்றது. ஏராளமாக இருக்கும்போது இரண்டொன்றைத் தேர்ந்தெடுப்பதில் எவ்வளவு மனத் தொல்லை, சிந்தனைத் தடுமாற்றம். நூறு தலைப்புகளில் இராமாயணம் குறித்துப் பேசலாம். எத்தலைப்பை மேற்கொண்டாலும் அதற்கு நூறு இருநூறு செய்யுட்கள் கிடைக்கும். விரிந்த காப்பியமாக இருப்பதாற்றான் இராமாயண மேடைகள் பல எழுந்துள்ளன. பேச்சாளர் பலர் வளர்ந்துள்ளனர். யார் எவ்வளவு நாள் எவ்வளவு மணி பேசினும் இராமாயணச் சுரங்கம் என்று முள தமிழ்ச் சுரங்கமாகவே உள்ளது. அச்சுரங்கத்துக்கு வளரும் போக்கின்றி வற்றும் போக்கில்லை.

## தலைப்புகள்

என் மூன்று நாள் தலைப்புகள் பொதுமையாகவும் இருக்கவேண்டும், புதுமையாகவும் இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டேன். இராம காதையை ஆசைபற்றி அறையலுற்றேன் என்றார் கம்பர். அந்த ஆசைக் கம்பரை நானும் ஆசைபற்றி அறையலுற்றேன். பாத்திரங்கள் பற்றியோ, வருணனை பற்றியோ, உவமைகள் பற்றியோ, ஓசை நயங்கள் பற்றியோ, சொல் விழுக்காடு பற்றியோ தனிக் கூறாகப் பேசுவதிலும், காப்பியம் என்பது பற்றிப் பல கூறாக மொழியலாமே என்ற சிந்தனை ஓடிற்று. ஒரு வாரத்திற்கு முன்தான் தலைப்புகள் உருவாயின. கடலைச் சிறு வாய்க்கால் ஆகவும், மலையைக் கற்குவியல் ஆகவும், மாளிகையைக் குடிசையாகவும், பெருஞ்சாலையை ஒற்றையடிப் பாதை ஆகவும் கருதலாமா? இராமாயணக் காப்பியத்தைத் தனிப் பாடல் தொகுதி போல் கருதலாமா? கருதும் பழக்கம் புலவர்களிடையேயும் பெருகிவிட்டதே. இதனைத் தடைசெய்யும் தலைப்புகளில் பேசவேண்டும்; அத்தலைப்புக்களில் இத்தமிழ்ப்பெரும் பல்கலைக்கழகத்தில் பேசினால், இராமாயணம் காப்பியமாகப் பரவும் என்று அவாக் கொண்டேன். அதனாற்றான் காப்பியப் பார்வை, காப்பியக் களம், காப்பிய நேர்மை என மூன்று தலைப்புக்களையும் காப்பியத் தொடர்பாக மேற்கொண்டேன். தலைப்புகள் மூன்றாக இருந்தாலும் மூன்றிலும் ஊடுருவிச் செல்லும் பார்வை நேற்று நாம் பார்த்த முழுப் பார்வையேயாகும். நேற்றைக்கு இன்று முரணாக, இன்றைக்கு நாளை முரணாக நம் பார்வை இராது.

தனிப்பார்வை காப்பியத்துக்குப் பார்க்கக்கூடாது என்பதில்லை. அப்பார்வையினால் கவிதையின் சில நலங்கள் வெளிப்படுமேயன்றிக் காப்பிய வனப்புகள் வெளிப்படா. எது முதன்மை அது தோன்றாது. எது முழுமை அது தோன்றாது. முதன்மையும் முழுமையும் காணவேண்டின், கம்பரது சிந்தனையின் முழுவுருவம் காணவேண்டின், ஞாலத்தையே அடக்கிக் காப்பியம் செய்த அவரது புலமையின் திசையைக் காண வேண்டின், இராமாயணத்தின் பல பாடல்களில், பல படலங்களில், பல காண்டங்களில் குருதியோட்டம் போலச் சிந்தனை ஓட்டம் வேண்டும். எவ்வளவுக்குப் பாடல்களை இணைத்து இரண்டறக் கலந்து உடம்பின் நரம்புபோல் பிணைத்துப் பார்க்கின்றோமோ, அவ்வளவுக்குக் காப்பியமாகப் பார்க்கின்றவர்கள் ஆவோம்.

## முன்னைக் காப்பியங்கள்

*இராமாயணம் உலகக் காப்பியங்களுள் சிறந்தது. தலையாயது என்றுகூடச் சிலர் உரைப்பர். நாம் அவ்வளவுக்குச் செல்ல வேண்டியதில்லை. பல தமிழ்க் காப்பியங்களுக்குப் பின் தோன்றியது இராமாயணம். அதனால் முன்னைக் காப்பியங்களில் உள்ள நல்ல நல்ல கூறுகளைக் கம்பர் தழுவிக் கொண்டார் என்று சொன்னால், அது குறைவன்று. முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் சொல்லும் பொன்னே போற் போற்றுதல் என்ற நெறி இலக்கணத்துக்குக் கூறப்பட்டதாயினும் இலக்கியத்துக்கும் கொள்ளலாம். பின் எழுந்த இராமாயணம் முன்னெழுந்த காப்பியங்களின் சில வனப்புக்களை அழுத்தமாகத் தழுவிக் கொண்டுள்ளது. சீதை இல்லம் விட்டு இராமனுடன் காடேகும் போதும், பகைவன் நாட்டில் துணிந்து பேசும்போதும் சிலப்பதிகார அமைப்பு படியக் காண்கின்றோம். நாட்டு நகர வருணனைகளில் சீவக சிந்தாமணியின் கற்பனைகள் கலந்துள. அநுமன் இராமனை முதற்கண் கண்ட காலை எழுந்த அன்பு உணர்ச்சியைக் கம்பர் பாடும்போது பெரியபுராணத் தோற்றம் படுகின்றது. குடுமித் தேவரைக் கண்ணப்பர் கண்டபோது அன்பு மயமாகவே ஆகிவிட்டார். மராமரப் படலத்தையும் கண்ணப்ப நாயனார் புராணத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.*

**கண்ணப்பர்**

முன்புசெய் தவத்தின் ஈட்டம்
 முடிவிலா இன்ப மான
அன்பினை எடுத்துக் காட்ட
 அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூர
 வள்ளலார் மலையை நோக்கி
என்புநெக் குருகி உள்ளத்
 தெழுபெரு வேட்கை யோடும்.

**அநுமன்**

துன்பினைத் துடைத்து மாயத்
 தொல்வினை தன்னை நீக்கித்
தென்புலத் தன்றி மீளா
 நெறியுய்க்கும் தேவ ரோதாம்
என்பெனக் குருகு கின்ற
 திவர்கின்ற தளவில் காதல்
அன்பினுக் கவதி யில்லை
 அடைவென்கொல் அறிதல் தேற்றேன்.

முன்னை நூல்களின் அமைப்புகளைக் கம்பர் போற்றிக் கொண்டிருப்பினும் போற்றிக் கொண்ட திறங்களில் புதுமை காண்கின்றோம். மேலும் புதுத் திறங்களைப் படைத்துக் கொண்டிருக்கவும் காண்கின்றோம். பல காப்பியங்களுக்குப் பின் தாம் ஒரு பெருங்காப்பியம் ஆக்கிப் புகழை வாரிக் கொண்டார் கம்பர் என்றால் அவரது நிகரற்ற படைப்பாற்றலுக்கு அஃது ஒரு சான்று இல்லையா? கம்பரைப் போல் விரிவாற்றலும் படைப்பாற்றலும் உடையாரை யாம் கண்டிலம். கம்பரைப் போல் காப்பிய வனப்புக்கள் பல காட்டினாரை யாம் கண்டிலம். கம்பர் காப்பிய வழிகாட்டி. பிறமொழி இலக்கியங்களை மேற்கொள்ளுங் காலை எங்ஙனம் மாற்றலாம், கொள்ளலாம் என்று காட்டும் விதிகாட்டி.

## வழிகாட்டி

தமிழிற் காப்பியங்கள் பல இருந்தாலும் நாட்டுக் காப்பியங்கள் என்ற வரிசைக்கு உரியன மூன்றே. சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம் என்ற மூன்றும் செந்தமிழ் நிலத்துப் பிறந்த மாந்தர்களைக் காப்பிய மாந்தர்களாக உடையன. நிலக் காப்பியங்கள் என்ற தனிச் சிறப்புக்கு உரியன. ஆனால் ஒரு மொழிக்கு நிலக் காப்பியங்களே தோன்ற முடியுமா? மொழியின் பரந்த வளர்ச்சிக்குத் தழுவலும் வேண்டும். அத் தழுவல் தழுவலாகத் தெரியாது நிலத்தோடும் நிலமக்கள் மரபோடும் ஒட்ட வேண்டும். ஒட்டாத் தழுவல்கள் உணர்ச்சியும் விளைக்கா; மக்களிடையும் பரவா. 'மொழி பெயர்த்து அதற்பட யாத்தல்' என்றார் தொல்காப்பியர். 'அதற்பட' என்பது ஆழ்ந்த பொருள் உடையது. மொழிபெயர்ப்பு என்பது தோன்றாதபடி வேண்டிய வெல்லாம் செய்க என்பது கருத்து.

கம்பர் காப்பியம் கதையால் தழுவலாயினும், மொழியாலும் நடையாலும் பண்பாலும் உணர்ச்சியாலும் அன்பாலும் தமிழ் மண்ணிற் பிறந்த நிலக்காப்பியம் ஆகும். மொழி பெயர்ப்புக் காப்பியத்தை மொழிபிறப்புக் காப்பியமாகவே உருவாக்கி அருளிய திறம் கம்பரிடத்துப் போல் பிறரிடம் காண முடியுமா? 'முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவிகட்கு ஒன்று உணர்த்துவேன்' என்னும்போது தமிழன்பும், 'வண்டு தமிழ்ப்பாட் டிசைக்கும் தாமரையே' என்னும் போது தமிழ் என்ற சொல்லில் பற்றும், 'சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி' என்னும் போது பழஞ் சங்கப்புலவர்பால் ஈடுபாடும், 'காவிரி நாடன்ன கழனி நாடு' என்னும்போது நாட்டன்பும், 'முல்லையைக் குறிஞ்சியாக்கி மருதத்தை முல்லையாக்கி' என்னும்போது தமிழ்க் காட்சியும்,

'சடையன் வெண்ணெய் நல்லூர் வயின் தந்ததே' என்னும் போது தமிழ்ப் பிறப்பும் இவ்வாறே தமிழ் மக்களின் அகவழக்கங்களும் புறப்பழக்கங்களும் இராமாயணக் காப்பியத்து மலிந்து கிடக்கின்றன. தொல்காப்பியம், சங்கவிலக்கியம், திருக்குறள், சீவகசிந்தாமணி, திவ்விய பிரபந்தம் முதலான நூல்கள் இராமாயணத்தைச் சொல்லாலும் பொருளாலும் இயக்கி உள்ளன. கதைக்கு வடமொழி மூலமாக இருந்தாலும் கதை மேல் எழுந்த காப்பியக் கட்டிடத்துக்குத் தமிழே மூலமாகும்.

தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்,

என்று தொல்காப்பியத்துக்கு மொழிந்த அடிப்படை இராமாயணத்துக்கும் பொருந்தும் என்று யான் கூறுவதைப் பலர் வரவேற்பர் என்று நம்புகிறேன்.

## பொருள் பெயர்ப்பு

மொழி வளர்ச்சிக்குக் கம்பர் பெருமான் பல துறையில் வழிகாட்டி. கம்பர் தமிழ் மொழியைப் பொருளாலும் வளர்த்தார். சொல்லாலும் வளர்த்தார். பிறமொழியில் உள்ள பெயர்களை எப்படித் தமிழ்ப் படுத்துவது? பிற மொழி ஒலிகளையும் அப்படியே தழுவிக் கொள்ளலாமா? அப்பெயர்களைக் கிடந்தாங்கே கொள்ளலாமா? பொருள் கண்டு மொழிபெயர்த்துக் கொள்ளலாமா? என்று நாம் வாதாடுகின்றோம். ஆளுக்கு ஒரு முறையாக மனம்போன போக்கில் எழுதுகின்றோம். வடமொழிப் பெயர்கள், வடசொற்கள் இடைக்காலத் தமிழ் இலக்கியங்களில் ஏராளமாக வந்துள்ளன. நம் முன்னோர்கள் வடசொற்கிளவிகளைத் தமிழ் ஒலிக்குஉட்பட்டும், எழுத்து மயக்க முறைக்கு உட்பட்டும் போற்றிக் கொண்டனர். சில பல இடங்களில் பொருள் பற்றியும் ஆக்கிக் கொண்டனர். கிரௌஞ்ச மலையைச் 'குருகொடு பெயர் பெற்ற மால்வரை' (பரிபாடல்.5) எனவும், திருதராட்டிரனை 'வியக்குறு மண்டிலம் வடமொழிப்' பெயர் பெற்ற முகத்தவன்' (கலி. 25) எனவும், சங்க நூல்கள் மொழிபெயர்த்து அதற்பட யாத்திருத்தலை அறிகின்றோம்.

தொன்னூல்களில் வடசொல் வரவு மிகமிகக் குறைவு. கம்பர் காலம் வடமொழிக் கலப்பு மிகுந்த காலம் எனினும் தமிழ் ஒலிவரம்பும் மயக்கவரம்பும் பெரும் புலவர்களால் புறநடையின்றிப் போற்றப்பட்டடன. அங்ஙனம் போற்றியவருள் புலமை மிக்கவர் கம்பர். இராமாயணப் பாத்திரங்களை எள்ளளவும் தமிழ் மொழிமை குன்றாது செய்யுட்படுத்தினார்; இராமன், இலக்குவன், அநுமன், சுக்கிரீவன், கும்பகருணன், வீடணன், இரணியன் என்றவாறு முதலிடையிறுதி எழுத்துக்களை இலக்கணம் பொருந்த ஆண்டார்; வச்சிர தந்தனை 'வச்சிரத் தெயிற்றவன்' எனவும், மகாபார்சுவனை 'மாபெரும் பக்கன்' எனவும் சூரிய சத்துருவைச் 'சூரியன் பகைஞன்' எனவும், தூமிராட்சனைப் 'புகை நிறக் கண்ணன்' இரணியாட்சனைப் 'பொன்கணான்' எனவும், இரணியனைக் 'கனகன்' எனவும், மகராட்சனை 'மகரக் கண்ணன்' எனவும் பிறமொழிப் பெயர்களைக் கம்பர் பொருள் பெயர்த்துள்ளார். பொன் மலையைக் 'கோல்டன் ராக்கு' என்று ஆங்கிலப் படுத்தும்போது, கோல்டு சிமித்து என்ற பெயரைப் பொற்கொல்லர் என்று ஏன் பொருள் பற்றித் தமிழ்ப் படுத்தலாகாது? இந்நெறி கம்பர் முதலான நம் முன்னோர்கள் காட்டிய வழியில்லையா? என்று வினவத் தோன்றுகின்றது எனக்கு.

## களம்

இன்று சொற்பொழிய வேண்டிய தலைப்பு காப்பியக் களங்க்ள் என்பது. இத்தலைப்பிற் பேசுவதற்குமுன் இதுகாறும் கம்பரின் அருமை பெருமைகளை ஒரு முன்னுரையாக மொழிந்தேன்; எவ்வகைக்கும் இவர் ஒரு வழிகாட்டி என்பதனை எடுத்துக் காட்டினேன். ஆசிரியனிடத்து ஈடுபாடு இல்லாவிட்டால் அவன் நூலை ஆழ்ந்து கற்கும் ஆசை தோன்றாதல்லவா?

உயிர்வாழ்வு நிலையாதது; வாழ்வின் வளங்கள் நிலையாதவை. யார் வாழ்வு எவ்வளவு தொலை ஓடும் என்பது யார்க்குத் தெரியும்? எவன் எவ்வளவு காலம் செல்வனாக இருப்பான் என்பது எவர்க்குத் தெரியும்? உயிர் நின்றபின் இருந்த வயதைக் கணிக்கின்றோம்; ஏழையாகிய பின் இருந்த வாழ்வைக் கணக்கெடுக்கின்றோம். 'குழவி இறப்பினும் ஊன் தடி பிறப்பினும்' என்றபடி பிறப்பின் வகை எத்தனை? 'பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன் கள்ளம் கடைப்பிடித்தல் நன்று' என்றபடி, இறப்பின் வகை எத்தனை? 'பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும் நில்லா உலகம்' என்றார் தொல்காப்பியர். இத்தகைய மன்னா உலகத்து, நீண்ட பெருங்காப்பியம் எப்படிப் படைப்பது? உலக நிகழ்ச்சிகள் அற்றற்று ஒழுகுவன ஆதலின் புறநானூறு போலப்

பெரும்பாலும் தனிப்பாடலுக்கே உரியன. பெருங்காப்பியத்துக்கு வேண்டிய அறாவாழ்க்கையே யாரொருவரிடத்துக் காண முடியும்? அரிய பல நிகழ்ச்சிகளின் தொகுப்பை யாரிடத்துக் காண முடியும்? குன்றின் அனையவர் வாழ்க்கையும் திடீரெனக் குன்றிவிடும். ஒரு பொழுதும் வாழ்வது அறியாத மானிட வாழ்க்கையைக் காப்பியம் ஆக்குவது எளிதன்று. நிலையாத வாழ்வுக்கு ஒரு நிலைத்தன்மை செய்வது காப்பியம். ஒவ்வொரு கட்டத்திலும் நிலையாத தன்மையைப் புலவன் எங்ஙனம் ஈடுகட்டுகின்றான்? அறுவது போன்ற இடத்தில் இலக்கியச் சூழ்ச்சி செய்து அறாதபடி எங்ஙனம் காப்பியத்தை ஓட்டுகின்றான்? இத்தகைய களங்களில் புலவனது காப்பியத் திறத்தைக் காணவேண்டும்; காப்பியத் துணிவைக் காணவேண்டும்.

## பரதனும் இராமனும்

சித்திரகூட மலையில் பரதனும் இராமனும் சந்திக்கும் களம். இருவரும் நிகரற்ற நல்லவர்கள். இராமன் பெருமைக்கு எடுத்துக்காட்டு வேண்டியதில்லை. 'எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த வள்ளலையே அனையானை' என்று இராமனுக்குச் சமமாகப் பரதனைப் பாராட்டுகின்றான் விசுவாமித்திரன். 'கொள்ளான் நின்சேய்' எனத் தயரதனும் பரதன் பண்பை மதிக்கின்றான். 'மும்மையின் நிறை குணத்தவன் நின்னினும் நல்லனால் குறைவிலன்' என்று இராமன் தாய் பரதனை அளவு கடந்து புகழ்கின்றாள். 'ஆளான் பரதன் அரசு' என்று ஊர் போற்றுகின்றது. 'ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா' என்று குகன் பரதனை நிகரின்றிப் போற்றுகின்றான். 'எத்தாயர் வயிற்றினும் பின்பிறந்தார்கள் எல்லாம் ஒத்தாற் பரதன் பெரிது உத்தமனாதல் உண்டோ' என்று இராமன் எடுத்துக் காட்டுகின்றான். இத்தகைய நீதிக் கடலான பரதனுக்கும் அறக் கடவுளான இராமனுக்கும் கருத்துப் பூசல் ஏற்படும் என்றால், அதனை முடிப்பது எப்படி?

நன்மைக்கும் தீமைக்கும் பூசல் என்றால் எளிதில் தீர்க்கலாம். இயல்பான நலங்களுக்கு இடையே போட்டி என்றாலுங்கூடத் தீர்ப்பது எளிது. தன்னிகரில்லா இரு நன்மைகள் தம்முட் போராட்டம் என்றால் எதனை விலக்குவது? எதனை வெல்லச் செய்வது? இராமன் தந்தையின் வாய்மை காக்கப் பாடுபடுகின்றான். தவக்கோலம் பூண்டு வனம் புகுகின்றான். பரதனோ அரசமுறை காக்க முனைகின்றான்; தவவேடந் தாங்கி வனத்துக்கு வந்திருக்கின்றான். முறை எதுவாயினும் தந்தையை மதிக்கின்றான் இராமன். தந்தையினும் வழிமுறையை மதிக்கின்றான் பரதன்.

தந்தையின் செய்கை சரியன்று என்பது அவன் தெளிவான கருத்து. 'முழுதுலகு அளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும் வழுவினன் அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் வந்தேன்' என்று குகனிடம் தந்தையின் தவற்றை வெளிப்படுத்துகின்றான் பரதன்.

உந்தை தீமையும் உலகு றாதநோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையும்
எந்தை நீங்கமீண் டரசு செய்கெனாச்
சிந்தை யாவதும் தெரியக் கூறினான்.

'தந்தையும் தாயும் அரசியலில் பெரும்பிழை செய்து விட்டனர்; அது நீங்கவேண்டும் எனின் நீ வந்து மீண்டும் அரசேற்க வேண்டும். நீ அரசு ஏலாதவரை அத்தீமை இருக்கவே செய்யும்' என்று இராமன் முன்னர் தன் உள்ளக் கருத்தை ஒளியாது கூறினான் பரதன். யார் செய்தால் நமக்கென்ன? செய்தது அறமா என்று பார்ப்பதே முறை என்பது பரதன் குறிக்கோள். வீடணனும் இக்குறிக்கோள் உடையவனே. 'தீயவை செய்வராகின் சிறந்தவர் பிறந்தவுற்றார் தாயவை தந்தைமார் என்று உணர்வரோ தருமம் பார்ப்போர்' என்பது தானே இராமாயண நெறி. கொற்றவனாயினும் குற்றம் குற்றமே என்ற பரதன் இராமாயண நக்கீரன் அல்லவா? அவன் குற்றச்சாட்டுக்கு நேர்மையான மறுப்பு யார் கூறமுடியும்?

தனைய ராயினர் தந்தை தாயரை
வினையின் நல்லதோர் இசையை வேய்தலோ
நினையல் ஓவிடா நெடிய வன்பழி
புனைத லோவைய புதல்வர் ஆதல்தான்.

புதல்வன் கடன் என்ன? தாய் தந்தைக்குப் புகழ் சூடுவதா? பழி புனைவதா? என்பது இராமன் மறுமொழி. முறை என்பது தனியாக ஒன்றில்லை. அரசன் ஏவியது எது அதுவே முறை என்பது அவன் குறிக்கோள். 'தாய் வரங்கொளத் தந்தை ஏவலால் மேய நங்குலத் தருமம் மேவினேன்' என்று தன் அறநெறியை இயம்புகின்றான் இராமன். தந்தை வரங்கொடுத்தது சரியா? பிழையா? என்பது இராமனுக்குக் கருத்தன்று. 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கோர் நாயகமே' என்ற திருவாசகத்தின்படி ஆராய்ச்சியின்றி அடிபணிவதே இராம நெறி. பரதநெறி சரியா? இராமநெறி சரியா? இரு நெறிகளும் குழப்பம் அற்றவை. உலகிற்கு இன்றியமையாதவை. இந்நெறிகள் யார் ஒருவர் வாழ்க்கையிலும் ஒவ்வொரு களத்துக் காணப்படுபவை. மேலும் நெறிகளின் சிறப்பு,

அந்நெறிகளைப் பின் பற்றுவார் சிறப்பைப் பொறுத்தது. இராமாயணத்து நிகரற்ற நல்லவர் இருவர்க்கிடையே நெறிப்பூசலைக் காண்கின்றோம். ஒன்றொழித்து ஒன்றைச் சிறந்தது என்று சொல்ல முடியாது கம்பருக்கு இக்கட்டான காப்பியக் கட்டம்.

பரதனுக்கும் இராமனுக்கும் பலத்த சொற்போர் நிகழ்கின்றது. கற்பு நீங்கிய மகளிரைக் காட்டிலும் பொறுமை நீங்கிய தவத்தைக் காட்டிலும், அருள் நீங்கிய அறத்தைக் காட்டிலும் முறை நீங்கிய அரசு கொடியது எனவும், அறத்தைக்கொன்று தின்றுவிட்டு அரசு ஆள்வேனா எனவும் சினக்கின்றான் பரதன். அரசு நின்னுடையது. ஆள்க என்று இராமன் மொழிந்தபோது 'என்னதாகில் யான் இன்று தந்தெனன்; மன்ன போந்து நீ மகுடஞ்சூடு' என்று மடக்குகின்றான் பரதன். ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுப்பதாக இல்லை. அண்ணன் சொல்லுக்கு மறுமொழி பேசக் கூடாதே என்று இக்கருத்தில் பரதன் அடங்கி இருப்பதாகவும் இல்லை. பரதன் துணிவைப் பார்த்தான் வசிட்டன். இராமனை நோக்கி 'என் ஆணை; நீ திரும்பச் சென்று அரசாள்' என்று கட்டளை இட்டான். அண்ணன் வேண்டுகோளைத் தம்பி மறுக்கும் களம் இது. முனிவர்களையே காக்கப் பிறந்த இராமன், வசிட்டன் கட்டளையைப் புறக்கணிக்கும் களம் இது. 'முன்னே பணித்த தாய்தந்தையரின் கட்டளையைத் தலைமேற்கொண்டு நிறைவேற்றுவதாக வந்தேன். நீரோ பின்வாங்கும்படி கட்டளை இடுகின்றீர். செய்யத் தக்கதைச் சொல்மின்' என இராமன் வசிட்டனையும் குற்றம்படப் பேசுகின்றான். யார் இப்போது யார்க்குச் சொல்வது? யார் சொல்லையும் எவரும் கேட்க முடியாத அறக்களம் இது.

முனிவனும் உரைப்பதோர் முறைமை கண்டிலம்
இனியென இருந்தனன் இளைய மைந்தனும்
அனையதேல் ஆள்பவர் ஆள்க நாடுநான்
பனிபடர் காடுடன் படர்தல் மெய்யென்றான்.

இராமன் உறுதி கண்டபின் வசிட்ட முனிவனும் வாளா இருந்தான். இராமனும் மேற்பேசவில்லை. பரதன் யாரும் அஞ்சும் ஒரு முடிவுக்கு வந்தான். இதுவரை முன்னிலையாகப் பேசியவன் இப்பொழுது முன்னிலைப் புறமொழியாகப் பேசத் தொடங்கினான்; 'இதுதான் போக்கென்றால், நாடுகிடக்க; வேண்டுவார் அதனை ஆண்டு கொள்ளட்டும். நான் இராமனுடன் காட்டில் வாழ்வேன். இதுவே உறுதி' என்று முடித்தான் பரதன்.

## தேவர் வரவு

ஒருவர் மற்றொருவருக்கு விட்டுக் கொடுக்கவில்லை என்று இராமாயணக் கதையை நிறுத்துவதா? இருவரும் சிறந்தவர்கள் என்று போற்றி முடிப்பதா? திண்ணிய பரதன் எண்ணிய எண்ணியாங்கு எய்தினான் என்று இராமனை அயோத்திக்குத் திருப்புவதா? பரதனையும் இராமன்கூட வனம் ஏகச் செய்வதா? வசிட்டனே ஒன்றுஞ் செய்ய மாட்டாத போது யார் செய்வது? உலகத்தார் யார் செய்தாலும் கேட்பார்களா? ஒரு பக்கம் பழிவாராதா? இத்தகைய அருங்களத்துத்தான் காப்பியத்தில் அமுதம் என்னும் அல்லியற்கை பிறக்கின்றது. மக்களைக் கொண்டு காப்பியத்தை நடத்த முடியாதபோது புலவர் தேவர்களைப் புகுத்தி நடத்துகின்றார்.

அவ்வழி இமையவர் அறிந்து கூடினார்
இவ்வழி இராமனை இவண்கொண் டேகுமேல்
செவ்வழித் தன்றுநஞ் செயலென் றெண்ணினார்
கவ்வையர் விசும்பிடைக் கழறல் மேயினார்.

ஏத்தரும் பெருங்குணத் திராமன் இவ்வழி
போத்தரும் தாதைசொற் புரக்கும் பூட்சியான்
ஆத்தவாண் டேழினோ டேழும் அந்நிலம்
காத்தலுன் கடனிவை கடமை என்றனர்.

வானவர் உரைத்தலும் மறுக்கற் பாலதன்று
யானுனை இரந்தனன் இனியென் ஆணையால்
ஆனதோர் அமைதியின் அளித்தி பாரெனாத்
தானவன் துணைமலர்த் தடக்கை பற்றினான்.

இம்மூன்று பாடல்களும் குணப் போராட்டத்துக் காப்பியத்தைக் காத்த பாடல்கள். மிக்க நல்லவை இரண்டு போராட்டக் களத்தைக் கம்பர் என்ற பெரும் புலவரும் உய்விக்க முடியவில்லை. யான் அறிந்தவரை அவரால் ஈடுகொடுக்க முடியாத காப்பியக் களம் இது ஒன்றே. இராமாயணத்துக் குணப் போராட்டங்கள் பலப்பல. அவற்றையெல்லாம் உலகியலுக்குள் நின்று களம் வென்ற கம்பர் இந்த ஓரிடத்துத் தேவரை வரவழைக்க வேண்டியதாயிற்று. தீமையொடு தீமை போராடினும், தீமையோடு நன்மை போராடினும் கதை நடத்த வழியுண்டு. அளவான பண்புகள் தம்முள் முரண் ஏற்பட்டாலும் எளிதில் அம்முரண் கடக்க வழியுண்டு. இரு பாத்திரங்களுக்குந் தன்னேரில்லாத தலைமையளித்து அவை

தம்மை மோதவிட்டால் அம்மோதுதலை ஈடுபட்டு விலக்குவார் நசுங்கிவிடுவார். அவ்விரு தலைமையும் விலக்குவாரின்றிப் பொருது நசுங்கும். தாமே உணர்ந்து பொராது விலகிக் கொண்டன என்று கம்பர் ஒரு பாட்டு எழுதுவது உணர்ச்சி வழுக்கலாகும். தாம் கூறுவது காப்பியச் சுவையாகாது என்ற கருத்தால், தேவர்மேல் ஏற்றிக் காப்பியத்தை ஓட்டுகின்றார் கம்பர்.

இராமன் பரதன் இருவருடைய துணிவையும் ஆராய்ந்தார்கள் தேவர்கள். பரதன் துணிவே பெரிதென்று அவர்களுக்குப் பட்டது. பரதன் திருப்பிச் செல்லாவிட்டால் தந்தை ஆண்ட நாடு அவலப்படுமே என்று இரக்கங் கொண்டு, இராமன் அயோத்திக்குத் திரும்பிச் செல்லக்கூடும் என்றுஅவர்களுக்குத் தோன்றியது. மேலும் வேடிக்கை பார்க்கக் கூடாது என்று எண்ணினர். 'தந்தை சொற்படி இராமன் வனஞ் செல்வான். அப்பதினான்கு ஆண்டும் அரசைக்காத்தல் உன் கடன்' என்ற வானொலி பிறந்தது. களத்திற்கு வழி ஏற்பட்டது. பரதன் உறுதி கேட்டு மனம் நெகிழ்ந்த இராமனுக்குப் புதிய துணிவு உண்டாயிற்று. பற்றுக்கோடு கிடைத்தது. 'வானவர் உரைத்தலும் மறுக்கற் பாலதன்று' என்று விட்ட பேச்சைத் தொடங்குகின்றான் இராமன். வாய்மை காக்க நான் வனத்தில் இருப்பேன் என்று முன் பேசியது போல் பேசாது, பரதன் துணிவையும் நெறியையும் விளங்கிக் கொண்டு 'யான் உனை இரந்தனன்' என்று மன்றாடுகின்றான்; பரதனது மலர்த் தடக்கை பற்றி அணைக்கின்றான். இன்ன திடீர் மாறுபாட்டைத் தேவரைக் கொண்டு செய்விக்கின்றார் காப்பியப் புலவர். இது காப்பிய வழுவமைதியாகும். புலவரே செய்யின் காப்பிய வழுவாகும்.

காப்பியம் என்பது ஓராற்றால் உலகப்படி. உலகத்து எவ்வளவு மோதுதல் உள, அவ்வளவு காப்பியத்தும் உள. உளவாம்பாடி புலவன் பார்த்துக் கொள்ளவேண்டும். மோதுவதற்கு ஏற்ற வாய்ப்பிடங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். முன்னரே வேறுபட்டவர்கள் முரணுவதில் காப்பிய எழுச்சி தோன்றாது. இராமனும் இராவணனும், இலக்குவனும் மேகநாதனும் சந்திக்கும் களங்கள் எதிர்பார்க்கும் களங்களேயாகும். 'உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா, உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்றபடி, மிக நெருங்கியவர்கள் தம்முள் வரும் போராட்டமே புலவன் ஈடுகட்டுதற்கு அரியவை; ஈடுகட்டி நாட்ட வேண்டியவை. சில சமயங்களில் புலவனுக்குத் தலைமைப் பாத்திரங்களில் பேரன்பு ஏற்பட்டு விடுகின்றது. அந்த அன்பு குன்றிவிடுமோ என்று அஞ்சித் தலைமைப் பாத்திரங்களைப் பெரு மோதுகையின்றிப் பார்த்துக்

*கொள்கின்றான்; மன்னாயத்தின் பெருமதிப்போடு காட்ட விரும்புகின்றான்.*

*சீதையை இராவணன் கையில் தீண்டி எடுத்து மடியில் வைத்துத் தேர்மேல் கொண்டு சென்றான் என்பர் வான்மீகர். தலைமைப் பாத்திரமான சீதையின் மேனி மேல் கயவன் கைபட்டது என்று கூறுவது கம்பர் மனதுக்கு ஏற்றமாகப் படவில்லை. அவள் இருந்த நிலத்தோடு தோண்டிக் கொண்டு சென்று அசோகவனத்தில் வைத்தான் என்று புதுப்பித்தார். இவ்வளவு கூடச் சொல்லத் துளசிப் பெரியாருக்கு மனம் இயையவில்லை. இராவணன் தூக்கிச் சென்றது மாயா சீதையையே என்று பெருமாற்றஞ் செய்தார். இத்தகைய மாறுதல்கள் அன்பு நோக்கி எழுந்தன. இப்படியே செய்துகொண்டு போனால் புலவன் அறிவுக்கு வேலையில்லை. காப்பிய உணர்ச்சிகளின் போராட்டத்துக்கு இடமில்லை. போராட்டக் களம் குன்றியபோது காப்பிய நீட்டத்துக்கும் இடமில்லை.*

## தயரதனும் கைகேசியும்

*உறவுகளில் சிறந்தது காதலுறவு; கணவன் மனைவி என்ற உறவு. வேறுவேறு இடத்திற் பிறந்து இருபது இருபத்தைந்தாண்டு தனியாக வளர்ந்த இருவர் ஒரு நாள் திருமணத்தால் ஒன்று கூடுகின்றனர். 'தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய் வரும் இன்ப துன்பங்களே' என்றார் திருக்கோவையார். இவ்வுறவு தெய்வத் தன்மையுடையது என்பது நம் முன்னோர் கொள்கை. 'இம்மை மாறி மறுமையாயினும் நீயாகியர் என் கணவனை; யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே' என்று கூறுகின்றாள் ஒரு குறுந்தொகைத் தலைவி. கணவன் மனைவி என்ற உறவு பிறவிதோறும் இடையறாது வரும் வழிவழித் தொடர்பு என்று கொண்டு மணிமேகலை முதலான காப்பியக் கதைகள் எழுந்துள்ளன. 'கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப் போய் பிரிந்தவர் கூடினாற் பேசவேண்டுமோ' என்றபடி, இராமன் சீதையுறவும் பழம் பிறப்புத் தொடர்பாகும். தொல்காப்பியமும் அகத்திணை இலக்கியங்களும் காதற் பிணைப்பைப் பலதுறையால் வலியுறுத்துவ. இன்ன அழகிய அன்புறவு இராமாயணக் கதையில் இழுக்குப் படுகின்றது.*

## தயரதன்

**மண்ணாள் கின்றா ராகிவலத்தால் மதியால்வைத்து**
**எண்ணா நின்றார் யாரையும் எல்லா இகலாலும்**
**விண்ணோர் காறும் வென்ற எனக்கென் மனைவாழும்**
**பெண்ணால் வந்த தந்தரம் என்னப் பெறுவேனோ.**

## கைகேயி

ஆழிப் பொற்றேர் மன்னவன் இவ்வா றயர்வெய்திப்
பூழிப் பொற்றோள் முற்றும் அடங்கப் புரள்போழ்தில்
ஊழிற் பெற்றால் என்னுரை யின்றேல் உயிர்மாய்வேன்
பாழிப் பொற்றார் மன்னவ என்றாள் பசையற்றாள்.

கைகேயி சூழ்வினைப் படலம் இராமாயணத்து ஒரு பெரிய காப்பியக்களம். தயரதனுக்குத் தான் பெற்ற மக்கள் நால்வருள் ஒருவன்மேல் உயிர்க் காதல். அதனால் உயிர் விடுகின்றான். கைகேயிக்குத் தான் பெற்ற ஒரு மகன் அரசாளவேண்டும் என்ற தனிக்காதல்; அதனால் கணவர் உயிர் விடுவதையும் வரவேற்கின்றாள். மக்கள்மேற் காதலால் இல்லறச் சகடம் குடஞ் சாய்கின்றது. இராமனுக்கு முடிசூட்டித் துறவுபூண எண்ணிய தயரதன் செய்கை என்னவாயிற்று? இராமனைத் துறவியாக்கிற்று. 'பேராற்றல் உடைய இவ்வுலக மன்னரையும் அவ்வுலக மன்னரையும் வென்ற எனக்கு, ஒரு பெண்ணால் அதுவும் உயிரென்று கூறும் என் மனைவியால் அழிவு வந்தது என உலகம் கூறுமாறு ஆயிற்றே' என்று அழுது புரண்டு புலம்பி மயங்கிப் புழுதிபடத் தேய்கின்றான் தயரதன். அவன் அவலக் கொந்தளிப்புக்கு எல்லையில்லை. அருகிருக்கும் மனைவி கைகேயி சிறிதும் பதற்றப்படாது, நெஞ்சு கிஞ்சிற்றும் துடிக்காது, மாணவர்கள் வரப்பண்ணிப் பேசுவது போல, 'நான் கேட்டபடி கிடைத்தால் வாழ்வேன்: இல்லாவிட்டால் மன்னவனே தெரிந்து கொள், உயிரை உனக்கு முன் விடுவேன்' என்று கூனி சொல்லிக் கொடுத்த விடையை ஒப்பித்தாள். மேலும் ஒரு மேற்கொள் விளம்பினாள். 'உண்மைக்காக உன் குலத்துப் பிறந்த சிபி மன்னன் தன் தசையையும் அரிந்து கொடுக்கிவில்லையா?' என்று கேட்டாள். நீ உயிர் விடுவது பற்றிக் கவலையில்லை என்பது கைகேசியின் குறிப்பு.

## ஒழுக்க நாடு

முடிசூட்டுக்கு முதல் நாள் இரவு கைகேசியின் அரண்மனையில் உலகப் பெருங்காப்பியம் எழுதற்கு உரிய ஒரு களம் நிகழக் காண்கின்றோம். சிறந்த குணங்கள் திடீரென்று தம்முள் மலையத் தொடங்கி விட்டன. ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய போராட்டமன்று இது; அரசனுக்கும் அரசிக்கும் உரிய போராட்டமன்று இது; கணவனுக்கும் மனைவிக்கும் உரியபோராட்டமே இது. குடும்பப் போராட்டமே இது. ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுப்பதாக இல்லை; விட்டுக் கொடுக்கும் சூழ்நிலையும் இல்லை. நல்லவை இரண்டு பிடிவாதமாகப் போராடினால் இரண்டும் அழிவது தவிர

வேறு தோன்றாது. பார்வைக்குக் கைகேசி கொடியவள் என்பதை ஒருவாறு ஒத்துக் கொண்டாலும் கற்புக் குறைந்தவள் என்று கூற முடியுமா? ஒழுக்கக் குறைபாடு உடையவள் என்று கூற முடியுமா? கோசலத்தையும் கிட்கிந்தையையும் இலங்கையையும் கம்பர் புனைகின்ற நிலைகளை ஒப்பிட்டுக் காணுங்கள். மூன்று நாடுகளிலும் பெருவளங்கள் உண்டு. ஆனால் கிட்கிந்தை ஒழுக்கச் சிறப்பினதன்று. மன்னனான வாலியே பிறன்மனை நயந்த குற்றம் உடையவன். இலங்கையும் ஒழுக்கப் பண்புடையதன்று. இராவணனே ஆசில் பரதாரத்தை விரும்பிப் போரிட்ட அழிவுக் குற்றமுடையவன்.

அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி என்றபடி, மன்னர்களின் ஒழுக்கநிலை இவ்வாறாயின் குடிமாந்தர்களின் போக்கு எவ்வாறு இருந்திருக்கும்? அயோத்தி எக்குற்றம் இருப்பினும் ஒழுக்கக் குற்றம் இல்லாதது. இராமாயணம் மூன்று நாடுகளில் நிகழ்கின்றது. அவற்றுள் ஏனை இரண்டுக்கும் இல்லாத அறச்சிறப்பு இராமன் பிறந்த கோசலத்துக்கு உண்டு. இவ்வொழுக்கப் பண்பை முதற்பாட்டிலேயே வெளிப்படுத்துகின்றார் கம்பர்.

ஆச லம்புரி யைம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பு நெறியின் புறஞ்செலாக்
கோச லம்புனை யாற்றணி கூறுவாம்

கோசல நாட்டில் ஆடவர்தம் ஐம்புலன்களும் மகளிர்தம் கண்களும் ஒழுக்க நெறிக்கு மாறாக நடவா என்று எல்லா அழகுக்கும் தலையான அழகைப் புனைந்து தொடங்குகின்றார் புலவர். முழுப்பார்வையாகப் பார்க்கும்போது, மூன்று நாடுகளின் புனைவுகளை இணைத்து வைத்துப் பார்க்கும்போது, இத் தனிக்கருத்துப் புலனாகின்றது. ஆதலின் கணவன் சாவுக்கு ஒரு காரணமாக இருந்தாலும் கைகேசியைக் கற்புக் கெட்டவள் என்று சொல்ல முடியாது.

### புலவன் பார்வை

காப்பியப் படைப்பில் உள்ள ஓர் அமைப்பை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். இவ்வமைப்பை எந்தக் காப்பியம் படித்தாலும் நினைத்துக் கொள்ளுங்கள். காப்பியம் படைக்கும் புலவன் முழுக்கதையையும் கருத்திற் கொண்டு எழுதுகின்றான். பின் வருவனவற்றை நன்றாகத் தெரிந்து கொண்டுதான் முன்பகுதிகளை எழுதுகின்றான். அவனுக்குப்

பின்முன் என்பன இல்லை. ஏன்? எழுதிய அனைத்தையும் திரும்பத் திரும்பப் பார்த்திருப்பான்; முன்பின் ஓட்டமும் பாத்திரப் பேச்சும் கவிக் கூற்றும் பெருமுரணாகாதவாறு ஒழுங்கு செய்திருப்பான்; முழுப் பக்குவமே அவன் புலமை நோக்கம். புலவன் படைத்த தடத்திலேயே நாம் சென்று பார்க்கவேண்டும். 'தீயவை யாவினும் சிறந்த தீயாள்' எனவும், 'இன்னுயிர் உண்ணும் எரியன்னாள்' எனவும் கவிஞரே கைகேசியை வைதாலும், அவள் ஒழுக்கத்தை அவர் குற்றங் கூறியதில்லை. 'தீண்டலும் உணர்ந்த அத்தெய்வக் கற்பினாள்' என்று பாராட்டுகின்றார் கம்பர். பின் விளையப் போவதைத் தெரிந்த கம்பர்தான் 'தெய்வக் கற்பினாள்' என்று பாராட்டுகின்றார். கோசலைக்கும், சுமித்திரைக்கும் கூட இத்தெய்வப் பாராட்டு மொழியவில்லை. 'தீயமந்தரை இவ்வுரை செப்பலும் தேவி தூய சிந்தையும் திரிந்தது' என்று கைகேசியின் சார்பாகப் பேசுகின்றார் கம்பர். அவள் சிந்தை திரிந்ததற்கு மந்தரை வெளிப்பட்ட காரணமாக இருந்தாலும் மறைமுகக் காரணங்கள் இரண்டு உள. அவை தேவர் பெற்ற வரம். அந்தணர் இயற்றிய அருந்தவம் என்பர் கம்பர்.

கைகேசி இயல்பிற் கொடியவள் இல்லை. அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும் அவளைக் கொடியவள் ஆக்கின. கோவலன் ஊழ்வினைக்குப் பாண்டியன் பலியானது போல, அரக்கர் அழிவுக்குக் கைகேயி பலிப்படுகின்றாள். இவ்வுண்மை தெரிந்தவர்கள் அவளைக் கொண்டாடாவிட்டாலும் குறை கூறார்கள். பரதன் அரசேற்க மறுத்தபின், திரிந்த அவள் சிந்தை தூயதாகிவிட்டது. இராமனை அழைத்துவரப் பரதன் சென்ற போது கைகேசியும் உடன் செல்லவில்லையா? 'இடரிலா முகத்தாளை அறிந்திலையேல் இந்நின்றாள் என்னை ஈன்றாள்' என்று பரதன் கைகேசியைப் பரதன் குகனுக்கு அறிமுகப் படுத்தும்போது அடக்கமாக அவள் இருக்கவில்லையா? இராமாயணப் பாத்திரங்களில் சிறந்த ஆண் பாத்திரம் இராமன். சிறந்த பெண் பாத்திரம் சீதை. இவ்விருவரும் கைகேசியை ஒருபோதும் குறை கூறியதில்லை. 'சிறக்கும் மாமியார் மூவர்க்கும் சீதை ஆண்டு இறக்கின்றாள் தொழுதாள்' என்று செய்தி சொல்லுமாறு அநுமனை அசோகவனத்து வேண்டுகின்றாள் சீதை.

கைகயன் தனயை முந்தக்
காலுறப் பணிந்து மற்றை
மொய்குழல் இருவர் தாளும்
முறைமையின் வணங்குஞ் செங்கண்

ஐயனை அவர்கள் தாமும்
அன்புறத் தழுவித் தத்தஞ்
செய்யதா மரைக்கண் நீரான்
மஞ்சனத் தொழிலுஞ் செய்தார்.

வனவாழ்வு கழித்து அயோத்திக்கு மீண்ட இராமன் முதற்கண் எத்தாயைப் பணிந்தான்? கேகய மன்னன் மகளாகிய கைகேசியைத் தாளில் வீழ்ந்து வணங்கினான். ஏனை இரு தாயாரையும் அஃதாவது தன்னைக் கருச் சுமந்து பெற்ற கோசலையையும் பதினாலு ஆண்டும் தன்னைக் காத்த இலக்குவனைப் பெற்ற சுமித்திரையையும் இரண்டாவதாக வணங்கினான். காப்பியத் தோற்றத்துக்குக் காரணமான கைகேசி நல்லாள் யாரினும் சிறப்புப் பெறும் களம் இது.

மகன்மேற் காதலால் பெற்றோரிடை நடக்கும் இப்போர்க் களத்தை எங்ஙனம் முடிப்பது? இடையே யார் புகுந்து முடிப்பது? கைகேசி அரண்மனையில், யாரு மில்லாச் சூழ்நிலையில் அன்றோ இப்போராட்டம் நடக்கக் காண்கின்றோம். தயரதன் கூடவந்த மன்னர்களும் வாயிலில் வணங்கி நின்று விட்டார்கள். யாரும் அவனுடன் உள்ளே செல்லவில்லை. பிறர் யாரும் இல்லாத் தனிக்களம் இது; கங்குற் களம் இது. சூழ்நிலையின் தனிமையால் தயரதன் - எப்படிப்பட்ட தயரதன் - யானைப் படையை உடைய மன்னர் குழாம் தன் காலில் விழப்பெற்ற தயரதப் பேரரசன் இப்போது கைகேசியின் கால்மேல் முந்தி வீழ்ந்தான். ஊடற்கால வீழ்ச்சி இன்ப வீழ்ச்சி. இவ்வீழ்ச்சியோ துன்ப வீழ்ச்சி. தயரதனின் அவலப் பெருக்கத்தையும் உயிர்த் துடிப்பையும் கண்டு கொண்டிருந்த கைகேசி கேட்ட வரத்தை இனிக் கைவிட்டு விட்டேன் எனவும், உங்கள் உள்ளமும் பெருமையும் அறியாத கூனி சொற்கேட்டு ஏதேதோ செய்துவிட்டேன் எனவும், இது என் அரண்மைனைக்குள் நடந்தது ஆதலின் ஒன்றும் நடவாதது போல் காட்டி இராமனுக்கு முடிசூட்டுங்கள் எனவும் மனம் மாறிக் கூறி முடித்தாள் என்றுவைத்துக் கொள்வோம்; கணவன் மனைவி உறவு மேலும் வலுப்பட்டது என்று வைத்துக் கொள்வோம். இங்ஙனம் முடிப்பது உலகிற்கு ஓர் எடுத்துக் காட்டுத்தான். ஆனால் காப்பியம் நடக்குமா? இராமாயணக் காப்பியமே தோன்றி இருக்க முடியுமா? 'தூய்மொழி மடமான் இரக்கம் இன்மையன்றோ இன்று இவ்வுலகங்கள் இராமன் பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றதுவே' என்று ஒளிக்காமல் உண்மையை உடன்பட்டார் கம்பர். கைகேசியின் கொடுமை இக்களத்து வென்றிராவிட்டால், இராமன் புகழ் குடத்து விளக்குப் போல் கோசல நாட்டளவில்

அடைபட்டுக் கிடக்கும். கைகேசி இராமனை அயோத்தியினின்று போகச் செய்தாள். அதனால் அவன் புகழ் எங்கும் பரவியது. வாழ்க்கை நீண்டது. காப்பியத்துக்கு வேண்டும் நீட்டிப்பு கிடைத்தது.

### படல உணர்ச்சிகள்

ஒவ்வொரு போராட்டத்துக்கும் நல்லதுதான் வெல்லவேண்டும் என்பது நம் ஆசையென்றாலும் அவரவர் ஆசைப்படி உலகம் நடக்குமா? நல்லதே வென்று கொண்டு சென்றால், காப்பியம் வளருமா? தீமை உச்ச நிலைக்குச் சென்று விட்டாலோ காப்பியம் ஓடாது. நன்மையும் தீமையும் சகடக்கால்போல் சுழலும் போதுதான் காப்பிய இயக்கத்துக்கு வாய்ப்பு உண்டு. இராமாயணப் படலங்களை இந்த நோக்கில் ஆராய்ந்து பாருங்கள். ஒவ்வொரு படலத்துக்கும் ஒரு போராட்டம்; ஒவ்வொரு படலமும் ஒரு களம். ஒரு களத்தில் நன்மை வெல்லும். மறுகளத்தில் தீமை வெல்லும். அப்போதுதானே காப்பியம் கவர்ச்சியாக இருப்பதோடு வளர்ச்சியாகவும் இருக்கும். அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்பது இராமாயண நீதியாயினும், ஒவ்வொரு களத்தும் இந்நீதியைக் காண முடியாது. ஒரேயடியான நீதி காப்பியத்தைக் குறுக்கிவிடும். உலகியலை ஒழித்து விடும். ஆதலின் கைகேசியின் சூழ்வினைப் படலத்துக் கூனியின் சூழ்வினையே வென்றது. கைகேசி கணவனைக் கொன்ற கயத்தியானாள். தான் எண்ணியதைச் சாதிப்பதற்கு ஒரு பெண் கணவனையும் உயிர்வாங்கத் தயங்காள். தன் தாலி அறுவதையும் பொருட்படுத்தாள் என்று காட்டும் கொடுங்களம் இது. இக்களத்தில் காப்பியம் கணவனைக் கொன்றுதான் நீள வேண்டியதிருக்கின்றது. இப்படிச் செய்கின்றாரே புலவர் என்று அவரைப் பழிக்கப் புறப்படாதீர்கள். அங்ஙனம் செய்யும்படி அவரைத்தூண்டுவது காப்பிய இலக்கியம். பெரு மரங்களை அழிக்காமல் மாளிகை கட்ட முடியுமா? நிலத்தை அகழாமல் செய்யாறு காண முடியுமா? கைகேசி காப்பியப்பலி. அப்பலிதான் காப்பியது உரன். அவ்வுரன்தான் இராமன் புகழுக்கு இட்ட வித்து.

காப்பியம் எப்படி நடக்க வேண்டும் என்று விதிக்காதீர்கள். எப்படியெல்லாம் நடத்துகின்றார் என்பதைப் பாருங்கள். காப்பிய நடப்புக்காக என்னென்ன எல்லாம் புலவர் செய்ய வேண்டியுள்ளது என்பதைக் கண்டு கொள்ளுங்கள். முழுவமைப்பைப் பாராமல் தனிப் பாடல்களையே பார்த்துக் கொண்டிருந்தால், தமிழ் மொழிக்கண் புதுக் காப்பியங்கள் தோன்ற முடியுமா? படைக்கும் நோக்கத்தோடு பார்வை வேண்டும். சென்ற கால நூல்களையே

போற்றிக் கொண்டு காலந்தள்ள நினைத்தலாகாது. தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், சிந்தாமணி, பெரியபுராணம், இராமாயணம், நன்னூல் போன்றவற்றைக் கற்றுத் திளைத்துக் கற்பிப்பதோடு அமையாது, அவற்றின் அமைப்புக்களை வாங்கிக் கொண்டு தமிழ்ப் புத்துலகத்தைப் படைக்கவும் முயல வேண்டும்; ஒரு சிலருக்காவது இலக்கிய நோக்கு எதிர்கால நோக்காக இருத்தல்வேண்டும். நாலுகோடி மக்கள் கொண்ட தமிழுக்குப் படைக்குநர் நாற்பதின்மர் இருந்தாற் போதும். இன்று நாம் கற்கு முறை, கற்பிக்கும் முறையெல்லாம் அறிதற் பயனேயன்றி ஆக்கப்பயனில்லை. நோக்கம் ஆக்கமாக இல்லாத போது, பெருநூல்கள் எங்ஙனம் பிறக்கும்? 'கம்பநாடனுடன் கவிதை போயிற்று' என்றார் பாரதியார். இப்படி முற்றுப்புள்ளி சொல்லுமாறு ஆயிரம் ஆண்டுகளாக ஒரு மொழியின் போக்கு இருக்கலாமா? அமைப்பு அறிவார்க்கு எந்நூற் படைப்பும் அரியதில்லை. ஆனால் அவ்வமைப்பை அறிவதற்குச் சிந்தனைக் கால்கள் பல வேண்டும்; பரந்தும் சிந்திக்க வேண்டும்; துணிந்தும் சிந்திக்க வேண்டும்; அப்போதுதான் இது உலகியலிற் காணப்படும் நெறி, இது உலகிற்குக் காட்டவேண்டும் நெறி என்ற பகுத்துணர்வு தோன்றும்.

### பாத்திரத்தின் ஈகம்

காப்பிய நீட்டத்துக்குப் புலவர் எப்பாத்திரத்தையும் துணிந்து வளைக்கின்றார். பாத்திரத்தின் ஈகம்என்று கூட இதனைக் குறிப்பிடலாம். தன் நேரில்லா இராமன் - தந்தையின் வாய்மையைத் தான் காக்கப் புறப்பட்ட இராமன் - பொய்ம்மை வேண்டிய ஒருகளம். அங்ஙனம் வேண்டினான் என்ற சொல்ல வேண்டிய ஒரு களம் ஏற்பட்டுவிட்டது. சொல்லியபடியே மக்கள் இராமனுடன் காட்டுக்கு ஏகினர். ஏகாது அயோத்தியில் இருந்தவர் தொகை விரல்களினும் சிறிது. உடன் வந்த குடிமக்களையும் கூட அழைத்துக் கொண்டு வனம் வாழ்வதா? மக்களின் பேரன்பைக் கண்டு மதித்து இராமன் அயோத்தி திரும்புவதா? முன்னது தவத்திற்கு இழுக்காகும். பின்னது வாய்மைக்கு இழுக்காகும். நேர்முகமாக இச் சிக்கலைத் தீர்க்க முடியாது.

பூண்டபே ரன்பி னாரைப்
போக்குவ தரிது போக்காது
ஈண்டுநின் றேகல் பொல்லாது
எந்தைநீ இரதம் இன்னே

தூண்டினை மீள நோக்கிச்
சுவட்டையோர்ந் தென்னை யங்கே
மீண்டனன் என்ன மீள்வர்
இதுநின்னை வேண்டிற் றென்றான்.

அமைச்சன் சுமந்திரனை ஒரு சூழ்ச்சி செய்ய இராமன் வேண்டும் பாடல் இது. 'என்னை ஏற்றி வந்த தேரை இந் நள்ளிரவில் அயோத்திப் பக்கம் திருப்புக. காலையில் விழித்தெழுந்த இம் மாந்தர்கள் அத் தடத்தைக் காண்பார்கள். இரவே நான் மீண்டும் அயோத்தி சென்று விட்டதாக எண்ணித் தாமும் திரும்பி விடுவர். இந்த ஏமாற்றத்தைச் செய்க' என்று வேண்டுகின்றான் காப்பியப் பெருந்தலைவன் இராமன். இச் சூழ்ச்சி பலித்தது என்று அறிகின்றோம். இராமன் நகர் மீண்டான் என்று தேர்ச்சுவடு பார்த்து மயங்கிய குடிமக்கள் இடியும் கடலும் ஒலித்தாற் போல் ஆரவாரஞ் செய்து அயோத்தி போந்தனர் எனவும், உண்மையறிந்து உயிர் ஒழிந்தவர்போல் விம்மினர் எனவும் வசிட்டன் ஆறுதல் கூறினான் எனவும் அறிகின்றோம். இப்பொய் வாய்மையிடத்தது எனவும், புரை தீர்ந்த நன்மை பயப்பது எனவும் ஒரு சிலர் வாதாடலாம் எனினும், தன் நெஞ்சு அறிந்த பொய் என்பது வெளிப்படை. இப்புரை தீர்ந்த நன்மைதான் என்ன? கதை நீட்டிப்பு. காப்பிய ஓட்டத்துக்கு இராமனும் பொய்யனாக்கப்படுகின்றான். அவன் அங்ஙனம் ஆயினாலல்லது இந்த அன்புக் களத்தைப் புலவர் வென்று மேற் செல்லல் இயலாது.

காப்பியக் களங்களைப் புலவன் அமைத்துச் செல்லுங்கால் அறம், அறமின்மை என்ற நீதி பொருத்தி ஆராய்தல் கூடாது. காப்பியப் பண்பு என்பது தனிப் பண்பு. அப்பண்பு காப்பிய இயக்கத்துக்கு இன்றியமையாதது. அப்படைப்புக்கு எப்பாத்திரமும் வளைந்து கொடுக்க வேண்டும். காப்பியம் செய்யும் புலவர் பெருமகனுக்குப் பாத்திரங்கள் ஓராற்றான் அடிமையானவை. களங்களின் போராட்டங்களை ஈடுகட்டும்போது சான்றோர் ஒத்துக் கொள்ளும் நெறிகளையே புலவன் தழுவவேண்டும் என்பது நீதிக்கு நேராயினும், காப்பிய நீட்சிக்கு உதவாது. நீதியான முடிவைக் காப்பியம் இறுதியில் காட்டலாமேயன்றி, நிகழ்ச்சிதோறும் நீதியை வைத்து எழுத இயலாது. காப்பியத்துப் பல நிகழ்ச்சிகள் நீட்டிப்பு நோக்கம் உடையனவேயன்றி நீதிநோக்கம் உடையனவல்ல. இத்திறனாய்வை எக்காப்பியத்தும் பொருத்திக் காண்க உண்மை மேலும் விளங்கும்.

கோவலன் செய்கை தவறு என்பதைக் கண்ணகி அறிவாள், தற்காப்பேயன்றித் தற்கொண்டானைப் பேணுவதும் தன் கடன்

என்று அறிவாள்; அறிந்தும், 'அறிமடமும் சான்றோர்க்கு அணி' என்று அடங்கியிருந்தாள். 'வஞ்சக மாதவியுடன் களியாட்டு ஆடிக் குன்றனைய குடிச் செல்வத்தைத் தொலைத்தேன் நாணுகின்றேன்' என்றவாறு கண்ணகிமுன் கோவலன் வருந்திக் கூறுகின்றானே; இவ்வமயம் கண்ணகி நல்லாளுக்கு ஒரு வாய்ப்பு அல்லவா? சென்றதற்கு வருந்தாதீர்கள், இனி இங்ஙனம் செய்யாதீர்கள் என்று கண்ணகி தன் கணவனுக்கு ஒரு நீதி சொல்லியிருக்கக் கூடாதா? மனைவி கணவனுக்கு அறங் கூறல் கற்புக்கு இழுக்கா? அங்ஙனம் அவள் கூறியிருப்பாளேல் மேற்கதை வேறு வகையாக இருக்கலாம். அறம் யாதும் கூறாது அவன் போற்றா ஒழுக்கத்துக்குத் துணை செய்பவள்போல், 'நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச் சிலம்புகள் இரண்டுள, எடுத்துக் கொள்ளுங்கள்' என்று இன்முகத்தோடு மொழிந்தாள். இதுவே மதுரைச் செலவுக்கும் வினை விளைவுக்கும் காரணமாயிற்று. ஊராரைக் கேட்டால், கண்ணகி செய்தது பிழையென்பார்கள்; வேண்டினவெல்லாம் கணவனுக்குக் கொடுத்தாள் என்பார்கள். இவ்விடம் காப்பிய இயக்கத்துக்கு இன்றியமையாதது என்பதை அறிபவன் புலவன் ஒருவனே. அதனாலன்றோ 'வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல் கனைசுடர் கால்சீயாமுன்' என்ற சிறந்த இடத்து, வினையை எடுத்துக் காட்டி மொழிந்தார் இளங்கோ.

## இராவணக் களம்

இராமாயணக் காப்பியத்து இராவணன் எதிர்த் தலைவன் ஆனாலும் எள்ளி நகையாடுதற்கு உரிய சிறுமையன் இல்லை அவன். தன்நேரில்லாத் தலைமைத் தன்மை அவனுக்கும் உண்டு. இராவணன் ஏற்கனவே கயவனாக இருந்து பிறன்மனை நயந்திருந்தால் பாடுபெறுமாறு இலன். முக்கோடி வாழ்நாளும் முயன்று பெற்ற பெருந்தவமும் சிவன் வழங்கிய அரிய வரங்களும் திசையானைகளை வென்ற தோள்வலியும் உடையவன் இலங்கையரசன். அத்தகைய பேராற்றல் உடையவன் இலங்கையரசன். அத்தகைய பேராற்றல் உடையவன் குற்றத்திற் கீழான பிறன் மனை நயந்தான். அவன் நயந்த மனை கற்பிற் சிறந்த சீதையாக இருந்தாள். அவள்தன் கணவன் இறைவனே அனைய இராமனாக இருந்தான். குற்றஞ் செய்தவனும் பெரியவன், குற்றமும் பெரியது. குற்றஞ் செய்த இடத்தாளும் பெரியவள், அவளுக்கு உரியவனும் பெரியவன். அதனால் இராமாயணம் ஒரு காப்பியத்துக்குத் தகுந்த பொருளாயிற்று. இந் நான்கிடங்களுள் எது சிறியதாக இருந்தாலும் காப்பியம் தோன்றாது. இக்குற்றம் சில்லறை மாந்தரிகளிடை நடந்திருந்தால் தனிப் பாடலாவது

பிறக்குமா? ஆதலின் காப்பியத்துக் குணத் தலைவனுக்கு உரிய நன்மதிப்பு குற்றத் தலைவனுக்கும் உண்டு.

ஆயிரந் தோளி னானும்
வாலியும் அரிதின் ஐய
மேயின வென்றி விண்ணோர்
சாபத்தின் விளைந்தமெய்ம்மை
தாயினும் தொழத்தக் காள்மேல்
தங்கிய காதற் றன்மை
நோயும் நின்முனிவு மல்லால்
வெல்வரோ நுவலற் பாலார்

இராவணனது முதுகுத் தழும்பு கண்டு நாணிய இராமனுக்கு வீடணன் கூறும் ஒரு மொழி இது; அண்ணன் பெருமையை அகன்ற தம்பி நிலைநிறுத்தும் இடம் இது. தாயினும் தொழத்தக்க ஒரு பெண்ணை நயந்ததாலும், நின் சினத்தாலும் இராவணன் அழியலானான் என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்தான் வீடணன்.

சீதையை நயப்பதற்குமுன் வேறு குற்றம் உடையவன் என்று இராவணனுக்கு ஏதும் பழியுண்டா? தேவர்களை ஏவல் கொண்ட செயலெல்லாம் தவப்பெருமையின்பாற் படுமன்றிப் பழியின்பாற் படுமா? ஊர்தேடு படத்தில் இராவணன் ஆட்சிச் சிறப்புகளை, இலங்கையைக் காணும் அநுமன் வாயிலாகப் பலபடப் பாடுகின்றார் கம்பர். ‘அளிக்கும் தேறல் உண்டு ஆடுநர் பாடுநர் ஆகிக் களிக்கின்றார் அல்லால் கவல்கின்றார் ஒருவரைக் காணேன்’ என்று பாராட்டுகின்றான் அநுமன். கவலையில்லா இலங்கை என்ற ஒரு பாராட்டுப் போதுமே மன்னன் சிறப்பை அறிதற்கு.மரம் என்பது கற்பக மரம், மனை என்பது பொன்மனை, வேலைக்காரிகள் என்பவர் தெய்வப் பெண்கள், வேலைக்காரர்கள் என்பவர் தேவர்கள். இவ்வெல்லாம் தவத்தின் பயன் என்று விளக்குகின்றான் அநுமன்.

இன்ன பெருஞ் சிறப்பும் பேராற்றலும் இயல்பில் வாய்ந்த இராவணன் தன் சிறப்பெல்லாம் அழிக்கும் ஒரு பெருங் குற்றத்துக்கு ஆளாகின்றான். ஆளாக்கினால்லது காப்பியம் இயங்காது. வரமும் தவமும் சான்ற அவனை இப்பெருங்குற்றத்துக்குத் திடீரென ஆளாக்கிவிட முடியுமா? காப்பியம் என்பது கண்கட்டு வித்தையல்லவே. இக்குற்றக் களத்தை எங்ஙனம் கம்பர் அமைக்கின்றார்? மாரீசன் வதைப் படலத்தில் இக்களத்தின் அமைப்பைக் காணலாம். சொல்லின் செல்வியாகிய

சூர்ப்பனகையின் சூழ்ச்சித் திறத்தை இப்படலத்திற் காண்கின்றோம். மாரீசன் வதைப் படலம் என்ற பெயரைக் காட்டிலும் சூர்ப்பனகை சூழ்ச்சிப் படலம் என்ற பெயர் இப்படலத்துக்குப் பொருத்தமாகலாம். இதனை மந்தரை சூழ்ச்சிப் படலத்தோடும் ஒப்பிடுக.

இருந்தனன் உலகங்கள் இரண்டும் ஒன்றுந்தன்
அருந்தவம் உடைமையின் அளவில் ஆற்றலின்
பொருந்திய இராவணன் புருவக் கார்முகக்
கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே.

தங்கையும் அவ்வழித் தலையிற் றாங்கிய
செங்கையள் சோரியின் தாமரை சேந்திழி
கொங்கையள் மூக்கினள் குழையில் காதினள்
மங்குலின் ஒலிபடத் திறந்த வாயினள்.

மேற்கூறிய இரு பாடல்களின் தொடர்பு நயத்தைச் சிந்தியுங்கள். 'தங்கையும் அவ்வழி' என்று தொடங்கும் போதே 'அவ்வழி' என்பது அவள் சூழ்ச்சி முடிதற்கு ஏற்ற வழி என்பது குறிப்பிற் பெறப்படும். இப்படல முதற்பாட்டின் கண்ணேயே 'திண்ணகரிற் கடிதோடிச் சீதை தன்மை யுரைப்பனெனச் சூர்ப்பனகை வர இருந்தான், இருந்த பரிசு உரைத்தும் மன்னோ' என்று கூறிவிட்டார் புலவர். இருந்த தன்மை என்ன? மூவுலகையும் வென்ற தவ இராவணன் மகளிர் கண்ணின் வெள்ளத்தில் திளைத்து இருந்தானாம் சூர்ப்பனகை வரும்போது. இக்காமச் சூழ்நிலை அவள் சூழ்ச்சி பலித்தற்கு வாய்ப்பாயிற்று.

எத்தகைய பெரியவரையும் மிகையான காமச் சூழ்நிலை தோன்றின் சட்டெனக் கெடுத்துவிடும். அன்ன சூழ்நிலைக்கண் பிறர் தொடர்பு கொள்ளாவாறு பார்த்துக் கொண்டால் ஒருவாறு கெடுதியைத் தடுக்க முடியும். கெடுதல் செய்யத் திட்டம் இடுவோர் அத்தகைய மிகைச் சூழ்நிலையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். பாண்டியன் நெடுஞ்செழியன் செங்கோல் வழிப் பிறந்த மன்னன். ஆனால் கோப்பெருந்தேவியின் ஊடலை உடனே தணிக்க ஆவலுற்றான். பொறுமையிழந்தான். அரசவையைத் திடீரெனக் கலைத்து அரண்மனை புக்கான். அவன் புக்க அச்சமயம் பார்த்துப் பொற்கொல்லன் தன் சூழ்ச்சியை வெளியிட்டான். காம மயக்கம் அறிவை வேலை செய்யவிடாது. அம்மயக்கத்துக்குத் துணையான போக்கிலேயே அறிவும் தாழ்ந்து வேலை செய்யும்.

குலமுதற் றேவி கூடா தேக
மந்திரச் சுற்றம் நீங்கி மன்னவன்
சிந்தரி நெடுங்கட் சிலதியர் தம்மொடு
கோப்பெருந் தேவி கோயில் நோக்கிக்
காப்புடை வாயிற் கடைகாண் அகவையின்
வீழ்ந்தனன் கிடந்து தாழ்ந்துபல ஏத்தி,

என்றவாறு பொற்கொல்லன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்கு அந்தப்புரப் படிக்கட்டினின்றும் உரைக்கின்றான். அது ஏறாது என் செய்யும்? வளையாத செங்கோல் வளைவுறக் காண்கின்றோம் சிலப்பதிகாரத்து. இவ்வளவிற்கும் ஊடல் சொந்த மனைவியின்பாலது. அவ்வூடலையும் இடமும் காலமும் அறிந்து மற்றவன் பயன் படுத்தும்போது எவ்வளவோ பேரழிவு ஏற்படுகின்றது.

இராவணன் தன் செல்வத்திற்கும் பதவிக்கும் ஏற்ற காமுகன்; ஆனால் பழிக்கத்தக்க காமுகன் என்றோ, காமக்கயவன் என்றோ எளிதில் சொல்லிவிட முடியாது. மகளிர் குழாம் சூழ இருப்பது பண்டைய அரச மரபு. அதனைப் புலவன் புனைதல் ஓர் இயல்பு. வேதவதி என்ற பெண்ணை இராவணன் கற்பழிக்க முயன்றான் எனவும், 'விரும்பாத மங்கையை வம்பு செய்யின் நின் தலை வெடித்துவிடும்' என்று பிரமன் அவனைச் சபித்தான் எனவும் ஒரு கதைக் குறிப்பு உண்டு. இந்நிகழ்ச்சிக்குப் பின் இராவணன் இத்தகைய தீய காமப்போக்கை விட்டுவிட்டான் என்று நம்பலாம்.

அரசவொழுங்கிற்கு உட்பட்டுக் காமம் துய்த்து வரும் இராவணனைப் பிறன்மனை நயக்கச் செய்வது எளிதன்று. சூர்ப்பனகையின் சூழ்ச்சி மீண்டும் அவனை அவ்வழி உய்த்துவிட்டது. அவள் சூழ்ச்சி என்ன? சீதையைப் பிரித்து இராமனைத் தான் காதலனாகப் பெறுதல். கைம்மையாகிய அவள் தன் மணவாளனாக இராமனை அடைய முயன்றாள். அம்முயற்சி பலிக்க வேண்டுமேல் சீதையைப் பிரிக்க வேண்டும் என்பது அவள் சூழ்ச்சி.

இரைக்குநெடுங் கடலரக்கர் இறந்ததனை
    மறந்தனள்போல் இராமன் துங்க
வரைப்புயத்தின் இடைக்கிடந்த பேராசை
    மனங்கவற்ற ஆற்றா ளாகித்
திரைப்பரவை பேரகழித் திண்ணகரிற்
    கடிதோடிச் சீதை தன்மை
உரைப்பனெனச் சூர்ப்பனகை வரவிருந்தான்
    இருந்த பரிசுரைத்து மன்னோ.

உறுப்புகள் அறுபட்ட பின்னரும் இராமன்மேல் ஆசை சூர்ப்பனகைக்குப் பெருகிற்றே யன்றிப் பிற்படவில்லை. பத்தர்கள் அவன் திருமேனி அழகில் ஈடுபடுவது போலவே அவளும் ஈடுபட்டுச் சுவைத்தாள்; அவன் தோள்மேல் எழுந்த பேராசையால் சீதையைப் பகைத்தாள்; அவளைத் தன் அண்ணனுக்குக் காட்டிக் கொடுக்கத் துணிந்தாள்.

## சூர்ப்பனகையின் ஒட்டம்

சூர்ப்பனகை புலம்பி அழுது ஓடி வரும்போது இராவணன் காமமகளிர் சுற்ற இருந்தாலும் அறிவு மயங்கி இருக்கவில்லை. தங்கையின் அறுகோலத்தைக் கண்டதும் சினந்தான். இடியெனக் கழறினான், யார் செயல் இது என்று கேட்டான். நடந்தவற்றை யெல்லாம் தனக்கேற்ற முறையில் சூர்ப்பனகை விரித்துரைத்தாள். தன்னை மானவழிவு செய்தார்கள் மானுடர்கள் எனவும் தொடர்ந்து எழுந்த சேனைகளையும் படைத் தலைவர்களையும் கணப்பொழுதில் கொன்றவர்கள் மானுடர்கள் எனவும் இராவணனுக்குச் சீற்றம் பெருகு முறையில் குறிப்பிட்டாள்; என்ன வெல்லாமோ கூறினாள். அவ்விருவருடன் சீதை யொருத்தி வந்துள்ளாள் என்பதை மாத்திரம் வெளியிடவில்லை. வெளியிடுதற்கு நல்வாய்ப்பைப் பார்த்தாள். முழவொலியும் வீணையொலியும் குழலொலியும் சங்கொலியும் முழங்குகின்ற இலங்கையில் அழுகுரல் பிறந்தது. அவ்வழுகுரல் யாருடையது? மூன்றுலகையும் வென்ற இராவணன் தங்கையது. அழச் செய்தார் யார்? மானுடர். இவற்றைக் கேட்கக் கேட்க இராவணனுக்குக் கோப மற மானங்கள் கொதித்தெழுந்தன. இக் கொதிப்புக் களத்தைக் காமக்களமாக இப்போது மாற்றவேண்டும்.

ஆயிடை யெழுந்த சீற்றத்
    தழுந்திய துன்பம் ஆழித்
தீயிடை யுருக்கும் நெய்யிற்
    சீற்றத்திற் கூற்றஞ் செய்ய
நீயிடை யிழைத்த குற்றம்
    என்னைகொல் நின்னை யின்னே
வாயிடை யிதழும் மூக்கும்
    வலிந்தவர் கொய்ய என்றான்.

என்வயின் உற்ற குற்றம்
    யாவர்க்கும் எழுதொ ணாத
தன்மையன் இராம னோடும்
    தாமரை தவிரப் போந்தாள்

மின்வயின் மருங்குல் கொண்டாள்
வேய்வயின் மென்றோள் கொண்டாள்
பொன்வயின் மேனி கொண்டாள்
பொருட்டினாற் புகுந்த தென்றாள்.

ஆரவள் என்ன லோடும்
அரக்கியும் ஐய ஆழ்ந்து
தேரவள் திரண்ட கொங்கை
செம்பொன்செய் குலிகச் செப்பு
பாரவள் பாதந் தீண்டப்
பாக்கியம் படைத்த தம்மா
பேரவள் சீதை யென்று
வடிவெலாம் பேச லுற்றாள்.

முதற்பாட்டு இராவணன் நேர்மைத் தன்மையைக் காட்டுகின்றது. சினம் தலைக் கொண்டபோதும், நீ செய்த குற்றம் என்ன? கேவலம் மானுடர்களுக்கு இவ்வளவு துணிச்சல் வரவேண்டும் என்றால் நீ ஏதோ பெருங்குற்றம் செய்திருக்க வேண்டும் என்று வினவுகின்றான். அண்ணனிடமிருந்து இக் கேள்வியைத் தங்கை எதிர்பார்க்கவில்லை. நீ செய்த குற்றம் என்ன? என்ற வினாவிற்கு நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே என்று அவள் கூறியிருக்கலாம். அங்ஙனம் கூறினால் அவன் உடன்படமாட்டான் போலும் என்று அவளுக்குப் பட்டுவிட்டது. அவன் சொல்வழி இசைய வேண்டும் என்று அவளுக்குப் புலனாயிற்று. எதிர்த்து மொழிந்தால் தன்னைச் சினப்பான், இசைந்து மொழிந்தால் தன்வழி நடப்பான் என்று சடுதியிற் கண்டு கொண்டாள் ஒட்பமுடைய சூர்ப்பனகையாள். அவள் மதிநுட்பத்துக்குச் சிறந்த இடம் இது. இராமாயணத்திலேயே அரிய காப்பியக்களமும் இது. கோபத்தைக் காமதாகமாக மாற்றிய இடம் இதுவே.

'நீ இடை இழைத்த குற்றம் என்னை' என்ற வினாவிற்கு நேர்விடையாக 'என்வயின் உற்ற குற்றம்' என்று தொடங்கினாள் அரக்கி. அத் தொடக்கமே தங்கையின் சொல்லை நம்பும்படி செய்துவிட்டது அவனை. நான் செய்த குற்றம் ஓரழகியால் நிகழ்ந்தது என்று கடக்கென்று மறுமொழிந்தாள். இராவணன் சினம் மாறியது, மனம் மாறியது, குரல்மாறியது. 'ஆரவள்' என்று மீண்டும் ஒரு வினா எழுப்பினான். இவ்வினாவில் ஆசைக் குறிப்புத் தோன்றியது. அவ்வினாவிற்கு விடையிறுக்கு முகமாக முதற்கண் சீதை பெயரைக் கூறினாள்; உறுப்பழகை யெல்லாம் ஒன்றுவிடாது உவமித்துக் காட்டினாள்; உலகில் அரிய இவ்வழகி உனக்கே உரியவள் என்று

தூபமிட்டான். இவளை நீ பெற்ற மாதிரிதான் என்று துணிந்துரைத்தாள்; உனக்கு இந்நன்மை செய்வதற்காக எப்பழியையும் ஏற்பேன் என்றாள்; இராவணனைச் சிந்திக்கவிடாது விறுவிறு வென்று பேசித் தள்ளினாள்; அவன் அறிவை மடக்கினாள்.

இன்னவள் தன்னை யுன்பால்
உய்ப்பலென் றெடுக்க லுற்ற
என்னையவ் விராமன் தம்பி
யிடைபுகுந் திலங்கு வாளால்
முன்னைமூக் கரிந்து விட்டான்
முடிந்ததென் வாழ்வு முன்னின்
சொன்னபின் உயிரை நீப்பான்
துணிந்தனென் என்னச் சொன்னாள்.

எவ்வளவு பெரும் பொய்! உண்மைத் திரிபு!இராமன்மேல் காதலால் சீதையைத் தூக்க முயன்றபோது இலக்குவன் என் மூக்கை அரிந்தான் என்று உண்மையைக் கூறினால் இராவணன் என்ன செய்வான்? கேவலம் மனிதனையா காதலித்தாய் என்று வெகுளி பெருகிச் சூர்ப்பனகையின் எஞ்சிய உறுப்புக்களையும் அரிந்து கொன்று விடுவான். இது தெரியும் தங்கைக்கு. ஆதலின் முழுதும் மறைத்து மாற்றியுரைத்தாள். கூனி கைகேசியின் மனத்தைத் திரித்த சொல்லாற்றலையும் சூர்ப்பனகை இராவணன் மனத்தைத் திரித்த சொல்லாற்றலையும் ஓரளவு ஒப்பிட்டுப் பாருங்கள். இவ்விரண்டு திரிபுகளும் காப்பியம் மேல் இயங்குவதற்கு இன்றியமையாத கதைக் களங்கள். இராமன் பக்கத்துக்குக் கூனி எப்படியோ அப்படி இராவணன் பக்கத்துக்குச் சூர்ப்பனகை. பண்பிற் கொடியவர்களாக இருந்தாலும் காப்பியத்தில் அரிய களங்களைப் படைப்பவர்கள்; புலவன்தன் கூர்மையைச் சோதிப்பவர்கள். கொடியவர்கள்தானே காப்பியத்தை நீட்டிக்கின்றனர், நல்லவர்களைப் பலியாக்கு கின்றனர்.

கைகேசி மனத் திரிபுக்குக் கூனி ஒரு பெருங் காரணம். இராவணன் பிறன்மனை நயப்புக்குச் சூர்ப்பனகை ஒரு பெருங்காரணம். ஆனால் இவ்விரண்டும் வெளிப்படைக் காரணங்கள். இவற்றுக்கு மூலகாரணங்கள் வேறுள. கைகேசி தயரதனிடம் வரம் கேட்டாலல்லது, இராவணன் சீதையை நயப்புற்றாலல்லது, இராமன் பிறப்பின் பயன் கிட்டாது. இவ்வுண்மையைக் கம்பர் இந்த இடங்களில் தெளிவாக்குகின்றார்.

தீய மந்தரை யிவ்வுரை செப்பலும் தேவி

தூய சிந்தையும் திரிந்தது சூழ்ச்சியின் இமையோர்
மாயை யும்மவர் பெற்றநல் வரமுண்மை யானும்
ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத் தாலும்.

விதியது வலியி னானும் மேலுள விளைவி னாலும்
பதியுறு கேடு வந்து குறுகிய பயத்தி னானும்
கதியுறு பொறியின் வெய்ய காமநோய் கல்வி நோக்கா
மதியிலி மறையச் செய்த தீமைபோல் வளர்ந்த தன்றே.

இராமன்பால் அன்பிற் சிறந்த கைகேசி கேவலம் சிறிய கூனி சொற்கேட்டுக் கொடியவன் ஆனாள் என்பது முழுதும் ஒப்பத்தக்கதோ? வெள்ளியங்கிரியினை அள்ளி எடுத்த இராவணன் கேவலம் தங்கையின் சொல்லாற்றலில் மயங்கிக் கயவன் ஆனான் என்பது முற்றும் உடன்படத் தக்கதோ? இவ்வாறு ஆராய்கின்றார் கம்பர். இமையவர்தம் சூழ்ச்சி பலித்தற்காகக் கைகேசி தீயவள் ஆகவும் இராவணன் தீய காமுகனாகவும் ஆதல் வேண்டும். 'வேந்தர் பிரான் தயரதனார் பணியினால் வெங்கானில் விரதம் பூண்டு போந்ததுவும் கடை முறையே புரந்தரனார் பெருந் தவமாய்ப் போயிற்றம்மா' எனவரும் மண்டோதரி புலம்பலில் அடிப்படைக் காரணத்தை அறிகின்றோம்.

காப்பியக்களம் என்ற தலைப்பில் தேவர் வரவையும் கைகேசியின் கொடுமையையும் இராமன் சூழ்ச்சியையும் இராவணன் வேட்கையையும் எடுத்துக் காட்டினேன். காப்பிய இயக்கத்துக்கு இவ்விடங்கள் வேண்டியன என்று விளம்பினேன். ஒவ்வொரு படலமும் உணர்ச்சிக் களம் எனவும், புலவன் எந்த உணர்ச்சி காப்பிய மேல் வளர்ச்சிக்குத் துணை செய்யுமோ அந்த உணர்ச்சியை வெல்லச் செய்கின்றான் எனவும் சுட்டினேன். கையடைப் படலத்துச் சினவுணர்ச்சியும், தாடகைவதைப் படலத்துப் பெண்கொலை யுணர்ச்சியும், மந்தரை சூழ்ச்சிப் படலத்துக் கொடுமை யுணர்ச்சியும், கைகேசி சூழ்வினைப் படலத்து மகவுணர்ச்சியும், குகப் படலத்து அடிமை யுணர்ச்சியும், மாரீசன் வதைப் படலத்து மயக்க உணர்ச்சியும், மராமரப் படலத்துத் தந்திர உணர்ச்சியும் வாலிவதைப் படலத்து அரசியலுணர்ச்சியும், கிட்கிந்தைப் படலத்து அமைதி உணர்ச்சியும், ஊர்தேடு படலத்து ஆய்வுணர்ச்சியும், நிந்தனைப் படலத்துப் பெண்துணிபு உணர்ச்சியும், உருக்காட்டுப் படலத்து விடுதலை உணர்ச்சியும், வீடணன் அடைக்கலப் படலத்து நம்பிக்கை உணர்ச்சியும், முதற் போர்ப் படலத்து வெட்க உணர்ச்சியம், கும்பகருணன் வதைப் படலத்து நன்றி யுணர்ச்சியும், இந்திர சித்து வதைப் படலத்து

அறிவுலக உணர்ச்சிகளும், இராவணன் வதைப் படலத்து வீரவுணர்ச்சியும், மீட்சிப் படலத்துச் சோதனை உணர்ச்சியும் சுற்ற உணர்ச்சியும் விஞ்சிப் பெருகிக் காப்பியத்தை நடத்திச் செல்லக் காணலாம். வேறுபல உணர்ச்சிகளும் ஒவ்வொரு படலத்து விரவி யிருந்தாலும் காப்பிய வளர்ச்சிக்குத் துணை செய்யும் உணர்ச்சியைத்தான் தொடருணர்ச்சியாகக் கொள்ள வேண்டும்.

## இன்மைக் களங்கள்

காப்பியக் களம் என்ற தலைப்பை வளர்ச்சி நோக்கத்தில் இதுவரை கண்டோம். காப்பிய நெடுமைக்காக உணர்ச்சிகள் போராடுவதைக் கண்டோம். பிறிதொரு நோக்கத்திலும் இத் தலைப்பில் நான் சில சொல்லவேண்டும். காப்பியத்தை நீட்டிக்க விரும்பும் புலவன் சிறு களங்களை அமைத்தல் கூடாது. அமைத்தானாயின், அமைத்து நீட்டிக்க விரும்புவானாயின், அது செல்லுபடியாகாது. ஆதலின் களங்களைப் படைக்கும் காப்பியன் சில தடைக்களங்களைப் படைக்காது தவிர்க்கின்றான். விட்டு விடுகின்றான். சில களங்களை முற்றும் தவிர்க்கின்றான். வேறு சில களங்களை இடைக்கொட்கச் செய்யாது கடைக் கொட்கச் செய்கின்றான். களங்களை உணர்ச்சி மோதும் பெருங்களம் ஆக்குதல், களங்களை அமைக்காதே ஒழித்தல், களங்களைக் காலம் பார்த்து அமைத்தல் என்பவையெல்லாம் காப்பிய நெறிகள் ஆகும். இந்நெறிகளின் கரையைக் கண்டவர் கம்பர்.

## தயரதனைப் பாராமை

கைகேயி கேட்டபடி நாடுதுறந்து காடேகும் இராமன் இலக்குவனோடும் சீதையோடும் தயரதனை வந்து சந்தித்தான் எனவும், இராமன் முன்னிலையில் தயரதனுக்கும் கைகேயிக்கும் உரையாட்டம் நடந்தது எனவும், மன்னவன் பார்க்கவே மரவுரி தரித்து மூவரும் புறப்பட்டனர் எனவும் கூறியுள்ளார் வான்மீகியார். தயரதனுக்கு உயிராவான் இராமனே என்பது கம்பர் துணிபு. 'கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதியென உயிர் இரக்கும் கொடுங் கூற்றின் உளையச் சொன்னான்' எனவும் 'மன்னவன் இன்னுயிர் வழிக் கொண்டால்' எனவும் 'மைந்தனலாது உயிர் வேறிலாத மன்னவன்' எனவும், 'என் கண்ணெதிர் நின்றுங் கழிவானேல் உய்யேன்' எனவும், 'போயினன் என்றான் என்ற போழ்தத்தே ஆவிபோனான்' எனவும் தயரத வுடலுக்கு இராமவுயிர் காட்டும் கம்பர், வனம் புகுமுன் தயரதன் இராமன் சந்திப்பை அறவே நீக்கி விட்டார் தம் காப்பியத்து. அத்தகைய ஒருகளம் அமைத்தாரேல் கொண்டு நடத்தமுடியுமா? தந்தையிடம் கடைசியாக விடை பெற்று

வாழ்த்துப் பெற்றுச் செல்வது என இராமன் எண்ணினானேல், கடை போகுமோ? என்ன நடந்திருக்கும்? இராமன் போவது பொறாது தயரதன் அவன் முன்னேயே உயிர் விட்டிருப்பான். மேலும் ஏதும் நடக்க முடியுமா? ஈமக்கடன் கழியாது வனம் செல்ல முடியுமா? தந்தை யிறப்பைப் பரதனுக்குச் சொல்லிவிடாது இருக்க முடியுமா? பரதன் வந்தபின் அவன் இராமன் வனம் போக ஒருப்படுவானா? இவ்வெல்லாம் நடவாதிருக்கவும் காப்பியம் நடக்கவும் தயரதன் இறப்பைத் தள்ளி வைக்க வேண்டும். இறப்பைத் தள்ளவேண்டும் எனின், இராமன் தயரதனைச் சந்திப்பதைத் தவிர்க்க வேண்டும். களம் ஒன்று காணாது அங்ஙனம் முற்றும் தவிர்த்தார் கம்பர்.

### மணிமேகலையைக் கூறாமை

புலவன் படைத்த களங்கள் யாவை? படையாதே விடுத்த களங்கள் யாவை? என்ற இருபெரு நோக்கில் காப்பிய வளர்ச்சியை ஆராய வேண்டும். மேனாட்டுத் திறனாய்வாளர்தம் ஆராய்ச்சி யெல்லாம் படைத்த களங்களைப் பற்றியவையே. வெளிப்பட்ட அமைப்புக்களை வைத்துக் கொண்டுதான் அத்திறனிகள் விளக்கஞ் செய்துள்ளனர். காப்பியத் தெளிவுக்கு உண்மைக் களவாராய்ச்சி மட்டும் போதாது. இன்மைக் களவாராய்ச்சியும் உடனிலையாக வேண்டும். இது செய்யாதவரையில் புலவன் நுழைபுலம் வெளிப்படாது. சிலப்பதிகாரத்திலிருந்து ஓர் எடுத்துக்காட்டு.

மாதவியின் கானல்வரிப் பாடல் கேட்டு அவளைத் தவறாக உணர்ந்து கோவலன் பிரிகின்றான். பிரிந்தவன் வரவேண்டும் என்று மாதவி மலர்க்கடிதம் எழுதுகின்றாள். 'எல்லா உயிர்க்கும் இன்பம் செய்யும் இளவேனிற் காலத்துத் திங்கள் என்னை வாட்டுகின்றது; மன்மதன் மலரம்பால் என்னை நலிகின்றான்; இதன் குறிப்பு உங்கட்குத் தெரியாதா? என்பது கடிதக் கருத்து. தோழி வசந்தமாலை இக்கடிதத்தைக் கோவலனிடம் சேர்க்கின்றாள். இது நடிப்பு மகளின் கடிதம் என்ற கோவலன் மறுத்து விடுகின்றான். கோவலன் கண்ணகியோடு மதுரை சென்றதை அறிந்த மாதவி மற்றுமோர் முடங்கல் கோசிகன் மூலம் விடுக்கின்றாள். 'கற்பிற் சிறந்த மனைவியுடன் இரவோடு இரவாகப் பெற்றோர்க்கும் சொல்லாது நீர் புறப்பட்டது என் குற்றமா? குற்றமாயின் பொறுத்தருள்க' என்று வேண்டுவது இரண்டாவது கடிதக் கருத்து. இக்கடிதங்களில் ஒரு குறிப்பு ஒழிக்கப்பட்டுள்ளது. கோவலனுக்கு மாதவிபால் பிறந்தவள் மணிமேகலை. மாதவி முதற் கடிதத்தில் மணிமேகலையைச் சுட்டிக் காட்டி, தங்கள் பிரிவால் குழந்தை அழுகின்றது. அப்பா அப்பா என்று அலமருகின்றது என்று குறிப்பிட்டிருந்தால், கோவலன் குழந்தைக்காகவேனும் மாதவி வீடு

மறுமுறை சென்றிருக்கக் கூடும். அவனுக்குக் கண்ணகியால் மகப்பேறு இல்லையன்றோ? மணிமேகலைக் குறிப்பு முன் கடிதத்திலும் இல்லை. பின் கடிதத்திலும் இல்லை. கானல்வரிப் பிரிவுக்கு முன்னே மணிமேகலை பிறந்துவிட்டாள். எனினும் பதினைந்தாவது அடைக்கலக் காதைக்குமுன்வரை மணிமேகலை வரவை இளங்கோ தவிர்த்தார். புகார்க் காண்டத்து அவளைச் சிறிதும் யார் வாயிலாகவும் நினைவூட்டவில்லை. நினைவூட்ட விரும்பின், இடங்களா இல்லை? கடலாடுவதற்குக் கோவலனும் மாதவியும் சென்றனர். வசந்தமாலையும் உடன் சென்றனள். ஏவலாளரும் சென்றிருந்தனர். ஒரே மகள் சிறுமி மணிமேகலை மட்டும் செல்லவில்லை என்பது பொருந்துமா? சென்றிருந்ததாகச் சொன்னால் நடப்பது வேறு.

> உவவுற்ற திங்கள் முகத்தாளைக்
>     கவவுக்கை ஞெகிழ்ந்தனனாய்ப்
> பொழுதீங்குக் கழிந்த தாகலின்
>     எழுதுமென் றுடனெழாது
> ஏவலாளருடன் சூழ்தரக் கோவலன்தான்
>     போன பின்னர்த்
> தாதவிழ் மலர்ச்சோலை
>     ஓதையாயத் தொலியவித்துக்
> கையற்ற நெஞ்சினளாய்
>     வையத்தி னுள்புக்குக்
> காதலனுட னன்றியே
>     மாதவிதன் மனைபுக்காள்.

கோவலன் ஒரு புறமும் மாதவி வேறுபுறமும் செல்லுமாறு மணிமேகலைக் குழந்தை உடனிருந்தால் விட்டிருக்குமா? ஊழ்வினையையும் உப்பக்கம் காணவல்லதன்றோ குழந்தையின் சூழ்வினை? அகப் பாடல்களில், தீராத பிணக்கைக் குழந்தை மருந்து தீர்க்கக் காண்கின்றோம். 'தந்தையர்க்கு அருள் வந்தனவால் புதல்வர்தம் மழலை' என்பது ஔவையின் வாக்கு. மணிமேகலைப் பிறப்பைக் கோவலன் கொடையளித்துக் கொண்டாடியவன். மகளை அவன் மறந்தானல்லன் என்பது இடைச்சி மாதவி வீட்டில் அவன் கண்ட கனவால் அறிகின்றோம்.

மாதவியோடு பல்லாண்டு வாழ்ந்தபோதும், கடலாடச் சென்றபோதும், கடிதங்கள் எழுதியபோதும், மணிமேகலையைக் கிஞ்சிற்றும் சொல்லாது காப்பிய இளங்கோ ஏன் விடுத்தார்? நன்றாகப் பேசக்கூடிய தலைப்புக்களையே மேற்கொள்ள வேண்டும் என்பது போலக் கொண்டு செலுத்தக் கூடிய களங்களையே புலவன்

அமைக்க வேண்டும். தன் திறங்காட்ட வேண்டி, முற்றும் இடையூறான உணர்ச்சிகளுக்குக் களம் சமைத்தலாகாது. 'செய்தக்க அல்ல செயக் கெடும்' என்பது காப்பியத்துக்கும் பொருத்தமான வள்ளுவம். ஆதலின் கோவலன் புகாரை விட்டு மதுரை சென்றபின், கொலை வாய்ப்படுவதற்குமுன், இனி நீட்டிப்புக்கு இடையூறு இல்லை என்று மணிமேகலையைச் சிலப்பதிகார அரங்கத்து வரச்செய்தார் இளங்கோ.

## இலக்குவனைக் காமப்படுத்தாமை

பல்வேறு களங்களைப் படைப்பதாலும் வேண்டிய மட்டும் விரிப்பதாலும் காப்பியம் ஆல்மரம்போல் அகல விலக்கியமாக விளங்குகின்றது. அங்ஙனம் விரிக்கும் புலவன் சில களங்களைப் படைப்பதிலும் வளர்ப்பதிலும் விழிப்புடையவன் ஆதல் வேண்டும். மற்றொன்று விரித்தல் என்னும் குற்றத்துக்கு ஆளாகக்கூடாது. சுவை கருதியோ தன் புலமைப் புலப்பாடு கருதியோ நூற் பெருக்கம் கருதியோ வேண்டாத ஒன்றுக்குக் களங்காணல் ஆகாது. சுருங்கச் சொல்லின் அமைப்பு முரண் என்ற குற்றம் காப்பியத்துக்கு உதவாது.

இலக்குவனுக்கு ஊர்மிளை என்ற ஒரு மனைவியுண்டு. அண்ணனுடன் வனஞ்செல்ல நினைத்த இலக்குவன் தன் மனையாளிடம் சொல்லிக் கொண்டானா? சொல்லிக் கொண்டிருந்தால், சீதை சொல்லியனபோல, அவளும் உடன் வருவேன் என்று பிடிவாதம் செய்திருந்தால் கதைப் போக்கு என்ன போக்காக இருக்குமோ? அன்னை சுமித்திரையிடம் மட்டும் சொல்லிக் கொண்டான். அவளும் 'மகனே இவன்பின் செல், தம்பியென்னும் படியன்று, அடியாரின் ஏவல் செய்தி' என்று சிறிதும் தடை செய்யாது ஒரு குறிக்கோள் காட்டி விடுக்கின்றாள். எல்லா உணர்ச்சிகளும் இராமனுக்கு அடியவன் என்ற ஒரு மூலவுணர்வில் அடங்கிவிட்டன. இராமன் சீதையிடம் சென்று, 'கருவி மாமழைக் கற்றடம் கண்டு நான் வருவென் ஈண்டு வருந்தலை நீ' என்று தெரிவித்தது போல் இலக்குவனும் ஊர்மிளையிடம் சென்று தெரிவித்தான் என்பது உலகியலுக்குப் பொருந்துமாயினும், காப்பியத்துக்கு மற்றொன்று விரித்தல் என்ற இழுக்காகிவிடும். காப்பியத் தலைவனான இராமனுக்குச் சொல்வன வெல்லாம் கூடச் சென்ற இலக்குவனுக்கும் சொல்லலாமா?

கிட்கிந்தை கார்காலப் படலத்தில் இராமனது காதல் வேட்கை புனையப்படுகின்றது. சீதையின் பிரிவை நினைத்துத் தனித்துப் புலம்பும் அவனைக் கார்காலம் எங்ஙனம் எல்லாம் வாட்டியது

என்பதை விரித்து ஒரு படலம் செய்கின்றார் கம்பர். மேகத்தையும் மயிலையும் மானையும் கொடியையும் தன் உயிரையும் இந்திர கோபத்தையும் விளித்து இராமன் புலம்பும் காம உளறல்கள் பல. ஆனால் இக் கார்காலம் இலக்குவனையாதும் செய்யவில்லை. அவனும் மனைவியைப் பிரிந்திருப்பவன் தானே? பிரிவு யாரையும் வாட்டுமன்றோ? அவ் வாட்டம் இலக்குவனுக்கும் வந்தது எனவும் அதனை அவன் பொருட்படுத்தாது கருமமே கண்ணாக இருந்தான் எனவும் பாடினாற் கூட, ஒரு கால் சுவையாக இருந்தாலும், உண்மைச் சார்பாக இருந்தாலும், காப்பிய நடையில் முரண் தோன்றும். தலைமைப் பாத்திரத்துக்கு அமைக்கும் பல களங்களைத் தலைமையிலிகளுக்கு அமைக்கக் கூடாது.

உண்ணிறைந் துயிர்க்கும் வெம்மை
யுயிர்சுட உடலை யுள்ளம்
புண்ணுற வாளி தூர்த்தல்
பழுதினிப் போதி மாரா
எண்ணுறு கல்வி யுள்ளத்
திளையவன் இன்னே யுன்னைக்
கண்ணுறு மாயிற் பின்னை
யாரவன் சீற்றங் காப்பார்.

கார்காலத்து வருந்தும் இராமன் தன்மேல் மலர்க்கணைகள் வீசும் மன்மதனைப் பார்த்துக் கூறும் செய்யுள் இது. இலக்குவனது காமவென்றியைப் பாராட்டும் பாடல் இது. 'மன்மதா, என்னைக் காப்பதற் கென்றே என் தம்பி உடன் வந்துள்ளான். என் உயிரும் உடலும் உள்ளமும் புண்ணாகும் படி நீ அம்பு தொடுப்பதை விட்டுவிடு. என்னை வருத்தும் உன்னை என் இளையவன் கண்டு விடுவானாயின், சினம் பொங்கும். அச் சினப்பொங்கலை யார் தடுப்பார்? நீ அவனைக் காமப்படுத்த இயலாது. ஏன்? வந்த காரியத்தைத் தவிரப் பிறிதொன்றுபுகாத உள்ளம் உடையவன். நின் மலரம்பு அவனைப் பாயாது' என்று கார்காலத்தில் தன் மென்மையையும் தன்னையும் காக்கும் இலக்குவன் வன்மையையும் வெளிப்படுத்துகின்றான் இராமன். பதினாலாண்டும் இலக்குவனது காம உணர்வைக் கம்பர் பாட நினைத்ததில்லை. அங்ஙனம் ஒரு பாட்டு இருந்தால், இராமாயணத்து இடைச்செருகல் மிகுதியில்லை என்ற கொள்கையுடைய நானும், அப்பாடலை எடுத்தெறியத் தயங்கேன். அவன் அவ்வுணர்வுச் சுவடு இல்லாதவன் என்பதற்கு உடனிருக்கும் இராமன் சொல்லே சான்று. இதனால் நாம் அறியப்படும் காப்பிய

அமைப்பு என்ன? பாத்திரங்களுக்குக் களம் அமைப்பதிலும் அமையாது விடுப்பதிலும் ஒரு பகுத்தறிவு புலவனுக்கு வேண்டும்.

காப்பியம் என்பது பேரிலக்கிய மாளிகை. அதன் சிறப்பு உரிய இடத்து உரிய பொருளை உரிய அளவில் அமைக்கும் முறையில் உள்ளது. தாறுமாறாகக் கிடப்பதில் சில தனிச் சுவை தோன்றினும் அதனை நெல்லிச் சாக்குப் போல ஒரு கவிதைச் சாக்காகவே கருதவேண்டும். தொடர்பழகும் சிந்தனையுரமும் ஊரா. காலமறிதல் இடமறிதல் வலியறிதல் என்பன காப்பிய இலக்கணங்கள் ஆகும். ஓர் எடுத்துக்காட்டு. வினாத்தாட்களை முன்னரே வெளிப் படுத்தினால் குற்றம்; உரிய காலம் வரும் வரை போற்றிக் காத்துத் தேர்வறையில் வெளியிட்டால் ஒழுக்கம். முன்னரே தெரிந்து கொள்ளவேண்டும் என்று பலர் ஆசைப்படுவார்கள். உரிய காலத்துத் தெரியச் செய்வதே மதிப்பும் பயனும் ஆகும்.

காப்பியப் புலவனுக்கு அடக்கம் வேண்டும். ஒரு கருத்து முன்னரே உதித்தாலும், அஃது இறுதிப் படலத்துக்கு ஏற்றஞ் செய்யுமெனின், அதுகாறும் அறிவிற் பொதிந்து கொள்ளவேண்டும். ஒரு பாத்திர வரவு எவ்வளவு சிறப்பினதாயினும், ஒரு முறை வந்தாற் போதும் எனின் அவ்வளவில் நிறுத்தும் புலமையுரன் வேண்டும். சிந்தனை ஊற்றெடுக்கும் புலவனும் காப்பிய அமைப்பு என்ற வரம்பிற்குள் தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும். காற்பந்து உதைப்பவன் எவ்வளவு தொலை செல்ல உதைக்கின்றான் என்பது பார்வையன்று. அத்தொலை களவெல்லைக்கு உட்பட்டிருக்க வேண்டாமா? ஒவ்வொரு முறையும் பந்து ஓங்கி உதைபட்டு வெளிச் சென்றால், அவன் விளையாட்டுக்கு உலக வெல்லை கூறுவதன்றி ஒத்துவரும் எல்லை கூறமுடியாது. காட்டுத்தனமாகக் கால்வைக்கின்றான் என்றோ, தோல்வி மனப்பான்மையினால் காலத்தை ஓட்டுகின்றான் என்றோ இகழப்படுவான். காப்பியம் என்பது புலவன் படைப்பாயினும், அப்படைப்பு அமைப்பு வகையில் படைத்தவனையும் கட்டுப்படுத்துகின்றது.

## மண்டோதரி களங்கள்

இன்றைய என் சொற்பொழிவின் இறுதிக்களமாக இராமாயணத்தின் இறுதிக்களத்தை விளக்கி முடிப்பேன். இராவணன் மனைவி மண்டோதரி எல்லாப் பெண்மையும் நிறைந்தவள். 'அன்னளாகிய சானகி இவள் என்று' அநுமனே கருதினான் என்றால் மண்டோதரியின் அழகுக்கும் கற்புக்கும் வேறு சான்று வேண்டுமோ? கணவன் ஒழுக்கந்தவறி என்பதற்காகக்

கற்புடை மனைவியர் பழிக்கத் தக்கவர் அல்லர். அந்நிலையிலும் தற்காத்துத் தற்கொண்டானைப் பேணும் அவர்தம் மனைமாட்சி பாடுபெறத் தக்கது. பேகன் கண்ணகியும் கோவலன் கண்ணகியும் சாதுவன் ஆதிரையும் இல்மாட்சியிற் சிறந்தவர்கள். இராவணனது சிறுமை மணிவாசகருக்குத் தெரியாதோ? தெரிந்துதான், 'தென்னிலங்கை அழகமர் வண்டோதரி' என்று அவன் மனைவியைப் பாராட்டித் திருவாசகம் பாடினார்.

என்ற ழைத்தனள் ஏங்கி யெழுந்தவன்
பொன்ற ழைத்த பொருவரு மார்பினைத்
தன்ற ழைக்கைக ளாற்றழு வித்தனி
நின்ற ழைத்துயிர்த் தாளுயிர் நீங்கினாள்

இராவணன் இறந்தபின் கைம்மையாய் வாழ விரும்பாது, பெருமூச்சு விட்டு நொடிப்பொழுதில் உடனுயிர் துறந்தாள் மண்டோதரி. இவ்வகை இறப்பு மிகவும் போற்றப்படும். காதலர் இறப்பின் எரிமூட்டி உடன்கட்டை ஏறாது நினைப்பளவில் உயிர்விடுவர் என்று மணிமேகலை யாசிரியர் ஒரு கற்பியர் கூறினாரே, அதற்கு எடுத்துக் காட்டு மண்டோதரி. 'உயிர்த்தாள் உயிர் நீங்கினாள்' என்று சுருங்கச் சொல்லி அவள் கற்பை விளங்க வைத்தார் கம்பர். தயரதன் இறந்த பின் அவன் மனைவியர் யாரும் உடனுயிர் துறக்கவில்லை என்பதையும் ஏனைத் தேவியர்களே அங்ஙனம் செய்தனர் என்பதையும் ஒப்பு நோக்கிக் கொள்ளுங்கள்.

இன்ன சிறப்புடைய இராவணன் தேவிக்கு இராமாயணத்து எவ்வளவோ களங்கள் அமைக்கலாம். அநுமன் இலங்கையை எரியூட்டிய பின், இராவணன் மந்திரிசபையைக் கூட்டினான். பொதுவாக அரசவையில் அரசனும் அரசியும் வீற்றிருப்பது அரசமுறையல்லவா? 'பேரமர் உண்கண் இவளினும் பிரிக' என்று அரியணையில் தன் பாங்கர் இருந்த தேவியைச் சுட்டி வஞ்சினம் மொழிந்தான் பூதப் பாண்டியன். பாண்டியன் நெடுஞ்செழியனோடு அவன் குலமுதற்றேவியும் மந்திர அவைக்கண் கூட இருந்தாள் என்று கொலைகளக் காதையிலும் வழக்குரை காதையிலும் அறிகின்றோம். எண்கு தன் பிணவோடு இருந்தது போல எலும்பணையில் காட்டுக் குருமகன் தன் அரசியொடு இருந்தனன் என்று ஆதிரை பிச்சையிட்ட காதையில் அறிகின்றோம். இவ்வழக்குப்படி இலங்கைக்கு நேர்ந்த அழிவுபற்றிக் கூடிய அவையில் மண்டோதரியும் வீற்றிருந்தாள் என்று ஒரு களம் அமைத்தால், என்னாகும்? சிந்தித்துப் பாருங்கள். கற்புடைய நங்கை அந்த அவையைக் கலைத்துவிட மாட்டாளா? காப்பிய நடப்புக்கு

வழியடைக்கும் கல்லாகும் என்று கருதி மந்திரி சபையில் மண்டோதரிக்குப் புலவன் இடங்கொடுக்கவில்லை.

மண்டோதரிக்கு அமைத்த களங்கள் சிலவே. அவளுக்கு அட்சன் என்ற ஒரு மகன் உண்டு. அவனை அநுமன் கொன்றுவிட்டான். அச்செய்தி கேட்டு அன்னையாகிய அவள் தன் வயிற்றில் அடித்துக் கொண்டு இராவணன் முன் புலம்பி வீழ்ந்ததாக ஒரு பாடல் உள்ளது. சுந்தர காண்டத்தில். இதனை ஒரு களமாகக் கம்பர் அமைக்க நினைக்கவில்லை. 'மயன் மகள் வயிறலைத்து அலறி மாழ்கினாள்' என்று தாயின் ஒப்பாரியை மிகச் சுருக்கிவிட்டார். ஏன் அங்ஙனம் செய்தார்? இந்திரனை வென்ற மகனாகிய மேகநாதன் இறக்கும்போது, மண்டோதரிக்கு ஒரு பெருங்களம் படைக்க வேண்டியுள்ளது என்பதனைக் கம்பர் அறிவாரன்றோ? பின்னர் வரும் ஓர் அரிய காப்பியப் பயனை உட்கொண்டு இந்த மகன் இறப்பைச் சிறப்பாகப் பாடவில்லை. இம்முறையைப் பாத்திர மறைப்பு என்று கொள்ளவேண்டும். பின் வரும் வாழ்க்கைப் பெருஞ்செலவு கருதி எவ்வளவு சிக்கனமாக முன்பே சிலர் நடந்து கொள்கின்றனர். அது போலும் காப்பியச் சிக்கனம் பெருங்காப்பியப் புலவனுக்கு வேண்டும்.

உயுத்த காண்டத்து இராவணன் சோகப்படலம் நல்ல உணர்ச்சிகளுக்கு வழி செய்த படலம். பிறன்மனை நயந்த இராவணனும் அவன் மனைவி கற்புடைய நங்கை மண்டோதரியும் உயிரோடு சந்திக்கும் ஓர் இராமாயணப் படலம் இது. மேகநாதன் இறந்த சோகத்து அச் சந்திப்பு நிகழ்கின்றது. கும்பகருணன் முதலான வீரரெல்லாரும் வதைப்பட்ட பின்னும், மேகநாதனது தனி வீரத்தை நம்பியிருந்தான் இராவணன். அந்நம்பிக்கை முனை ஒடிந்து விட்டது. 'எனக்கு நீ செய்யத்தக்க கடனெல்லாம் ஏங்கி ஏங்கி உனக்கு நான் செய்வதானேன்' என்று தனக்கும் சாவு உண்டு என்பதுகூடப் பேசத் தொடங்கி விட்டான். பன்னிப் புலம்பினான். இரங்கினான், ஏங்கினான், மகனுடலைச் சுமந்து கொண்டு அரண்மனை சென்றான். மலையின்மேல் மயில் வீழ்ந்த தென்ன மைந்தன்மேல் மறுகி வீழ்ந்தாள் மண்டோதரி; உயிரற்றவள் போலானாள்; மகனது தலையிலா உடம்பைக் காண இன்னும் வாழ்கின்றேனே என்று கதறினாள். அவனது இளமை வீரத்தை எல்லாம் நினைந்தாள். சிவன் முதலோரை வென்ற என் புதல்வன் கேவலம் மக்களில் ஒருவன் கொல்ல மாண்டானே என்று ஓலமிட்டாள். மனைவியின் அரற்றலை இராவணன் நேரடியாகக் கேட்கும் களம் இது. பலவாறு புலம்பல் செய்த மண்டோதரி, இராமயணத்தில் பெருந் திருப்பஞ் செய்த பாடல் இது.

பஞ்செரி யுற்ற தென்ன
அரக்கர்தம் பரவை யெல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல
விளிந்ததே மீண்ட தில்லை
அஞ்சினேன் அஞ்சி னேனிச்
சீதையென் றமிழ்தாற் செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன்
நாளைஇத் தகையன் அன்றோ.

*இராவணன் முடிவை மண்டோதரி உணர்ந்து விட்டாள். அவன் கேட்குமாறு முன்னிலைப் புறமொழியாக அவ்வுணர்வைப் புலப்படுத்தினாள். 'சீதை என்று அமிழ்தாற் செய்த நஞ்சு' என்று தன் கணவன் நயந்த பெண் பெயரைக் குறிப்பிட்டாள். அவள் கணவன் உயிர்க்கு அவள் அமிழ்து; பிறன்மனை நயந்த என் கணவன் உயிர்க்கு நஞ்சு என்று கருத்துரைத்தாள். கற்பு நஞ்சினைக் குடித்த என் கணவன் முக்கோடி வாணாளன் ஆயினும் இன்னும் சின்னாளில் முடிதல் திண்ணம் என்று துணிவும் தெளிவும் துக்கமும் படமொழிந்தாள்.*

என்றழைத் திரங்கி யேங்க
இத்துயர் நமர்கட் கெல்லாம்
பொன்றழைத் தனைய அல்குற்
சீதையாற் புகுந்த தென்ன
வன்றழைக் கல்லின் நெஞ்சின்
வஞ்சகத் தாளை வாளால்
கொன்றிழைத் திடுவென் என்னா
ஓடினான் அரக்கர் கோமான்.

*மனைவிமொழி செவியுற்ற இராவணன் விரைவிற் பெற்ற மாற்றம் பெரிது. தன் படையாளரும் தம்பியும் மகனும் பிறரும் பட்ட அழிவெல்லாம் அவன் உள்ளத்திரையில் ஒரு கணம் தோன்றிற்று. எல்லா உயிர்க்கேடும் இச்சீதையால் வந்தது என்று எண்ணினான். இக் கெடுதற்காரியை இரு துண்டாக்குவேன் என்று அரண்மனையிலிருந்து அசோகவனம் நோக்கி ஓடத் தொடங்கினான் என்றால் சீதையைத் தன் காம இரையாகக் கருதியதை விட்டொழித்துத் தன் வாளிரையாகக் கருதினான் என்பது தெளிவு. சீதையைக் காமப் பொருளாகக் கருதாமல் பகைப் பொருளாகக் கருதினான் என்பது தெளிவு. இம்மாற்றம் மேகநாதன் இறப்பால் நிகழ்ந்ததன்று; மகன் இறந்துபோது, மனைவி தன் கண்காண அழுத*

காட்சியாலும் தன் செவி கேட்க வரும் அழிவைச் சொல்லிப் புலம்பலாலும் இராவணனுக்கு ஏற்பட்டது.

சீதையைக் கொல்லலாம் என்று நினைப்பளவில் இருக்க வில்லை. இராவணன் கொல்லவே முயன்று புறப்பட்டுவிட்டான். அங்ஙனம் ஓடுகின்றவனை நோக்கி அருகிருந்த மகோதரன் அவனடி வணங்கி, இது புகழ்க்கேடு என்று சொல்லி ஒருவாறு தடுத்தான். 'நீ சீதையைக் கொன்றால் உலகம் என்ன சொல்லும்? இராமனோடு போரிட்டால் வெல்ல முடியாது என்று கருதி இங்ஙனம் ஒரு சூழ்ச்சி செய்தான் என உன் வீரத்தைப் பழிக்காதா' என்றான் மகோதரன். அதன்பின் சீதையை வெட்ட எடுத்த வாளை நிலத்தில் எறிந்தான் என்று அறிகின்றோம். மண்டோதரி சந்திப்புக்குப் பின் அவள் நினைவே இராவணன் மனத்துப் புகுந்துவிட்டது. சீதையைப் பகைவன் மனைவி என்று முறைப்படி கருதினான்.

மன்ற லங்குழற் சனகிதன்
மலர்க்கையால் வயிறு
கொன்ற லந்தலைக் கொடுநெடுந்
துயரிடைக் குளித்தல்
அன்றி தென்றிடின் மயன்மகள்
அத்தொழில் உறுதல்
இன்றி ரண்டினொ ன்றாக்குவென்
தலைப்படின் என்றான்.

இறுதிப்போருக்குத் தேரரேறிப் போகும் இராவணன் கூறும் வீரவுரை இது. 'இராமனைக் கொல்வேன். அதனால் அவன் மனையாள் சானகி தன் கையால் வயிற்றைப் பிசைந்து துன்பமுற வேண்டும். யார் மனைவி தாலியறுக்கப் போகின்றாள் என்பதை இப்போரில் முடிவாகப் பார்த்துவிடப் போகின்றேன்' என்று முழுங்குகின்றான் இராவணன். எவ்வளவு தெளிவான தூய்மையான வீரமொழி இது. இராவணன்தன் இப்போருரையில் சிறிதாவது காமமாசு உண்டா? அவன் உள்ளத்து அவன் மனைவியே குடிகொண்டிருந்தனள் என்பதும் அவள் துயருறுதலை அவன் விரும்பவில்லை என்பதும் 'மயன் மகள் அத்தொழில் உறுதல்' என்ற நடையாலும் தன் மனையாளை இரண்டாவதாகக் கூறியதாலும் அறியலாம்.

ஈசனை இமையா முக்கண்
இறைவனை இருமைக் கேற்ற
பூசனை முறையிற் செய்து
திருமறை புகன்ற தானம்

வீசினன் இயற்றி மற்றும்
வேட்டன வேட்டார்க் கெல்லாம்
ஆசற நல்கி ஒல்காப்
போர்த்தொழிற் கமைவ தானான்.

இராவணன் முற்றும் காமவுணர்வு அற்றான் எனவும் தெய்வ வுணர்ச்சியும் போருணர்ச்சியும் திரும்பப் புகப் பெற்றான் எனவும் இப்பாடல் விளம்புகின்றது. வெள்ளி மலையை விடையோடும் உமையோடும் சிவனோடும் அள்ளியெடுத்தவன் என்று செருக்காகப் பாராட்டப் பெற்ற இராவணன் இப்போது இம்மை மறுமைக்கு ஏற்ற பூசை செய்கின்றான். சீதை அழகைச் சூர்ப்பனகை சொல்லக் கேட்ட நாள் முதல் தன்னைக் காமத்தொழிற்கு ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்த இராவணன், 'சீதையை விடுவது உண்டோ இருபது தோளுண்டாக' என்று காமவுரை மொழிந்த அவன் இப்போது போர்த் தொழிற்கு - சீதையைத் துயர் உறுத்தும் போர்த்தொழிற்குப் புறப்பட்டான். இம்மாற்றம் முன் சொல்லியாங்கு மண்டோதரி களம் அமைந்ததால் விளைந்த பயன் என்று அறிய வேண்டும்.

## மனச்சிறை

மண்டோதரி வரவு இராவணன் தூய்மையானதற்கும் சீதையைப் பகைவன் மனைவி என்று உணர்தற்கும் முடிவுக் காரணமாயினும் இவ்விறுதிக் களமே அவனை நொடிப் பொழுதில் முற்றும் தூயன் ஆக்கிற்று என எண்ணி விடாதீர்கள். அவனைப் பிறன்மனை நயக்கும் காமுகன் ஆக்குவது எளிதன்று என்பதை முன்னர்க் காட்டினேன். அரிதிற் காமுகன் ஆன அவன் உள்ளத்திலிருந்து படிந்த காமத்தடிப்பை ஒரு நிகழ்ச்சியில் ஒரு களத்தில் ஒரு செய்யுளில் ஒரு படலத்தில் அகற்றி விடுவதும் எளிதன்று. விரைவில் வந்தவை விரைவிற் போகும். அரிதில் வந்தவை அரிதிற்றான் போகும். கூனி சூழ்ச்சியால் அன்பு துறந்த கைகேசி போல, சூர்ப்பனகையின் பெருஞ் சூழ்ச்சியாலும் சொல்லாற்றலாலும் தங்கை என்ற நம்பிக்கையாலும் வீரம் துறந்த காமியாகிவிட்டான் இராவணன்.

மயிலுடைச் சாய லாளை
வஞ்சியா முன்னம் நீண்ட
எயிலுடை இலங்கை நாதன்
இதயமாஞ் சிறையில் வைத்தான்
அயிலுடை அரக்கன் உள்ளம்
அவ்வழி மெல்ல மெல்ல
வெயிலுடை நாளில் உற்ற
வெண்ணெய்போல் வெதும்பிற் றன்றே.

பொன்மய மான நங்கை
மனம்புகப் புன்மை பூண்ட
தன்மையோ அரக்கன் தன்னை
அயர்த்ததோர் தகைமை யாலோ
மன்மதன் வாளி தூவி
நலிவதோர் வலத்தன் ஆனான்
வன்மையை மாற்றும் ஆற்றல்
காமத்தே வதிந்த தன்றே

*தங்கைவாய்க் கேட்ட மங்கையைக் கண்டு பற்றுவதற்கு முன்பே, இதயச் சிறையில் எண்ணப் பிடிப்பால் சீதையை வைத்தான். வைத்தவன் யாவன் எனில் எயில் உடை இலங்கை நாதன் என்ற சுட்டினார் கம்பர். இவ்வலியவன் உள்ளத்து உள்ள சீதையை அப்புறப் படுத்தல் எளியது ஒன்றன்று என்பது புலவர் குறிப்பு. இராவணன் மறந்த சமயம் பார்த்து மன்மதன் மலரம்பு வீசி வருத்தினான் என்பதனால் இத்தகைய காமத்துக்கு இடங்கொடாத ஓர் உரத்தினன் இராவணன் என்பது பெறப்படும். 'வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்தே வதிந்த தன்றே' என்பதனால் வீரத்தை மாற்றிக் காமம் புகுந்தது என்பதும் அவன் நெஞ்சத்துப் புகுந்த காமத்தை அகற்றினாலல்லது மீண்டும் வீரன் ஆகான் என்பதும் பெறப்படும்.*

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடனின்றி உயிரிருக்கும்
இடம்நாடி இழைத்த வாறோ
கள்ளிருக்கும் மலர்க்கூந்தற் சானகியை
மனச்சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி யுடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி.

*காப்பியம் என்பது தனிப்பாட்டன்று, முழுப் பார்வைக்கு உரியது என்று என்முதற் சொற்பொழிவிலிருந்து வலியுறுத்தி வருகின்றேனே; அதற்கு நிகரற்ற எடுத்துக் காட்டு இச்செய்யுள். 'இலங்கைநாதன் இதயமாஞ் சிறையில் வைத்தான்' என்று ஆரணிய காண்டத்து மாரீசன் வதைப் படலத்துச் சீதையை இராவணன் தன் அகச்சிறையில் அடக்கியதாகக் கூறிய கம்பர் 6800 பாடல்கள் தாண்டி உயுத்த காண்ட இராவணன் வதைப் படலத்தில் 'மனச்சிறையிற் கரந்த காதல் உள்ளிருக்கும் எனக் கருதி உடல் புகுந்து தடவியதோ ஒருவன் வாளி' என்று அவள் விடுதலை பெற்றதை எடுத்துக்*

காட்டுகின்றார் என்றால், இவ்வேழாயிரம் பாடல்களில் சீதையை மெல்லமெல்ல விடுதலை செய்யும் ஒரு வேலையைப் புலவர் விடாது செய்திருக்கின்றார் என்பது பெறப்படவில்லையா? எடுத்தது கண்டனர் இறந்து கேட்டனர் என்பதுபோல 'வைத்தான் சீதையை மறுகணம் விடுத்தான்' என்று பாடி முடித்துவிட முடியுமா?

இடைப்பட்ட ஏழாயிரம் பாடல்களையும் ஒரு நோக்குக் கொண்டு எண்ணப் பின்னலாக ஆயும்போது கம்பர் பெருமகனின் அளவிலாச் சிந்தனைத் திறம், ஞாபகத்திறம், அயராத்திறம், நிறைதிறம் எல்லாம் புலப்படுகின்றன. சீதைப் பெயரோடு தன் நெஞ்சை ஒன்றாக்கிய இராவணன் காமத்தை எங்ஙனம் மாற்றுவது? 'நீலத்தார் அரக்கன் மேனி நெய்யின்றி எரிந்ததன்றே' என்ற எல்லைக்குச் சென்ற இராவணன்தன் காமக் கனலை எங்ஙனம் அவிப்பது? ஓர் வலிய உணர்ச்சியை மற்றோர் வலிய உணர்ச்சியாக மாற்ற வேண்டுமாயின். இடையில் பிறழும் உணர்ச்சிகள் வரவேண்டும். இங்ஙனம் உணர்ச்சி மாற்றத்துக்கு ஆயத்தம் செய்யவேண்டும். இவ்வேழாயிரம் பாடல்களிலும் இதனைச் செய்து முடித்தார் கம்பர். கல்வியிற் பெரியவர் கம்பர் என்பார்கள். சீதை இராவணன்தன் மனச் சிறையிலிருந்து முற்றும் விடுதலை பெறுவதற்காக ஏழாயிரம் பாடல்களில் பேராயத்தம் செய்திருப்பதை எண்ணும்போது காப்பியத்திற் பெரியவர் கம்பர் என்று சொல்லுவோமாக. இதனை விரித்து விளக்குவதற்கு இச் சொற்பொழிவு கால இடன் தராது ஆதலின் குறிப்பிற் காட்டிச் செல்வேன்.

**தூய்மையாக்கம்**

காமம் புகுந்த காலந்தொட்டே இராவணன் சில சமயங்களில் தன்னைத் தானே தாழ்த்திப் பேசலானான். 'மாரவேள் கொதிக்கும் அம்பால் பொன்றலின் இராமன் அம்பாற் பொன்றலே புகழுண்டன்றோ' என்பது மாயமான் ஆகும் மாரீசன்முன் இராவணன் பேசும் பேச்சு. உறவினரும் பிறரும் அவன் முன்னே அவனைத் தாழ்த்தியும் கடிந்தும் உரைக்கலாயினர். அக்கன் இறந்தபோது 'கொன்றனை நீயே யன்றோ அரக்கர்தங் குழுவை' என்பது மேகநாதன் சினப்பு. 'சிட்டர் செயல் செய்திலை குலச்சிறுமை செய்தாய்' என்பது கும்பகருணன் பழிப்பு. 'பேதையாய்க் காமம் பிடிப்பாய் பிழைப்பாயோ சீதையாய் இன்னம் வருவ சிலவேயோ' என்பது மகன் அதிகாயன் இறந்தபோது தானமாலை புலம்பல். இராவணன் பிறன்மனை நயந்த செயலை அவன் பக்கத்தார் யாரும் ஆதரிக்கவில்லை. சிலர் வெளிப்படையாகக் கடிந்தனர். பலர் வாளாவிருந்தனர். இதுவே அவன் எண்ணத்திலும் பேச்சிலும் நாளாக ஆக மாற்றங்களை ஏற்படுத்தியது.

*அநுமன் பொழில் அழித்து இலங்கையை எரித்த நிகழ்ச்சி இராவணனது காமநெஞ்சில் ஒரு கலக்கத்தை ஏற்படுத்திற்று. வெகுளியுணர்வும் மானவுணர்வும் நெஞ்சில் ஓரளவு இடம் பெற்றன. இதற்காகவே மந்திர அவையை மறைவாகக் கூட்டினான். 'தாழ்ச்சி இங்கு இதனின்மேல் தருவது என்', 'இட்டது இவ்வரியணை இருந்தது என்னுடல்' என்றெல்லாம் கொதித்தான். சிற்றிடைச் சீதை யென்னும் நாமமும் சிந்தைதானும் உற்று இரண்டு ஒன்றாய் நின்ற நெஞ்சில் மானமும் ஐந்து பத்து விழுக்காடு புகுவதாயிற்று.*

என்றானும் இனைய தன்மை
எய்தாத இலங்கை வேந்தன்
நின்றார்கள் தேவர் கண்டார்
என்பதோர் நாணம் நீள
அன்றாய மகளிர் நோக்கம்
ஆடவர் நோக்கம் ஆகப்
பொன்றாது பொன்றி னான்தன்
புகழெனா இழிந்து போனான்.

*சுக்கிரீவனால் மகுடம் பறிபோனபோது இராவணன் பட்ட மனநிலை இது. ஒருநாளும் இத்தன்மையை அடைந்ததில்லை இலங்கையரசன் என்று எடுத்துக் காட்டுகின்றார் புலவர். நாணம் பெருகிற்றாம், காமம் தோன்ற வில்லையாம் என்றால் அவன் உள்ளத்திற் சீதை ஓரளவு விலகினாள் என்பது கருத்து. கைலை மலையை ஊசி வேரொடும் எடுத்த தன் மதுகையையே மதித்துக் கொண்டிருந்த அவனுக்கு முதற்போர் பெரும் உள்ளப்போர் ஆயிற்று. வாழ்க்கைக் கலக்கத்தை உண்டாக்கிற்று. இராவணன் நாணத்தால் இராமனுக்கு முன்னே தலை கவிழ்ந்தான், பெருவிரலால் நிலங்கிளைத்தான். இராமன் பெருந்தன்மையால் போய் வருக என்று சொல்லவே திரும்பினான். திசை யானை வென்ற மார்பினையும் மலையெடுத்த தோளினையும் யாழிசைத்த நாவினையும் முடி பத்தினையும் சிவன் அருளிய வாளினையும், ஏன் வீரத்தையுமே களத்தில் இழந்து வெறுங்கையோடும் புதுப்பழியோடும் நடந்து போய் இலங்கை நகரம் சேர்ந்தான். திசை நோக்காது, வழி நோக்காது, படை நோக்காது, மாந்தரை நோக்காது, மகளிரை நோக்காது, எதனையும் எவரையும் நோக்காது குனிந்தபடியே அரண்மனை புக்கான்.*

பண்ணிறை பவளச் செவ்வாய்ப்
பைந்தொடிச் சீதை யென்னும்
பெண்ணிறை கொண்ட நெஞ்சில்
நாணிறை கொண்ட பின்னர்

கண்ணிறை கோடல் செய்யான்
கையறு கவலை சுற்ற
உண்ணிறை மானந் தன்னை
உமிழ்ந்தெரி உயிர்ப்ப தானான்.

வானகும் மண்ணும் எல்லாம்
நகும்நெடு வயிரத் தோளான்
நானகு பகைஞர் எல்லாம்
நகுவர்என் றதற்கு நாணான்
வேனகு நெடுங்கட் செவ்வாய்
மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவள் என்றே
நாணத்தாற் சாம்பு கின்றான்.

*இவ்விரண்டும் சீதை நல்லாளுக்கு இராவணன் சிறைக் கம்பிகளை ஓரளவு அகற்ற வந்த பாடல்கள். சீதைப் பெண் தங்கிய நெஞ்சை நாணம் கைப்பற்றிக் கொண்டது என்றால், காமத்தால் உறங்காது கவலைப்பட்டது போய் மானத்தால் துயில் கொள்ளாது இருந்தான் என்றால், வானகத்தார் மண்ணகத்தார் எல்லோரும் சிரிப்பரே என்பதைப் பொருட்படுத்தாமல் தான் காமுற்ற சானகி கேலி செய்வாளே என்று நாணுகின்றான் என்றால், எவ்வளவு மாற்றம்? எவ்வளவு நல்லோட்டம்? தீய இராவணன் தூயவன் ஆகின்றான், ஆக்கப் படுகின்றான் என்பது போதரவில்லையா? இராகவன் அழகோடு ஒப்பிடும்போது மன்மதன் அழகு நம் அழகெல்லாம் கேவலம் நாயழகாகும் என்று கருதுகின்றான் என்றால், சீதைக் காதல் கடை போகாது என்று தெரிந்து கொண்டான் என்பது குறிப்பு. வரவர அவன் உள்ளத்துச் சீதை மறைகின்றாள். இராமன் பகைவனாகத் தோன்றுகின்றான், காமம் படிப்படியாக மறைகின்றது, வீரம் படிப்படியாக வளர்கின்றது. 'நாசம் வந்துற்றபோது, நல்லதோர் பகையைப் பெற்றேன்' என்பது இராவணவாசகம். எதிரியை மதித்தல் வீர இலக்கணம்.*

*இராமாயணத்து இராவணன் பக்கத்தாருக்கு எத்தனை வதைப் படலங்கள்! ஒரு வதைப்படலமாவது இராமனைச் சார்ந்தாருக்கு உண்டா? கிங்கரர் வதை, சம்பு மாலி வதை, பஞ்சசேனாதிபதிகள் வதை, அட்சகுமரன் வதை, மரக்கண்ணன் வதை, இந்திரசித்து வதை எனப் பல படலங்கள் உள. இவற்றோடு பொழில் இறுத்த படலம், இலங்கை எரியூட்டு படலம், மகுடபங்கப் படலம், முதற் போர்ப் படலம் எனச் சில படலங்களும்உள. இவ்வளவு அழிவுப் படலங்கள் ஏன்? இப்படலங்களின் பயன் என்ன? இவையெல்லாம் இராவணன் உள்ளத்திலிருந்து சீதையைக் கொஞ்சம் கொஞ்சமாக விடுவிக்கும் படலங்கள் என்று கொள்ளவேண்டும். இவ்வளவு அழிவுகள் பலமுனையில் நிகழ்ந்தன. நிகழுந்தோறும் நாணமும்*

மானமும் சோகமும் இராவணன் நெஞ்சை அகலாது தாக்கின. இவை தாக்கத் தாக்கக் காமச் சிந்தனை குறைந்தது. குறையுந் தோறும் போரெண்ணம் நிறைந்தது. கும்பகருணன் இறப்புக்குப் பின் இராவணன் நெஞ்சத்தில் வீரமே பெருகிற்று. அழிவுகள் புலனாயின. அவ்வழிக்குத் தான் காரணம் என்பதும் புலனாயிற்று.

நோக்கறவும் எம்பியர்கள்
மாளவுமிந் நொய்திலங்கை
போக்கறவும் மாதுலனார்
பொன்றவுமென் பின்பிறந்தாள்
மூக்கறவும் வாழ்ந்தேன்
ஒருத்தி முலைக்கிடந்த
ஏக்கறவால் இன்னம்
இரேனோ உனையிழந்தும்.

'யாரோ ஒருத்திமேற் கொண்ட தன்னாசையால் என் வீரநோக்கம் அற்றது; கரன் கும்பகன்னன் என்ற தம்பிமார் மாண்டனர். மாரீச மாமன் உயிர்விட்டான். தங்கை மூக்கற்றும் பழிபொறுத்தேன். இலங்கைத் தலைநகர் எரியுண்டது'. இவ்வாறு கேடுகளை அடுக்கிப் புலம்புகின்றான் இராவண வேந்தன். இனி அவன் சீதையைவிடாது வைத்திருப்பது இன்பத்துக்கு அன்று; விட்டால் எல்லோரும் இகழ்வர் என்ற மானத்துக்கு ஆகும். சீதையைக் காமப் பொருளாக நினையாமல், இனிப் போர் நடப்பதற்கு வேண்டும் பகைப் பொருளாக நினைத்தான். யாக்கையை விடுவதல்லால் சீதையை விடுவதில்லை என்று இப்போது அவன் சொல்லுதற்குக் காரணம், புகழாசையன்றிப் பெண்ணாசையன்று.

வென்றிலென் என்ற போதும்
வேதம் உள்ளளவும் யானும்
நின்றுளென் அன்றோ மற்றவ்
வீராமன்பேர் நிற்கு மாயின்
பொன்றுத லொருகா லத்தும்
தவிருமோ பொதுமைத் தன்றோ
இன்றுளார் நாளை மாள்வர்
புகழுக்கும் இறுதி யுண்டோ.

எப்படியும் இராமனோடு போரிடவேண்டும் என்பது இராவண்ன் முடிபு. இம் முடிபு பிழையன்று. சீதை காரணமாகப் பலர் பலியானதற்குப்பின், சீதையை விட்டு வாழ்தல் என்பது அவனுக்குப் பழியேயாகும். இழிவேயாகும். முக்கோடி வாணாள் பெற்ற அவனும் தனக்கு அழிவுண்டு என்று உணர்ந்துவிட்டான்; அவ்வழிவும் இராமனால் வரும் என்பதையும் உணர்ந்துவிட்டான்.

அழிவுணர்ந்த ஒருவனுக்குக் காமவாசை தோன்றா தன்றோ? புகழ் நோக்கமே இராவணன் வாழ்வு நோக்கம் ஆயிற்று.

## இராவணன் தூய்மை

அரைமணிப் பொழுதாக மண்டோதரியின் களம் பற்றி என் விரிவுரையைக் கேட்டீர்கள். ஒவ்வோர் அழிவிலும் உறவினர் வதையிலும் இராவணன் காமம் தேய்ந்தது எனவும் நாணயமான வீரவுணர்வுகள் வளர்ந்தன எனவும் கண்டீர்கள். எழுபது, எண்பது, விழுக்காடு இராவணன் இதயச் சிறையிலிருந்து சீதைச் சிந்தனை குறைந்தது என மதிப்பிடலாம். கும்பகருணன் முதலானோர் இறந்தபோது எல்லாம் இராவணன் ஆறாத் துயருற்றான் என்பதைப்புலவர் அவ்வவ்விடத்துப் பாடியுள்ளார். ஆனால் அவன் துயரை ஒரு தனிப்படலமாக்கவில்லை. இந்திரசித்தன் வெல்வான் என்ற பெருநம்பிக்கை அவனுக்கு இருந்தது. மேலும் அக்கன் அதிகாயன் முதலான மக்கள் முன்னரே மாண்டொழிந்தனர்; எஞ்சியோன் இந்திரசித்தன் ஒருவனே. அவன் வில்லாளர்க் கெல்லாம் மேலவன். அவனும் தலையிழந்தான் என்பது கேட்ட இராவணன் நிலையிழந்தான். தனக்கு வாழ்க்கையுண்டோ என்று வினவினான்.

இந்திரசித்தன் இறப்புக்குத்தான் இராவணன் சோகப் படலம் என ஒரு தனிப்படலம் கண்டார் புலவர். இப்படலத்துக்கு வேறோர் தனிச்சிறப்பும் உண்டு. மண்டோதரியின் சோகத்தையும் இணைத்துக் கூறுவது இப்படலம். மகன் மாய்வுக்கு மண்டோதரி புலம்பலைக் கேட்ட பின்னர், ஒப்பாரிக்கு ஊடே ‘நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் அன்றோ’ என்று அவள் ஓலமிட்ட பின்னர் சீதையைக் கொல்ல ஓடினான். கொல்லுமளவுக்கு அவளைத் தன் குடிப்பகையாக இனப்பகையாக, தற்பகையாக எண்ணிவிட்டான் என்பதை முன்னே விளக்கியுள்ளேன். மனைவி மண்டோதரி புலம்பலால், அப்புலம்பலை நேரடியாகக் கேட்டதால், ஒட்டியிருந்த சீதைச் சிற்றாசையும் அறவே ஒழிந்தது. மண்டோதரி வரவினால் சீதை போயினாள் என்று முடிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். இனி நடக்கும் போரில் இராமன் மாளச் சீதை துயருற வேண்டும் அல்லது யான் மாள மண்டோதரி துயர்ப்படவேண்டும்’ என்றும் விளம்புவானேல் போயவள் யார்? புகுந்தவள் யார்? என்பது பெறப்படும்.

இம் மண்டோதரிக் களத்தினால் இராமாயணக் காப்பியத்துக்கு வந்த நலங்கள் யாவை? ஒரு நலம், மனைவியினால் இராவணன் தூய்மையாகின்றான். இராவணனைத் தூய்மையாக்கா விட்டாற்

கேடு என்ன? இராமன் வீரத்தன்மைக்கு இழுக்கு என்று அறிந்து கொள்ளுங்கள். வீரமனம் முழுதும் உடைய இராவணனோடு போரிட்டான் என்றாகாது, ஒரு காமுகனோடு போரிட்டான் என்றே படும். போரிட்ட நெஞ்சம் பற்றியே பேச்சு. இராமன் முன் இராவணனைப்போர்க்களத்து நிறுத்தும்போது தூய வீரனாக நிறுத்த வேண்டும்; இல்லாவிட்டால் சீதையெண்ணம் இராவணனுக்கு ஓடிய நேரத்தில், வீரவுணர்வு விலகிய நேரத்தில், இராமன் அம்பு எறிந்து கொன்றான் என்று சொல்லலாமன்றோ!

> வெம்மடங்கல் வெகுண்டனைய சினமடங்க
> மனமடங்க வினையம் வீயத்
> தெம்மடங்கப் பொருதடக்கைச் செயலடங்க
> மயலடங்க ஆற்றல் தேயத்
> தம்மடங்கு முனிவரையும் தலையடங்க
> நிலையடங்கச் சாய்ந்த நாளின்
> மும்மடங்கு பொலிந்தனவம் முறைதுறந்தான்
> உயிர்துறந்த முகங்கள் அம்மா.

இராவணன் மாண்டபின் இவ்வாறு பாடப்பெறும் கவிக் கூற்றுக்களாலும், வீடணன் துணிவு பிறந்து இராமனுக்கு முன் அண்ணனைப் பாராட்டும் வீர விளக்கத்தாலும் இராவணன் பெருமை அறியப்படும். முழு வீர இராவணனைக் கொன்றான் என்றாற்றானே வாகை சூடிய சிலை இராமன் தோள்வலியின் சிறப்பு சிறப்பாகத் தோன்றும். ஆதலின் மண்டோதரிக் களம் இராம இராவணப் போர்க்களத்தை உண்மையான வீரக்களம் ஆக்கியது. 'வேட்டன வேட்டோர்க் கெல்லாம் ஆசற நல்கி ஒல்காப் போர்த் தொழிற்கு அமைவதானான்' என்பர் கம்பர். 'ஒல்காப் போர்த் தொழில்' என்பதற்கு வீரங்குறையாத போர்த்தொழில் என்பது பொருள். இதனால் இராமன் வெற்றி தூயதாகின்றது.

## காப்பியத் தூய்மை

இராமன் வெற்றித் தூய்மையைக் காட்டிலும் இன்னொரு பெருந்தூய்மை உண்டு. ஒருவன் இறக்குங்காலத்து எண்ணியிருந்த எண்ணம் எதுவோ அதனை மறு பிறப்பில் எய்துவான் என்பது ஒரு சமயக் கோட்பாடு. 'புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரந்தரல் வேண்டும்' என நாவுக்கரசரும், 'எய்ப்பென்னை வந்து நலியும்போது அங்கே ஏதும் நானுன்னை நினைக்க மாட்டேன். அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்' எனப் பெரியாழ்வாரும் கடவுளை வேண்டுதல் காண்க.

> உயிரோடு வேவேன் உணர்வொழி காலத்து
> வெயில்விளங் கமயத்து விளங்கித் தோன்றிய

சாது சக்கரன் தனையான் ஊட்டிய
காலம் போல்வதோர் கனாமயக் குற்றேன்
ஆங்கதன் பயனே ஆருயிர் மருந்தாய்
ஈங்கிப் பாத்திரம் என்கைப் புகுந்தது,

என்ற மணிமேகலைப் பகுதியில் உயிர் போகும் காலத்து விருந்து நினைவு வந்ததனால் அமுதசுரபி மணிமேகலைக்கு மறுபிறப்பில் கிடைத்தது என்று அறிகின்றோம். சாகும் போது உள்ள எண்ணம் மீண்டு பிறக்கும் போதும் தோன்றும் எனின், சீதை யெண்ணத்தோடு இராவணன் மாண்டான் எனின், காப்பியம் தூய்மையாகுமா? காப்பியத் தலைவிக்குத் தீயவனிடத்திலிருந்து விடுதலை இல்லையா? இராவணன் சீதை நினைவு இன்றியே போருக்குப் போனான் என்று அமைப்பது காப்பியக் கடன். அக்கடமையை மறவாது உரிய இடத்துத் திறம்படப் பாடினார் கம்பர். சீதையை விடுதலை செய்வதற்காகவே மண்டோதரிக் களத்தை அமைத்து இராவணனைத் தூய்மையாக்கினார்.

கள்ளிருக்கும் மலர்க்கூந்தற் சானகியை
மனச்சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி,

என்பது மண்டோதரியின் முடிவுப் புலம்பல். இராவணன் உடலை இராகவன் அம்பு இவ்வளவு ஏன் துளைத்தது? சீதைக் காதலெண்ணம் அக் காமுகன் நெஞ்சில் இன்னும் எங்காவது ஒட்டியிருக்கின்றதோ என்று காணத் துளைத்தது போலும். இதனால் மூன்று நலங்கள் உண்டாகின்றன. சீதை விடுதலை பெறுகின்றாள். இராவணன் வீரனாகின்றான். இராகவன் வீரனைக் கொல்கின்றான். இராம காப்பியம் கற்புக் காப்பியமாகவும், வீரக் காப்பியமாகவும் உயர்கின்றது. காப்பியக்கம்பர் தீயவனையும் தூயவனாக்கிக் காப்பியத் தலைவனையும் தலைவியையும் உயர்த்துகின்றார்.

'ஒருவன்வாளி' என்ற இறுதித் தொடர் புதுக்குறிப்புக் காட்டுவது. ஒப்பற்ற வன்மையான அம்பு என்பது பொருள். வல்வில் ஓரி என்பது போல 'வன்' என்பது வாளிக்கு அடை. ஏனை அம்புகள் உடலைத் தான் துளைக்கும். இராமன் விடுத்த அம்போ இராவணன்தன் உடலுக்குட்புகுந்து அகத்தையும் துளைத்துக் காதலெண்ணத்தையும் தடவிப் பார்த்தது என்பதனால், 'வன்வாளி' எனப் பாராட்டப்பட்டது. இவ்விடத்து இத் தொடருக்கு ஒப்பற்ற ஒருவனது அம்பு எனப் பொருள் கூறல் கவியுள்ளம் ஆகாது. வகரத்தின் முன் லகரம் ளகரமாகத் திரியும் சிலவிடங்கள் உள. நன்வாயாகுதல், வென்வேலான் குன்று, வென்வேற்கிள்ளி என்ற ஆட்சிகளைக் காண்க.

# 3. காப்பிய நேர்மை

*திறன் காண் பெருமக்களே!*

*சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளையின் அன்னையார் நிதிப் பொழிவில் இன்று நடைபெறுவது இறுதிச் சொற்பொழிவு. முதற் பொழிவில் காப்பியம் என்ற இலக்கியம் உலகம் தழுவியது எனவும். முழுப்பார்வைக் கல்விக்கு உரியது எனவும் விளக்கினேன். இரண்டாம் பொழிவில் காப்பியம் எப்படி நீளுகின்றது. நன்றும் தீதும் எங்ஙனம் போராடுகின்றன. களங்களைப் புலவன் எங்ஙனம் காலம் இடம் வலி யறிந்து அமைக்கின்றான் என்ற பான்மைகளைப் பெரிதும் எடுத்துக் காட்டினேன். இன்றைய பொழிவில் காப்பிய நேர்மை என்ற தலைப்பின்கண் மன்பதை நோக்கில் சில இலக்கியத் திறன்களை வெளியிட முயல்கின்றேன்.*

## முழுநூற் பாடம்

*சொற்பொழிவுக்காக என் உரைத் தலைப்புக்களை மூன்றாக வகுத்துக் கொண்டாலும், முழுச் சொற்பொழிவிலும் முழுப் பார்வை முறையை வலியுறுத்துவதே என் நோக்கம். ஏன்? காப்பியம் என்ற இலக்கியத்தின் அகலத்தையும் ஆழத்தையும் காண்பதற்கு இதுவே முறை. வரிசையாகப் படிக்காவிட்டால் புலவனது எண்ண வரிசை எப்படி வெளிப்படும்? நிரந்து இனிது கற்கும் ஒழுங்கு முறை கல்வி யுலகிலிருந்து வர வர ஓடிக் கொண்டிருக்கின்றது. பாடம் அமைப்பிகள் இவ்வொழுங்கினைக் காற்றிற் பறக்க விட்டு விட்டனர். எந்த நூலாயினும் விட்டுவிட்டுப் பொறுக்கி வைப்பது பாட மரபாயிற்று. இப் பாடமரபு கல்விக்கு முரண். இன்றைய நிலையில் பாடம் என்பது வேறு, கல்வி என்பது வேறு என்றாயிற்று. எதனையும் விட்டு விட்டுப் படிப்பது பாடம். கிடத்தாங்கு ஒழுங்குபடக் கற்பது கல்வி.*

*ஆத்திசூடி தமிழ் மொழியில் மிகச் சிறிய நூல். 108 ஓரடியுடையது. இந்நூலை நெடுங்கணக்கு வரிசையில் கற்க வேண்டும் என்று ஔவையார் அமைத்தார். முதல் வகுப்புக்கு ஆத்திசூடி பாடமாக வருகின்றது. இச்சிறுநூலை முழுதும் வைக்கலாம். ஆனால் முப்பது நாற்பது நீதிகளே பாடமாக வைக்கப்படுகின்றன. வைக்கட்டும். அங்ஙனம் வைக்குங்கால்*

வரிசையாக முதல் நாற்பது நீதிகளை வைக்கக் கூடாதா? அறஞ்செய விரும்பு. இயல்வது கரவேல், ஊக்கமது கைவிடேல், கண்டொன்று சொல்லேல் என்று இவ்வாறு தாண்டித் தாண்டிப் பொறுக்கிப் போடுவதால் என்ன நயம் உண்டு? முறை மாறி அமைப்பதால், மறுபடி குழந்தைகள் வரிசையாக வரப்பண்ணுதற்கு இடர்ப்பாடு ஆகின்றது. நூலாசிரியர் நோக்கமும் ஈடேறவில்லை. இங்ஙனம்தான் எந்த நூலை எடுத்தாலும் பொறுக்கு மனப்பான்மை தோன்றுகின்றது.

பாடம் அளவாக இருந்தாலும் நிரலாக இருக்கவேண்டும் என்பது என் கருத்து. கல்விச் செம்மையும் அறிவு வளர்ச்சியும் பாடவமைப்பைப் பொறுத்துப் பெரும் பாங்கு உள்ளது. ஒரு வகுப்பிற் படித்த பாடங்களே மறுமறு வகுப்புகளுக்கும் வருவதால் முறையான அறிவு வளர்ச்சியில்லை. திருக்குறளிற் சில அதிகாரங்களும், புறநானூற்றிற் சில பாடல்களும், சிலப்பதிகாரத்திற் சில காதைகளும், இராமாயணத்திற் சில படலச் செய்யுட்களும் இவ்வாறே பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், பாரதம், நளவெண்பா, மனோன்மணீயம் முதலிய நூற்பகுதிகளும் வந்தனவே மீண்டும் மீண்டும் பாடத்திட்டத்தில் தலையெடுக்கின்றன. அதனால் இளங்கலை, இளமறிவியல் வரை பதினைந்தாண்டுக்காலம் படித்தும் மாணவர்களுக்கு எந்த முழுநூற் பயிற்சியும் இல்லாது போதல் வருந்தத்தக்கது. இன்ன வகுப்பிற்கு இன்ன திருக்குறள், இன்ன புறநானூறு, இன்ன இலக்கியப் பகுதி, இன்ன சூத்திரம் என முறையாக நிரலாக வகுத்துப்பாட ஒழுங்குபடுத்திக் கொண்டால், பதினைந்தாண்டு கற்கும் மாணவன் திருக்குறள் முழுநூலைக் கற்றாகலாம்; சிலப்பதிகாரத்தில் ஒரு காண்டமும், இராமாயணத்தில் பல படலங்களும் கற்றாகலாம். இப்படி வைத்தால் நூல்களைப் போற்றிக் கொள்ளும் உணர்ச்சி ஏற்படும். இப்போது வைக்கும் பாடநூல்கள் தேர்வுக்குப் பின் பழங்கடை நூல்களாக ஆவது நம் பாடத்திட்டத்தின் குறைபாட்டிற்கு நல்ல எடுத்துக்காட்டு.

ஆறுமுகநாவலர் பதித்த பால பாட நூல்களை நினைவு கொள்ளுங்கள். ஒரு வகுப்பிற்கு ஆத்திசூடி முழுவதும் இருக்கும். மேல் வகுப்பிற்கு வாக்குண்டாம், அதற்கு மேல் வகுப்பிற்கு நல்வழி அதற்குப் பின் நன்னெறி என முழுமையாக அமைந்திருக்கும். இவ்வமைப்பினால் நம் முன்னோர்கள் ஐந்து வகுப்புப் படித்திருந்தாலும் கற்றவை மறவாது மொழியறிவிற் சிறந்திருந்தனர். இளமையிற் கற்றனவற்றை முதுமையிலும் நினைவுகூரும் ஆற்றல் பெற்றிருந்தனர். கல்வி கேடில் விழுச் செல்வமாக வேண்டுமெனின், ஒட்டுத் துணி போலும் பொறுக்குப் பாடம் சாலாது, முழுத்துணிபோலும் பாடமுழுமை வேண்டும். கல்வி தன்னளவில் என்றும் அழிவற்றது. நிரலற்ற முழுமையற்ற பற்றற்ற பாடவமைப்பினால் கல்வியும் நிலையற்றதாகி விட்டது.

## இராமாயணக் காப்பியம்

'கற்றனைத்து ஊறும் அறிவு' என்றார் வள்ளுவர். பிற வகை இலக்கியங்களைக் கற்பதனால் ஊறும் அறிவினைக் காட்டிலும் காப்பியத்தைக் கற்பதனால் ஊறும் அறிவு மிகுதியாகும். ஏனை இலக்கியங்கட்கு உலகத்தின் ஒவ்வொரு துறையே பொருள். காப்பிய இலக்கியத்துக்கு உலகமே பொருள். காப்பியன் உலகத்தை நினைத்து, உலகத்தை வளைத்து, உலகத்தை வளர்த்து எழுதுகின்றான். ஆதலின் காப்பியக் கல்வி தரும் அறிவு பரந்தது, வற்றாதது, சிந்தனையை வளர்ப்பது. கல்வியின் பயன் என்ன? காலந்தோறும் கருத்து வேறுபடுகின்றது. எழுதும் கைதோறும் கருத்து வேறுபடுகின்றது. கல்வியின் முதலான, மெய்யான பயன் ஒன்றுதான். அதுவே அறிவென்னும் சிந்தனைச் செல்வம். அச்செல்வத்தைக் காப்பியம் போல் பிறிதொன்று தருவதில்லை. அதுவும் கம்பரின் காப்பியத்தில் கிடைப்பது போல் வேறொரு காப்பியத்தில் விரிவாகவும், வெளிப்படையாகவும் கிடைப்பதில்லை.

தமிழ்க் காப்பிய வரலாற்றில் இராமாயணத்துக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. சங்க இலக்கியத்துக்கும் சங்கப் பின் இலக்கியத்துக்கும் சிலப்பதிகாரம் இலக்கியப் பாலமாக விளங்குவது போல, இராமாயணமும் இடைக் கால முன் இலக்கியத்துக்கும் இடைக்காலப் பின் இலக்கியத்துக்கும் ஒரு பாலமாக நிற்கின்றது. ஓசையாலும் சொல்வளத்தாலும் கற்பனையாலும் உணர்ச்சியாலும் ஓட்டத்தாலும் இராமாயணம் தமிழ் நிலத்து ஒரு வழிக்கல். கம்பர் தமக்கு முன் தோன்றிய சிலப்பதிகாரம். மணிமேகலை, சிந்தாமணி, பெருங்கதை, பெரியபுராணம் முதலான காப்பியங்களின் வனப்புக்களை வடித்துக் கொண்டும், தம் மதி நுட்பத்தால் நுண்ணிய பல வனப்புக்களைப் படைத்துக் கொண்டும், உவமையில்லா ஒரு பெருங் காப்பியத்தை ஆக்கினார்; பின்னொரு புதிய காப்பியத் தோற்றத்துக்கு இடமில்லாதபடி இராமாயணத்தைக் காப்பிய எல்லைக் கல்லாக நிறுத்தினார்.

விரிவிலும் செறிவிலும் கம்பருக்கு இணை யார்? இராமாயணத்தின் பல படலங்கள் தனித்தனி நூல் எனத் தகும் சிறப்புடையன. செகப்பிரியரின் நாடகங்கள் அனைத்தையும் தொகுத்தால் இராமாயணத்தின் பாதியளவு தானே இருக்கும். பால காண்டத்தில் தாடகைவதைப் படலம், அகலிகைப் படலம், மிதிலைப் படலம், கார்முகப் படலம், அயோத்தியா காண்டத்தில் மந்தரை சூழ்ச்சிப் படலம், கைகேசி சூழ்வினைப் படலம்; நகர் நீங்கு படலம், பள்ளியடைப் படலம், குகப் படலம்; ஆரண்ய காண்டத்தில் சூர்ப்பனகைப்படலம், மாரீசன் வதைப் படலம், சடாயு உயிர்நீத்த படலம்; கிட்கிந்தா காண்டத்தில் மராமரப் படலம்,

வாலி வதைப் படலம், கிட்கிந்தைப் படலம்; சுந்தர காண்டத்தில் ஊர்தேடு படலம், காட்சிப் படலம், நிந்தனைப் படலம், உருக்காட்டுப் படலம், சூளாமணிப் படலம், பிணி வீட்டுப் படலம், உயுத்த காண்டத்தில் மந்திரப் படலம், இரணியன் வதைப் படலம், வீடணன் அடைக்கலப் படலம், அங்கதன் தூதுப் படலம், முதற்போர்ப் படலம், கும்பகருணன் வதைப் படலம், நாகபாசப் படலம், பிராட்டி களங்காண் படலம், மாயா சீதைப் படலம், இந்திரசித்து வதைப் படலம், இராவணன் வதைப் படலம், மீட்சிப் படலம் என வரும் ஒவ்வொரு படலமும் ஒரு நாடகமாம் தகுதியுடையது.

நிகரற்ற நிறைந்த பரந்த ஒரு காப்பியம் ஆதலின் இராமாயணம் எத்துணைத் தலைப்புகளிலும் பேசுவதற்கு இடங்கொடுக்கின்றது. சென்று தேய்ந்து இறுதல் என்ற நூற் குற்றம் இன்றி, 'புணர்ந்தாற் புணருந் தொறும் போகம் பின்னும் புதிதாய்... வளர்கின்றதே' என்ற திருக்கோவைப்படி பாட்டுக்குப் பாட்டு, படலத்துக்குப் படலம், காண்டத்துக்குக் காண்டம் கருத்துயர்வைக் காண்கின்றோம். ஒரு கட்டுரை எழுதியபின், இன்னொரு கட்டுரைக்குப் பலர்பால் கருத்து இருப்பதில்லை. ஒருசில கட்டுரை எழுதியோர் மேலும் எழுதும் கட்டுரைகளில் முன்னவை திரும்பத் திரும்ப வரக் காண்கின்றோம். இதற்குச் சிந்தனை வறுமையே காரணம்; சிந்தனைச் செல்வம் பயக்கும் காப்பியங்களை முறையோடு படியாமை காரணம். பதினாயிரம் பாடல்கள் பாடிய பின்னரும் கம்பநாடருக்குக் கருத்து வறளவில்லை; தொட்ட இடம் எல்லாம் ஊற்றுக் கண்களையே காண்கின்றோம். கம்பரின் கருத்து வளத்துக்கு ஒரு பெருங் காரணம் சிந்தனைத் தொடர்பு அல்லது தொடர்புச் சிந்தனை. எவற்றை எவற்றை எத்துணை எத்துணை ஒருங்கு கூட்டி இணைத்து அறாது சிந்திக்க முடியுமோ அவ்வளவு சிந்தித்தவர் கம்பர். இவர்தம் சிந்தனை முழுப் பார்வையினாற்றான் விளங்கும்.

## இலக்குவனும் பரதனும்

இராமன், சீதை, இலக்குவன் என்ற மூவரையே இராமாயண முகப்புப்படமாகப் போடுவது ஒரு வழக்கு. ஏன்? இம் மூவரும் நாட்டைப் பிரிந்து காடு ஏகினர், ஒன்றாகத் துயருற்றனர், பதினான்கு ஆண்டு கழித்து நாடு மீண்டனர். தயரதன் குடும்பத்தில் இராமாயணக் குடும்பத்துக்கு இம் முப்பாத்திரங்களே இன்றியமையாதனவா? முகப்புப் படம் - மூவர் படம் கற்றோரை மயக்குகின்றது. 'பரதனுடைய சம்பந்தம் கதைக்கு - இராமாயணக் கதை அனைத்துக்குமே என்று பொதுவாகவே சொல்ல வேண்டியது - உபாக்கியான சம்பந்தமாகத்தான் இருக்கின்றது' என்று எழுதுகின்றார் வ.வே.சு. இராமாயண நிகழ்ச்சியில் பரதன் பக்கத் தொடர்பு உடையவன்தானா? நேர்தொடர்பு உடையவன்

இல்லையா? பதினான்கு ஆண்டும் இராமன் கூட இருந்த இலக்குவன் நேர் தொடர்பினன் என்றால், அப் பதினான்கு ஆண்டும் இராமன் வரவையே எதிர்பார்த்துத் தவஞ் செய்து கொணடிருந்த பரதன் அத்தொடர்பில் குறைந்தவன் ஆவானா? தொடர்புக்கு உடனுறைதலும் உடனுறையாமையும் காரணம் அன்று. எண்ணத்தில் தொடர்பு இருந்ததா? இதுவே பார்க்கத் தகும். இலக்குவன் உடனுறைந்து இராமனை மறந்திலன்; பரதன் இராமனைப் பிரிந்தும் மறந்திலன். இலக்குவனுக்கும் பரதனுக்கும் இராமனை மறவாமை பொது. இலக்குவன் உடனிருந்து துன்புற்று மெலிந்தான்; பரதனோ பிரிந்த அண்ணனை எண்ணி எண்ணி ஊணும் உறக்கமும் இன்றி மெலிந்தான்.

உயுத்த காண்டத்து மீட்சிப் படலத்து ஒரு செய்யுள். நாடு திரும்பிய இராமனைப் பரதன் வணங்குகின்றான்; வணங்கிய பரதனை இலக்குவன் வணங்குகின்றான். பரதனும் இலக்குவனும் தம்முள் ஒருசேரத் தழுவிக் கொள்ளும் அரிய காட்சியைக் கண்ட ஊர்மக்கள் எந்த உடம்பு அதிக மெலிவு என்று எடை போடுகின்றனர்.

**ஊடுறு கமலக் கண்ணீர்**
**திசைதொறும் சிவிறி யோடத்**
**தாடொடு தடக்கை யாரத்**
**தழுவினன் தனிமை நீங்கிக்**
**காடுறைந் துலைந்த மெய்யோ**
**கையறு கவலை கூர**
**நாடுறைந் துலைந்த மெய்யோ**
**நைந்ததென் றுலகம் நைய.**

காடு சென்ற மெலிந்த இலக்குவன் உடலோ, நாடு இருந்தும் மெலிவுற்ற பரதன் உடலோ மிக மெலிந்தது எது என முடிவு கட்ட முடியாமல் மக்கள் கலங்கினர் என்றால், இருவரும் சமம் என்பது பெறப்படும். பிரிந்து இருந்து சிந்தனையால் மெலியும் தலைவிக்கு அகத்திணையில் என்ன என்ன மதிப்பு உண்டோ அன்ன மதிப்பு இராமாயணத்தில் பரதாழ்வனுக்கு உண்டு. அயோத்தியா காண்டத்தோடு பரதன் நின்று விடுகின்றான் என்பதனால், அவனைக் கிளைப் பாத்திரமாகக் கருதினார் போலும் வ.வே.சு. கதையோட்டத்தை நீள வளர்க்கவும், உடனே தடுக்கவும் வல்ல பாத்திரம் கிளைப் பாத்திரம் ஆகாது. பரத்துவாசர் விருந்தில் இருந்த ராமன் அநுமனை முன் போக்கிப் பரதன் தீப்பாய்வதைத் தடுத்திராவிட்டால் இராமகாதை இருண்ட கதையாகி இருக்கும். பரதன் மூவரோடு ஒத்து எண்ணத்தக்க பாத்திரம் என்பதற்கு அநுமன்தன் அயோத்தி தூது ஒன்றே போதும். ஆதலின்

இராமாயணத்து முன்படம் போடுவார் பரதனையும் சேர்த்து நால்வரையும் போடுவார்களாக. காண்டந்தோறும் வரும் இலக்குவன் நீர்மேல் நீள நீந்திச் செல்பவனை ஒப்பவன். அயோத்தியா காண்டத்தோடு நின்று இடைக் காண்டங்களில் மறைந்து உயுத்த காண்டக் கடைசியில் மீண்டும் தலையெடுக்கும் பரதன் ஓரிடத்து நீர்மூழ்கி உள்ளே நீந்திப்பின் ஓரிடத்து வந்து தலை காட்டுபவனை ஒப்பவன். இவ்வேறுபாடு தவிரக் காப்பியத்தின் இடையறா நடக்கைக்கு இலக்குவனும் பரதனும் நிகரான பாத்திரங்கள் என்று அறிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு மீட்சிப் படலத்துத் தம்பியர் இருவரையும் கொண்டு வந்த நிறுத்தித் தழுவவைத்து ஊர் மக்கள் சமமாகப் பாராட்டுமாறு கம்பர் செய்திருப்பது காப்பிய நேர்மை என்று கூறலாம்.

பாத்திரத்தின் உண்மைத் தன்மையை உரிய இடத்து மறவாது உலகறியச் செய்வது புலவன் கடன். வளருகின்ற நினைவாற்றல் காப்பியப் புலவனுக்கு இன்றியமையாதது. இவ்வாற்றல் மிகப்பெற்றவர் கம்பர். எத்துணை ஆயிரம் செய்யுட்களுக்குப் பின்னும் ஒன்றை நினைத்து கொண்டு வந்து தொடர்புறுத்தும் பெற்றி கம்பர்பால் காண்பது போல் யாரிடம் காணப்போகின்றோம்! அதனாற்றான் முழுப் பார்வை பொதுவாகக் காப்பியத்துக்கு வேண்டும்; அதுவும் கம்பர் காப்பியத்துக்கு மிகமிக வேண்டும் என வலியுறுத்துகின்றேன்.

காப்பிய நேர்மை என்பது இற்றைச் சொற்பொழிவின் தலைப்பு. பாத்திரம் எல்லாம் ஒரு வகையால் புலவன் படைப்பு. உண்மைப் புலவனுக்குத் தான் படைத்த எப் பாத்திரத்திலும் விருப்பு வெறுப்பு இருக்காது. பாத்திரங்களுக்கு நன்மையும் தீமையும் மாறி மாறிக் கூறுதல் காப்பிய அறம். தீமை கூறுதல் வெறுப்பாகாது. நன்மை கூறுதல் பற்றாகாது. காப்பியத்துக்கு இருமையும் கூறுதல் இன்றியமையாதது. அநுமன் கண்ட ஊர்தேடு படலத்திலும் இராவணன் வதைப் படலத்திலும் இராவணனின் பல சிறப்புகள் வெளிப்படுகின்றன. காப்பியம் என்பது தேவாரமும் அன்று, ஏசலும் அன்று. ஒரேடியாக ஒரு பாத்திரத்தைத் தொட்ட இடமெல்லாம் தூற்றிப் பாடுவதும் படிப்பவர்க்குக் கசந்து போகும். போற்றுதல் தூற்றுதல் அளவு வேறுபடலாமேயன்றி ஒரே மூச்சாகப் புகழ்தல் இகழ்தல் என்பது இயல்பும் இல்லை, சுவையும் இல்லை.

## இராமன் தலைமை

எல்லாக் காப்பியத்தையும்விட இராமாயணத்துத்தான் பாத்திரங்கள் மிகுதி; தலைமையான பாத்திரங்களும் மிகுதி. தசரதன், கைகேயி, கூனி, இராமன், சீதை, இலக்குவன், பரதன் எனவும், வாலி, தாரை, சுக்ரீவன், அனுமன், அங்கதன் எனவும்

இராணவன், கும்பகருணன், வீடணன், இந்திரசித்து, மாரீசன், மாலியவான், சூர்ப்பனகை, திரிசடை, மண்டோதரி எனவும்; குகன், சடாயு எனவும், ஈடும் எடுப்பும் இல்லாப் பெரும் பாத்திரங்கள் இராமாயணத்து உள. இவ்வளவு பேரிலும் இராமனே தலைமையானவன். இத்தலைமையை எப்பக்கத்தாரும் ஒப்புக்கொள்ள வேண்டும். 'தன்னேரில்லாத் தலைவனை யுடைத்தாய்' என்பது சிறந்த காப்பிய இலக்கணம். பல பெரும் பூசல்களும் விளைவுகளும் நடக்கும் காப்பியத்துக்கு ஒரு தனித்தலைவன் இல்லாவிட்டால், இருக்குமாறு செய்யாவிட்டால், பற்றுக் கோடின்றிக் காப்பியம் தடுமாறும். பாத்திரங்களும் தறுதலைகளாகக் காட்டியளிக்குமே யன்றி, வாழ்க்கைக்கு உறுதலைகளாக இரா. சட்டியடுக்குப் போல அனைத்தையும் ஒன்றுள் ஒன்றாக அடுக்கிக் கொள்ளும் பெரும் பாத்திரம் வேண்டும். இப் பெரும் பாத்திரம், இராமாயணத்தில் இராமனே யாவன். இராமனை நினைந்து தயரதன் உயிர் விடுகின்றான்.

**வேயுயர் கானம்தானும் தம்பியும் மிதிலைப் பொன்னும்**
**போயினன் என்றான் என்ற போழ்தத்தே ஆவி போனான்,**

என்றார் கம்பர். ''கைகேசியின் வரங்கேட்டு ஊழித் தீ போலச் சினந்த இலக்குவனைப் பார்த்து ,

தோன்றா நெறிவாழ் துணைத்தம்பியைப் போர்தொலைத்தோ
சான்றோர் புகழும் தவத் தாதையை வாகை கொண்டோ
ஈன்றாளை வென்றோ இனி இக்கதம் தீர்வது,

என்று இராமன் கடிந்துரைத்தான். அண்ணன் சொல்லுக்கு அடங்கிச் சினம் தீர்ந்தான் இலக்குவன். இராமனை மீண்டும் கொண்டு வந்து கோமுடி சூட்டுவது என்று துணிந்து, அனைவரையும் அழைத்துச் சென்ற பரதன் இராமனது திருவடித்தலம் இரண்டையும் பெற்று அழுத கண்ணோடு திரும்பினான்; நாட்டைப் பதினான்கு ஆண்டும் காத்தல் உன் கடன் என்ற இராமன் சொல்லைத் தலைமையாக ஏற்றான். 'உனக்கு வித்தைகள் கற்பித்த ஆசிரியன் நான். என் கட்டளையை மறுக்காது, திரும்பிச் சென்று நாடு ஆள்க' என்று வசிட்ட முனிவன் வற்புறுத்திக் கூறியபோது,

சான்றவ ராகதன் குரவ ராகதாய்
போன்றவ ராகமெய்ப் புதல்வ ராகதான்
தேன்றரு மலருளான் சிறுவ செய்வதென்று
ஏன்றபின் அவ்வுரை மறுக்கும் ஈட்டதோ,

என்று இராமன் மறுத்து விட்டான். யார் வேண்டினும் வாய்மை பின்வாங்குதற்கு உரியதன்று என்று மேலும் உறுதி மொழிந்தான். இதனைக் கேட்டபின் வசிட்டனும் இராமன் தலைமையை ஏற்றுக் கொள்ள வேண்டிய தாயிற்று.

இராமன் பக்கத்தார் அவன் தலைமையை உடன்பட்டனர் என்பது இயல்பே. சுக்கிரீவன் குலத்தவர்கூட இராகவன் தலைமைக்கு இசைந்து நடந்தனர் என்பது வியப்பில்லை. அச்சத்தாலும் அன்பினாலும் அவன் தலைமைக்குக் கீழ்ப்படிந்தான் சுக்கிரீவன். இராமாயணப் பாத்திரங்களுக்குள்ளே மாசற்ற அன்புப் பாத்திரம் அநுமன் ஆவன். குடுமித் தேவரைக் கண்டு உருகிய கண்ணப்பர் போல இராமனைக் கண்ட அநுமன் என்பு உருகினான். காதல் பெருகினான், அன்பு மிகுந்தான், அடியவன் ஆனான், வானர குலத்தில் வாலியும் தாரையும் அங்கதனுங் கூட இராமனைத் தலைவனாகப் போற்றினர்.

பாலமை தவிர்நீ என்சொற்
  பற்றுதி யென்னின் ஐய
மேலொரு பொருளும் இல்லா
  மெய்ப்பொருள் வில்லும் தாங்கிக்
கால்தரை தோய நின்று
  கட்புலக் குற்ற தம்மா
மால்தரு பிறவி நோய்க்கு
  மருந்தென வணங்கு மைந்த.

இராமன் அம்பு பட்டுச் சாகும் வாலி இராமன் கண்கண்ட கடவுள் எனவும், பிறவிப்பிணி தீர்ப்பவன் எனவும் மொழிந்து அங்கத மைந்தனை வணங்கச் செய்கின்றான். சினத்தோடு கிட்கிந்தைக்கு வந்த இலக்குவனுக்கு முன் நின்று, 'வாலியைக் கொன்ற அம்பு உங்களிடத்து இருக்கும் போது வேறுதுணை வேண்டுமோ' எனத் தாபதத் தாரை இராமனைப் பாராட்டுகின்றாள்.

மனித இனமும் குரங்கினமும் இராமபிரானைத் தலைவனாக எண்ணியது. நாம் எல்லாம் எதிர்பார்க்கக் கூடியதே. அயோத்தி மக்கள் அரசன் என்ற பாசத்தாலும் இலக்குவன் முதலியோர் அண்ணன் என்ற பாசத்தாலும், சுக்கிரீவன் முதலியோர் ஒரு வகையால் தன்னல வேட்கையாலும் இராமன் தலைமையை மதித்தனர். ஒரு காப்பியத்தலைவன் தன்னேரில்லாத் தலைவன் ஆக வேண்டும் எனின், பகைவரும் மதிக்கும் பண்புடையவனாக விளங்க வேண்டும். தன் இனத்துக்கும் தன் குடும்பத்துக்கும் தலைமை என்பது தன்னேரின்மை ஆகுமா? இராவணனும்

அரக்கினத்தாரும் இராமனைப் பாராட்டவில்லையென்றால், பாராட்டும் நிலைக்கு இராமன் பண்பு உயரவில்லை யென்றால், இராமாயணத்தில், இராமன் தலைமை நிறையுடையதாகுமா? வீடணன் இராமனைப் பாராட்டுவது உண்மையே. இப்பாராட்டில் எப்படியும் ஓரளவு தன்னலம் புகுந்துள்ளது.

வாலிவின்ம பெறவர சிளைய வன்பெறக்
கோலிய வரிசிலை வலியும் கொற்றமும்
சீலமும் உணர்ந்து நிற்சேர்ந்து தெள்ளிதின்
மேலர செய்துவான் விரும்பி மேயினான்,

என்று வரும் அநுமன் வாக்கே சான்று. ஆதலின் அடைக்கலம் புக்க வீடணன் இராமன் தலைமைக்குப் பணிந்தான் என்பது எடுத்துக்காட்டாகாது. இராமன் இப் பெருங்காப்பியத்துத் தன்னேரில்லாத் தலைவன் எனப் பெயர் பெற வேண்டும் எனின், இராவணன் பாராட்டுதலைப் பெற்றாக வேண்டும். இராமனை இராவணன் தனக்கு மேற்பட்ட தலைவனாக எண்ணாதவரை இராமன் தலைமை குறைபாடு உடையதே.

சூர்ப்பனகையின் வருணனைத் திறந்தால் சீதையைக் காமுற்ற இராவணன் மாரீசனை அடைகின்றான்; வஞ்சகத்தால் வெளவிக்கொண்டு வருக என்று அவனை வேண்டுகின்றான். இச்செயல் இராவணன் வாழ்வுக்கு இறுதியாகும் எனவும், அரக்கர் குலத்தை அழிக்கும் எனவும், பிறன்மனை நயந்தவனை அறம் கொல்லும் எனவும் மாரீசன் எவ்வளவோ தடுத்துப் பார்க்கின்றான்; பயனில்லை. இராவணன் தீய எண்ணத்துக்குத் துணை நிற்பதல்லது மாரீசனுக்கு வழியில்லை. சீதையைக் கவர்ந்துவர ஒருவாறு அவன் இசையவே, இராவணன் சினம் தணிகின்றான்.

குன்றெனக் குவிந்த தோளாய்
மாரவேள் கொதிக்கும் அம்பால்
பொன்றலின் இராமன் அம்பாற்
பொன்றலே புகழுண் டன்றோ,

என இராமன் வீரத்தைத் தன்னை அறியாமலே இலங்கை வேந்தன் புலப்படுத்தக் காண்கின்றோம். இராமனோடு செய்த முதற்போரில் முடியிழந்தான்; வில் இழந்தான் இராவணன். நேருக்கு நேர் செய்த இப்பூசலில் இராமன் அழகையும் அருளையும் ஆற்றலையும் காணும் தனி வாய்ப்பு இவனுக்குக் கிட்டியது. 'பாம்பின் கால் பாம்பறியும்' என்றபடி இராவணன் மூவுலக வீரன் ஆதலின் இராமன்தன் வீரத்தை முதற் போரிலேயே புரிந்து கொண்டான்.

எல்லா வகையாலும் இராமனே தலையானவன் என்ற நல்லொளி இலங்கையனுக்கு உதயமாயிற்று. தன்னை இகழ்ந்துரைக்கும் மாலியவானிடம் வெளிப்பட்ட சொற்களால் இராவணன் உடன்படுகின்றான்.

போயினித் தெரிவ தென்னே
பொறையினால் உலகம் போலும்
வேயெனத் தகைய தோளி
இராகவன் மேனி நோக்கித்
தீயெனக் கொடிய வீரச்
சேவகச் செய்கை கண்டால்
நாயெனத் தகுதும் அன்றே
காமனும் நாமும் எல்லாம்.

வாசவன் மாயன் மற்றை
மலருளோன் மழுவாள் அங்கை
ஈசன்என் றினைய தன்மை
இளிவரும் இவரா லன்றி
நாசம்வந் துற்ற போது
நல்லதோர் பகையைப் பெற்றேன்
பூசல்வண் டுறையுந் தாராய்
இதுவிங்குப் புகுந்த தென்றான்.

முக்கோடி வாழ்நாளும் பெருந் தவமும் வெற்றி வரமும் யானை மருப்பும் உடைய இராவண வேந்தன் முதற் காட்சியிலேயே, நாயெனத் தன்னை இழிவுபடுத்திக் கொண்டான் என்றால் நல்ல பகையால் நான் அழியும் பேறுபெற்றேன் என்று உவந்தான் என்றால், இராமன் சிறப்பை இராவணன் உணர்ந்தது போல் வேறு யாரும் உணரவில்லை, உணரவும் முடியாது என்பது பெறப்படும். 'இவனோதான் வேத முதற் காரணன்' என்பது இராவணன் இறுதிப் போரில் பெற்ற ஞானம்.

காப்பியத்துக்குத் தன்னேரில்லாத் தலைவன் ஒருவன் வேண்டும் எனவும், அத்தலைவன் எல்லாவகை மாந்தராலும் போற்றப்படவேண்டும் எனவும், இராமனே இராமகாதைத் தலைவன் எனவும், பகையுலகில் தலைவனான இராவணனும் இராமன் தலைமைப் பண்மை மதித்தான் எனவும் வேண்டிய அளவு விளக்கத்தோடு மொழிந்தேன். இராமன் தலைமைக்கும் நேர்மைத் தலைப்புக்கும் என்ன இயைபு என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருப்பீர்கள்.

காப்பியக் களங்கள் என்ற நேற்றைச் சொற்பொழிவில் காப்பிய இலக்கியத்திற்காகப் புலவன் நல்ல களங்களையும், தீய களங்களையும், நெறியான களங்களையும் எப்படியெல்லாம் மேற்கொள்கின்றான் என்று கண்டோம். மனைவியின் வரத்தால் கணவன் மாள்கின்றான்; ஒரு சிறிய வேலைக் காரியின் சூழ்ச்சிக்கு அரசி ஆளாகின்றாள்; இச்சூழ்ச்சிக்கு இயைந்து, முடிசூட வேண்டிய இராமன் மனைவியோடு வனம் புகுகின்றான்; இராமனது நளின வார்த்தையில் மயங்கிச் சூர்ப்பனகை அவனை உண்மையாகவே காதலிக்கின்றாள்; இராமன் தன்னை மீட்க வரமாட்டான் எனத்துணிந்த சீதை தற்கொல்ல முயல்கின்றாள்; பெருந்திறம் படைத்த இராவணன் சூர்ப்பனகையின் சூழ்ச்சிக்கு வயமாகின்றான்; வாலி இறந்தபின்னும் சுக்கிரீவன் ஆட்சிக்குத் தாரை துணை செய்கின்றாள்; வீடணன் காலம் பார்த்து அண்ணனுக்குப் பகைவனிடம் அடைக்கலம் புகுகின்றான்; பிறன் மனை நயந்த கணவனை உரிய காலத்துக் கண்டிக்காது மகன் இறந்த போர்க்களத்து மண்டோதரி புலம்புகின்றாள்; சிறையிருந்த செல்வி சிறை நீங்கியபின் தீச்சோதனைப் படுகின்றாள்; இவ்வாறு நல்லனவும் தீயனவும் தழுவிக் காப்பியம் நீளுகின்றது. இருவேறுலகத்து இயற்கையை மேற்கொண்டுதான் புலவன் தன் இலக்கியத்தைக் காப்பியமாகப் பெருக்கிக் காட்டமுடியும். இது காப்பிய அறமாகும். நேற்றுப் பொழிவில் இதுபற்றி விரித்துரைத்தேன்.

## மன்பதை நோக்கம்

காப்பிய நடப்புக்காகப் புலவன் பலவற்றைச் சேர்த்தாக வேண்டியதிருப்பினும், காப்பியப் படைப்பு புலவன் நோக்கம் அன்று; மன்னாயமே அவன் நோக்கம். காப்பியப் படைப்பால் மன்பதையை வழிப்படுத்துவதே அவன் நோக்கம். கண்டபடி எழுதுவது அவன் கருத்தன்று. எப்பக்கத்தவராயினும், எவ் வினத்தவராயினும், எத்திறத்தவராயினும் காப்பிய மாந்தர்களுக்குள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது, தன்னை அடிமைப் படுத்திக் கொள்ளாது, புறம் நின்று இது சரி, இது சரியன்று என்று உலகாயத்துக்கு நேர்மை தெரிவிக்கின்றான் காப்பியப் புலவன். இராமன் முதலாகச் சூர்ப்பனகை யீறாக எல்லாப் பாத்திரமும் புலவன் படைத்த இலக்கியவுயிர்கள் ஆதலின் அவனுக்கு உண்மையில் எப்பாத்திரத்தின்பாலும் மிகையான பற்றும், மிகையான வெறுப்பும் இருக்கமாட்டா. புகழ வேண்டுமிடத்து எதனையும் புகழ்வான்; இகழவேண்டிய விடத்து இகழாது விடான். ‘பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்’ என்றபடி, பெருஞ்செயல் கண்ட இடத்துப் போற்றுவான்; அப்பெருஞ் செயலாளனே சிறுசெயல் செய்யுங்கால் தூற்றுவான். இராமன் பக்கத்தவரைக் கம்பர் இகழ்ந்த இடங்களும் பல; இராவணன் பக்கத்தாரை அவர் புகழ்ந்த இடங்களும் பல. இதுவே காப்பிய நேர்மை என்ப்படும்.

## இரு மந்திரப் படலங்கள்

அயோத்தியா காண்டத்து மந்திரப் படலத்தையும் உயுத்த காண்டத்து மந்திரப் படலத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். எந்த மந்திரப்படலத்துப் பேச்சுரிமை உண்டு? செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்பு எந்த வேந்தனுக்கு உண்டு? இராமனுக்கு முடிசூட்ட வேண்டும் என்ற செய்தியைத் தெரிவிக்கக் கருதித் தயரதன் அமைச்சவை கூட்டுகின்றான்; தன் முதுமையைப் பலவாறு எடுத்து விளம்புகின்றான். 'பொருந்தும் நாள் நாளை நின் புதல்வற்கு' என்று சோதிடர்கள் மொழிந்தனர். 'புல்கு காதற் புரவலன் போர்வலாய், நல்கு நானிலம் நாளை நினக்கு' என்று வசிட்டனும் மொழிந்தான். முடிபுனைதற்கு உரியவன் மூத்த மகனான இராமனே என்பதில் தடையில்லை. ஒரு சிறு குடிசைத் திருமணங்கூடப் பேசிய மறுநாள் நாள் வைத்து முடிப்பதில்லையே. எட்டிய சொந்தக்காரர்கள் கூட வந்து கலந்து கொள்ளவேண்டும் என்று எல்லார்க்கும் பொருத்தமான நாட் பார்த்து நாழிகை பார்த்து வைப்பது உலகமுறை. போர்ப்பறையும் சாவுப் பறையும்தான் திடீரென முழுங்குமன்றி முடிப்பறையும் விழாப்பறையும் மணப்பறையும் திடீரென ஒலிப்பது உண்டா? அயோத்தி அமைச்சரின் பண்புகள் பற்றிக் கம்பர் வானளாவப் புகழ்கின்றார். 'உற்றது கொண்டு மேல்வந்து உறுபொருள் உணரும் கோளார்' எனவும், 'மும்மையும் உணரவல்லார்' எனவும், 'தலைமகன் வெகுண்ட போதும் வெம்மையைத் தாங்கி நீதி விடாது நின்றுரைக்கும் வீரர்' எனவும் தயரதன் மந்திரிகள் பாராட்டப்படுகின்றனர். இராமனுக்கு முடிபுனைதல் சரி; ஆனால் நாளையே அது செய்ய வேண்டிய கட்டாயம் என்ன என்று எந்த அமைச்சனாவது கேட்டானா? தம்பியராம் பரதனும் சத்துருக்கனும் இல்லாதபோது முடிசூட்டுவிழா நடத்தலாமா என்று வசிட்டனாவது கேட்டானா? ஏன், இராமன்தான் கேட்கக் கூடாதா? அறுபதினாயிரம் ஆண்டுகள் முடிசுமந்த தயரதனுக்குப் பரதன் வரும்வரை சிலநாள் முடி சுமந்திருப்பது பாரமாகுமா? மறுநாள் முடிசூட்ட நினைத்ததும், பரதனையும் சத்துருக்கனையும் கேகய நாட்டிற்கு அனுப்பியபின் அமைச்சரைக் கூட்டி முடிசூடுதல் பற்றித் தயரதன் வெளியிட்டதும், யார் மனத்திலாவது பட்டதா? இராமனாவது, வசிட்டனாவது இது சமயம் அன்று எனத் தடுத்திருந்தால் கூனி சூழ்ச்சி செய்ய எண்ணியிருக்கக் மாட்டாள், எண்ணியிருந்தாலும் பலித்திருக்க மாட்டாது.

பாக்கியம் புரிந்திலாப் பரதன் தன்னைப்பண்டு
ஆக்கிய பொலன்கழல் அரசன் ஆணையால்
தேக்குயர் கல்லதர் கடிது சேணிடைப்
போக்கிய பொருளெனக் கின்று போந்ததால்.

அன்று பாட்டன் நாட்டுக்குப் பரதனை அனுப்பியதன் கருத்து இன்றுதான் புரிந்தது என்று கைகேசிக்குக் கருத்துரைக்கின்றாள் கூனி. இதனால் தசரதன் அவையில் எதிர்பார்க்கும் அரசியலும் இடித்துக்கூறும் அமைச்சியலும் வளரவில்லை என்பது ஒருவாறு பெறப்படும். அயோத்தி அவை ஆமாம் அவை போலும்.

அனுமன் இலங்கையை எரித்தபின் இராவணன் மந்திரச் சூழ்வு நடத்துகின்றான். இராவணனை ஒட்டிப் பேசுவாரையும் வெட்டிப் பேசுவாரையும் இலங்கையவை வரவேற்றது. தசரதன் மந்திரப் படலத்து அமைச்சர்களே இடம் பெற்றிருப்ப, இராவணன் மந்திரப்படலத்து அமைச்சர் அல்லாதோரும் இடம் பெற்றனர். வீடணனும் இடம் பெற்றான் எனின், இலங்கையவையின் குடியரசுத் தன்மைக்கு வேறு காட்டு வேண்டுமோ? 'சிட்டர் செயல் செய்திலை, குலச்சிறுமை செய்தாய்' எனக் கும்பகருணனும், 'இலங்கை புறத்தீயால் அழியவில்லை; சானகியின் கற்புத் தீயால் அழிந்தது' என வீடணனும் இராவணனை இடிக்கின்றனர். 'அசைவில் கற்பின் அவ்வணங்கை விட்டருளுதி' என்று அறிஞரின் மிக்க வீடணனும் அண்ணன் இராவணனுக்குப் பலர் முன்னிலையில் அறிவுரை கூறுகின்றான். வீடணன் இராமன் பக்கம் சேர்ந்த பின்னரும், வீடணன் மகள் திரிசடையைச் சீதைக்குத் தோழியாக இராவணன் அமர்த்தியிருந்தான் என்பது ஒன்றே போதும் இராவணன் தன் பெருமைக்கு.

## காப்பிய நேர்மை

காப்பிய நடப்புக்காக இனியவற்றையும் இன்னாதவற்றையும் புலவன் தழுவிப் பாடினாலும், மன்னாயத்துக்கு உண்மையை வடித்துக் காட்டுதல் அவன் கடமை; யார் தீமை செய்தாலும் அதனைச் சுட்டிக்காட்டுதல் அவன் பொறுப்பு. பாத்திரத்தின்மேற் பெரும்பற்று வைத்து அறக் கடமையை அவன் புறக்கணித்தல் கூடாது. பல பாத்திரங்களைத் தனித்தனி ஆராய்ந்து, கம்பர் நேர்மையை நாம் காணலாம். அங்ஙனம் காணப்புகுதல் மிக விரிவாகும் என்று அஞ்சி ஒரு பாத்திரத்தை மட்டும் கொண்டு காப்பிய நேர்மையைப் புலப்படுத்த முயல்கின்றேன்.

## பெண்களின் செல்வாக்கு

இராமன் தன்னேரில்லாத தலைவன் என்பதைப் பல நிலையிலிருந்து முன்னர்க் கண்டோம். ஆனால் இராமன் எக்குற்றமும் இல்லாதவன் என்று சொல்ல முடியுமா? இந்த வினா வீம்பானது என்று எண்ண வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். இராமனாயினும் காப்பியத்துள் ஒரு பாத்திரமே என்று கொண்டு ஆராயவேண்டும். ஒரு காப்பியம் நீளமாக இயங்கவேண்டும்

என்றால் அது தலைமைப் பாத்திரத்தின் குணத்தாலும் இயங்கும், குற்றத்தாலும் இயங்கும். இருவகை நிலையுமின்றிக் காப்பியத்துக்கு நீளம் வாராது. தான் பெறாத இராமனைப் பெற்றதாகக் கொண்டு பேரன்பு காட்டிய கைகேசி மனம் திரிந்த காரணத்தாலும், நெடுநாளும் பெருவரமும் பெற்ற இராவணன் என்பவன் இராமனின் மனைவியை நயந்த காரணத்தாலும் காப்பியம் நெட்டோட்டம் பெறுவதாயிற்று. இராமாயண நிகழ்ச்சிகளில் இராமன் எவ்வாறு நடந்தான்? அவன் நடந்த முறை கம்பர் மனத்து எப்படிப் பட்டது? இராமனிடம் குற்றம் கண்டக்காலும் கம்பர் அதனைச் சுட்டக்கூடாது என்று சும்மா இருந்தனரா? எல்லாப் பாத்திரத்திலும் இராமபாத்திரத்தை மட்டும் காப்பிய நேர்மை என்ற தலைப்பில் ஏன் பேச நினைக்கின்றேன் என்றால், தலைமை ஒப்பில்லா இப் பாத்திரத்தையே விடாது அலசிக் கம்பர் நேர்மை காட்டுகிறார் எனின், வேறு பாத்திரங்கள் அவர்க்கு விலக்காகுமா என்று தெரிவிப்பதற்குத்தான்.

தசரதன் விழுந்து மன்றாடியும் கைகேசி தான் கேட்ட வரத்தை மீட்டுக் கொள்ளவில்லை. உய்யேன் நங்காய் உன் அபயம் என் உயிரென்று அடைக்கலமாகக் கணவன் பணிந்தபோதும், இது அதிகாரமா, அறமா என்று மனைவி வினவினாளேயன்றி விட்டுக் கொடுக்கவில்லை. சிற்றன்னையின் சூழ்வினையால், எதிர்பார்த்த இரக்கம் இன்மையால், இராமன் வனம்புக வேண்டியதாயிற்று. தசரதன் மனைவி கைகேசி அவன் சொல்லைக் கேட்கவில்லை. இராமன் மனைவி சீதையும் அவன் சொல்லைக் கேட்கவில்லை. தாய் தந்தையின் ஆணைப்படி வனஞ்சென்று வருவேன்; அதுவரை நீ வருந்தாதே எனவும், சூடும் மேடும் உடைய காடு நின் திருவடிப்போதுக்கு நல்லதன்று எனவும் பக்குவமாகக் கூறிய இராமனுக்கு, 'நின்பிரிவினும் சுடுமோ பெருங்காடு' என்றாள் சீதை. அவனை மேலும் பேச விடாது மரவுரி தரித்து வந்து கையைப் பிடித்துக்கொண்டாள். 'வரவேண்டும் என்று பிடிவாதம் செய்கின்றனையே; நீ கூட வந்தால் எல்லையற்ற இடர் தருவாய்' என்று வெளிப்படையாக மொழிந்தான் இராமன்.

> கொற்ற வன்னது கூறலும் கோகிலம்
> செற்ற தன்ன குதலையள் சீறுவாள்
> உற்று நின்ற துயரமி தொன்றுமே
> எற்று நந்தபின் இன்பங்கொ லாம்என்றாள்.

நான் உடன் வருவது ஒன்றே உங்கட்குத் துன்பம். என்னை விட்டுச் சென்று விட்டால் உங்கட்கு எல்லாம் இன்பம் என்று ஊடலும் ஐயமும்படச் சீதை கோணி மொழியவே, 'பிறிதோர் மாற்றம் பெருந்தகை பேசலன்' என்று கம்பர் நாகரிகமாக இக் களத்தை

முடிக்கின்றார். தன்னேரில் லாத்தலைவன் வேண்டுகோள் பலிக்காத இடம் இது என்று தெரிந்து கொள்ளுங்கள். தயரதன் சொல்லும்,இராமன் சொல்லும் தத்தம் மனைவியரிடத்துச் செல்லுபடி ஆகாமையால் இராம காப்பியம் விரிகின்றது.

காப்பியம் இடையறாது நீளநீளச் செல்லவேண்டும் எனின், இடையிடையே குற்றக் களங்கள் அமைதல் வேண்டும். கைகேசியின் இரக்கமின்மை காப்பியத் தலைவனான இராமனை முடிதுறந்து நாடுதுறந்து மனைவியோடு காடேகச்செய்தது. அவள் இரக்கமின்மைக்குக் காப்பிய வேகம் அவ்வளவே. அதற்கு மேலும் காப்பியம் வளர வேண்டும் எனின், பிறிதொரு புதுக்காரணம் வேண்டும். அக்காரணந்தான் சீதை பொன்மானைப் பிடித்துத்தர வேண்டும் என்று வலியுறுத்தியது. இராமாயணக் காப்பியம் ஒருவகையால் நோக்கின் பெண் இயக்கக் காப்பியம்; பெண்ணின் சிறுமையால் தாழ்ந்து பெண்ணின் பெருமையால் உயர்ந்த காப்பியம். கூனி, கைகேசி, சீதை, சூர்ப்பனகை என்ற நாற்பெண்களாலும் தொடர்ந்து நீளும் ஒரு காப்பியம். கைகேசியால் தயரதனும் சீதையால் இராமனும் சூர்ப்பனகையால் இராவணனும் நிலைதடுமாறியதைப் புலப்படுத்தும் ஆடவர்தம் அவலக் காப்பியம் என்று இராமாயணத்தை நோக்கலாம்.

## இராமன் பிழைபாடு

காடேகிய மூவரும் பஞ்சவடியில் உள்ளனர். சூர்ப்பனகை அங்கு வந்து இராமனைக் காதலித்தாள். அவன் அந்தி வணக்கம் செய்யச் சென்ற சமயம் பார்த்துச் சீதையைக் கைப்பற்ற எண்ணினாள். சாலையைக் காத்திருந்த இலக்குவன் அரக்கியின் வஞ்சக எண்ணத்தை அறிந்து அவள் உறுப்புக்களைக் கொய்தெறிந்தான். அழுதரற்றிய சூர்ப்பனகை இராவணனுக்குச் சீதைமேல் காமம் ஊட்டினாள். இராவணன் சூழ்ச்சிப்படி மாரிசன் மாய மானாகச் சீதை முன் வந்து விளையாடினான். இதனைப் பற்றித் தருக என்று அவள் இராமனை வற்புறுத்தும்போது, இது மாயப் பொன்மான் என இலக்குவன் தடுத்துரைத்தான். உலகத்து உயிர்கள் பலகோடி; ஏன் இது மெய்ம்மானாக இருக்கக் கூடாது என்று இராமன் அமைதி கூறுகையில், மறைந்து போகுமுன் பற்றித்தருக என்று சீதை விரைவு படுத்தினாள். இந்நிலையில், இராமனுக்கும் அடிமைத் தம்பிக்கும் பலமான சொற்போர் நிகழப் பார்க்கின்றோம். இரா்மாயணப் போக்கில் இராமன் தவறும் இடங்கள் பலவற்றில் இலக்குவன் அறிவுடைத் தம்பியாக விளங்குவதைக் காண்கின்றேன்.

ஐயநுண் மருங்குல் நங்கை
அஃதுரை செய்ய ஐயன்
செய்வனென் றமைய நோக்கித்
தெரிவுடைச் செம்மல் செப்பும்
வெய்யவல் அரக்கர் வஞ்சம்
விரும்பினார் வினையிற் செய்த
கைதவ மானென் றண்ணல்
காணுதி கடையின் என்றான்.

மந்திரக் கிளையோன் சொன்ன
வாய்மொழி மனத்துக் கொள்ளான்
சந்திரற் குவமை சான்ற
வதனத்தாள் சலத்தை நோக்கிச்
சிந்துரப் பவளச் செவ்வாய்
முறுவலன் சிகரச் செவ்விச்
சுந்தரத் தோளி னானம்
மானினைத் தொடர லுற்றான்.

இக் களத்தின்கண் தன்னேரில்லாத் தலைமைப் பாத்திரமான இராமபிரானைக் கூடக் கம்பர் திறனாடக் காண்கின்றோம். எப்பாத்திரம் ஆயினும் பிழை செய்யின் சுட்டிக் காட்டுவதே நேர்மை. அப்பிழை காப்பிய நீட்சிக்குத் துணை செய்தாலும் கூட, நீட்சிக்குத் துணை செய்கின்ற ஒரு காரணத்தால், செயலை நேரிது என்று சொல்லலாமா? இராவணன் சீதையைக் கவர்ந்து ஓடுவது காப்பிய ஓட்டத்துக்கு இன்றியமையாததாயினும் அவன் காமச்செயல் கயமைச் செயல் அல்லவா? காசில் கொற்றத்து இராமன்கதையை ஆசைபற்றிக் கம்பர் பாடினாலும் செய்த குற்றத்தைக் குணம் என்று எப்படிக் கூறமுடியும்? யார் செய்யினும் குற்றத்தைக் குற்றம் எனவும் குணத்தைக் குணம் எனவும் சுட்டும் புலவனே மன்பதைப் புலவன் ஆவான். வாழும் மக்கட் குலத்தை முன் வைத்துப் பாத்திரங்களின் செயல்களைத் திறன் காணவேண்டும். மன்னாயப் பார்வையோடு பாத்திரத்தைப் பாடாது, பாத்திரத்துக்கு மன்குலத்தை அடிமைப்படுத்துபவன் போலிப் புலவனேயன்றி மன்னாய வேலிப் புலவன் ஆகான். காப்பிய நோக்கில் ஆராய்ந்தால், புல்மைக் கம்பர் இராமனுக்கு அடிமை யல்லர்.

ஆயிடை அன்னம் அன்னாள்
அமுதுகுத் தனைய செய்ய
வாயிடை மழலை யின்சொற்
கிளியினிற் குழறி மாழ்கி

நாயக நீயே பற்றி
நல்கலை போலும் என்னாச்
சேயரிக் குவளை முத்தம்
சிந்துபு சிதறிப் போனாள்.

அண்ணனே, மானை நான் சென்று பிடித்துத் தருகின்றேன், நீ போக வேண்டியதில்லை என இலக்குவன் பொருத்தமாகச் சொல்லியபோது, சீதை மெய்யாலும் வாயாலும் ஊடல் காட்டி அப்புறம் சென்றாள். மனைவியின் பகலூடலுக்குப் பாண்டியன் மதிப்புக் கொடுத்தமையினால் விளைந்த விளைவைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது. இங்கும் அத்தகைய விளைவுப் போக்கைக் காண்கின்றோம். போனவள்தன் புலவியைத் தீர்க்க எண்ணி விட்டான் இராமன். அதனால் இலக்குவன் சொல் அவன் செவியேறவில்லை. இலக்குவனைத் 'தெளிவுடைச் செம்மல்' எனவும் பகைவர்கள் விடுத்த மான் என்று அவன் குறித்த செய்தியை 'மந்திரத்து இளையோன் சொன்ன வாய்மொழி' எனவும், தம்பியின் பொருளுரையைப் போற்றாது புறப்பட்ட இராமனின் தகாத போக்கை, 'வதனத்தாள் சலத்தை நோக்கி' எனவும் கம்பர் நேர்மையாகவும் துணிவாகவும் இரு பாத்திரங்களையும் ஆராய்தல் காண்க.

## பிழை புலப்பாடு

பெரும் பாத்திரங்கள் பிழைபட நடக்கும்பொழுது அப்பிழையான நடப்பைப் புலவன் வெளிப்படுத்துவது பைஞ்ஞிலக் கடமை என்று கூறினேன். வெளிப் படுத்தாது வாளா இருப்பின் காப்பியத்தைக் குறிக்கோள் இன்றியும் மன்னாயப் பற்றுக்கோடின்றியும் வெற்றெனத் தொடுத்தான் புலவன் என்றே படும். பாத்திரங்களின் தரங்களும் பல; அவற்றின் பண்புத் திறங்களும் பல; ஆதலின் பிழையை வெளிப்படுத்தும் முறையும் பலவாதலே இயற்கை. 'துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்' என்று கூனிச் சிறு பாத்திரத்தை வெளிப்படையாகவே இகழ்கின்றார் கம்பர். ஏன்? கூனி ஒருகால் நல்லவளாக இருந்து பின்னொரு கால் கொடியவளாக மாறியதில்லை. மாறாத கொடுங் குணத்தள் ஆதலால் 'துன்னருங் கொடு மனம்' என்று மறைவின்றி அடைபடுத்துகின்றார் புலவர். கைகேசி இயல்பிற் கொடியவள் இல்லை. இரக்கம் இல்லாதவள் இல்லை. இராமனைப் பயந்த எனக்கு இடருண்டோ என்று கூறிய நல்லாள். கூனியின் திரிசொற்களால் பின்பு மனம் மாறியவள். கைகேசி மிகக் கொடியவளாக இருந்தால் அரசை ஏற்க விரும்பாப் பரதனையும் கொடுமைப்படுத்தியிருப்பாள். இராமனைத் திரும்ப அழைத்துவரப்

புறப்பட்டபோது கைகேசியும் உடன் சென்றாள் என்பதிலிருந்து, அவள் கூனியினத்தால் கொடியவள் ஆனாளன்றி, இயல்பிற் கொடியவள் இல்லை என்பது பெறப்படும். அதனாலன்றோ இராமன் கடைசி வரை கைகேசியை அன்பிற் சிறந்த தாயாகவே கருதினான். 'சிறக்கும் மாமியர் மூவர்க்கும்' என்று மருமகளாம் சீதையும் ஒப்பாகப் பாராட்டினாள்.

அரக்கர் பாவமும் அல்லவர்
இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள்
தூய்மொழி மடமான்
இரக்க மின்மையன் றோவின்றிவ்
வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப்
பருகுகின் றதுவே,

எனக் கம்பரும் 'தூய்மொழி மடமான் இரக்கமின்மை' என்று முன் நிலையையும் பின் திரிபையும் காட்டிப்பாடுவாராயினர். ஆதலால் தக்கவர்கள் பிழை செய்யும் போது புலவன் பக்குவமாகப் புலப்படுத்தினாலும், பிழையை எம்முறையிலேனும் புலப்படுத்த வேண்டுவது புலவன்தன் காப்பிய ஒழுக்கம் ஆகும்.

இராமன் பேரறிவுடையவன், எதிர்காலம் உணரவல்ல கூர்மையுடையவன், பேராற்றலும் பெரும்பொறையும் உடையவன். ஆனால், பிரிவினும் சுடுமோ பெருங்காடு என்ற பேரன்பினோடு வனத்துக்கும் பிரியாது உடன் வந்த மனைவி, முன்வந்த மானைப்பற்றி விளையாடுதற்குத் தருக என்று மன்றாடியபோது, பாவம் என் செய்வான் இராமன்? அவள் ஊடலில் அவன் அறிவோட்டம் நின்று விட்டது. சீதையை மேலும் மறுத்துக் கூறுவதால் பயன்படாது என்று அவன் உள்ளோட்டம் நின்றுவிட்டது. ஆசிரியரே இத்தடுமாறு சூழ்நிலையை உணர்ந்து பாடுகின்றார்.

நோக்கிய மானை நோக்கி
நுதியிழை மதியின் ஒன்றும்
தூக்கிலன் நன்றி தென்றான்
அதன்பொருள் சொல்ல லாகும்
சேக்கையின் அரவு நீங்கிப்
பிறந்தது தேவர் செய்த
பாக்கியம் உடைமை யன்றோ
அன்னது பழுது போமோ.

முதல் இரண்டடிகளில் நுண்மாண் நுழைபுலத்தனாக இருந்தும் குற்றப்பட்டான்; மேலும் நல்லது என்றான் எனக் கம்பர் இராமன் தவற்றை வெளிப்படுத்துகின்றார்; மன்குலக் கடமையைச் சரிவரச் செய்கின்றார்; தன்னேரில்லாத் தலைமகன் ஆதலால் இக் குற்றம் செய்தது தேவர் பாக்கியம் என்று ஓர் அமைதியும் கூறுகின்றார். புலவன் கடமையையும் பாத்திரத்தின் பெருமையையும் விடாது காட்டும் ஒரு செய்யுள் இது.

## சீதை தனிமைப்பாடு

இராமாயணத்துப் பெருநிகழ்ச்சிகள் பல. அப் பலவற்றுள்ளும் இராமாயண நடப்புக்குப் பெருந்துணை செய்த நிகழ்ச்சி யான் அறிந்தவரை ஒன்றே. பஞ்சவடியில் சீதையைத் தனியே விட்டுவிட்டு ஆடவர் இருவரும் (இராமனும் இலக்குவனும்) பிரிந்துபோன ஒரு நிகழ்ச்சி பின் காப்பிய நடக்கைக்கெல்லாம் பெருங்காரணம் ஆயிற்று. இலக்குவன் வேண்டுகோட்படி அவனையே மானைப் பிடித்துவரப் போக்கியிருக்கலாம் இராமன். அப்போது 'நாயக நீயே பற்றித் தருக' என்று சீதை ஊடி இலக்குவன் செலவைத் தடுத்தாள். மாரீசன் குரலைப் பொய்க்குரல் எனவும் இராமனை வெல்வார் யார் எனவும் இலக்குவன் சீதைக்கு எடுத்துரைத்தபோது, அவன் தன் அயல் நிற்பதைச் சிறுமையாகப் பழித்துரைத்து அவ்விடத்தை விட்டுப் போக்கினாள். சீதையுடன் ஆடவர் இருவர் உடன் இருந்தும் இருவரும் அகல வேண்டிய ஒரு களம் ஏற்பட்டுவிட்டது. இதுவே சூழ்நிலைக் கேட்டுக்கு ஓர் அறிகுறி. கண்ணகியோடு பிரியா வாழ்க்கை பெற்று மதுரை வந்த கோவலன் மாதரி இல்லத்துத் தங்கினான். சிலம்பு விற்பனைப் பொருட்டுக் கண்ணகியைத் தனித்து இருக்க வைத்துப் பிரியும் நிலை ஏற்பட்டது.

கருங்கயல் நெடுங்கட் காதலி தன்னை
ஒருங்குடன் தழீஇ உழையோர் இல்லா
ஒருதனி கண்டுதன் உள்ளகம் வெதும்பி
வருபனி கரந்த கண்ணன் ஆகி,

என்று பாடுகின்றார் இளங்கோ. பிரியாக் கண்ணகியை அயல் நாட்டில் தனிமையாக வைத்துப் பிரிதற்கு உரிய சூழ்நிலை வந்தது என்றால், மேலும் என்ன வருமோ என்ற அச்சம் கோவலன் நெஞ்சுக்கு அவனை அறியாமலே தோன்றிற்று. இச் சிலப்பதிகாரக் களத்துக்கு ஒருபுடை நிகரானது இவ்விராமாயணக்களம். இக்களத்தின் எதிர்கால விளைவு தெளிவுடைத் தம்பிக்குத் தோன்றாமல் இல்லை. மாரீசன் இராமன் குரல்போல வாய்விட்டு

அரற்றியவுடனேயே. இராமனுக்குத் தம்பியின் ஞானம் புரிந்துவிட்டது. 'செய்யது அன்றெனச் செப்பிய தம்பியை ஐயன் வல்லன் என் ஆருயிர் வல்லனால், உய்ய வந்தவன் வல்லன்' என்று இராமன் வாக்காகவே கம்பர் பாராட்டுகின்றார். அண்ணனுக்குப் புரிந்தது அண்ணிக்குப் புரியவில்லை. புரிந்த அண்ணன் திருப்பி வருவதற்குள் ஒழுக்கக் குறைவுபடப்பேசி இலக்குவனைத் துரத்திவிட்டனள் பேதைச் சீதை.

போகின்றேன் அடியனேன் பொருந்தி வந்துகேடு
ஆகின்ற தரசன்தன் ஆணை நீர்மறுத்து
ஏகென்றீர் இருக்கின்றீர் தனியீர் என்றுபின்
வேகின்ற சிந்தையான் விடைகொண் டேகினான்.

இலக்குவன் இவ்வளவு தெளிந்த அறிஞன் என்பதனை ஆரணிய காண்டத்தில் அறிகின்றோம். அயோத்தியா காண்டத்தில் சினம் மிக்குப் பரதன்மேல் ஐயங்கொண்ட இலக்குவனா இவ்வளவு தெளிவுடைத் தம்பியாக வளர்ந்து விட்டான் என்று யாருக்கும் வியப்பு உண்டாகும். அதுபோல் அயோத்தி நிகழ்ச்சியில் இராமன் தெளிவையும் ஆரணிய நிகழ்ச்சிகளில் அவன் தெளிவின்மையையும் காட்டுகின்றார் கம்பர். இராமனைப் போகச் செய்ததும் அதன் பின் இலக்குவனைத் துரத்தியடித்ததும் பின்னொரு நாள் சீதையின் நெஞ்சைச் சிறையில் பிளந்தன.

வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கியென்
மஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாயெனா
நஞ்சனை யானகம் புகுந்தநங் கையான்
உய்ஞ்சனென் இருத்தலும் உலகங் கொள்ளுமோ.

எனவே, ஆரணிய காண்ட முதல் காப்பிய விரிவுக்கு ஒரு பெருந்துணை செய்த நிகழ்ச்சி சீதையை இருவரும் விட்டுப் பிரிந்தமை என உணர்க.

### இராமனைக் கண்டித்தல்

பிரிதல் ஆகாது என்று நன்கு தெரிந்திருந்தும், சீதையின் வசைமொழியால் இலக்குவன் கட்டாயம் பிரிய வேண்டியவன் ஆயினான். ஆதலின் இலக்குவன் குற்றம் உடையவன் இல்லை. எதனையும் அண்ணன்பால் மறுக்காதவன். 'தம்பி என்னும் படியன்று அடியாரின் ஏவல் செய்தி' என்ற தாய் சொல்லைத் தலைமேற் கொண்டவன். 'இந்நெடுஞ்சிலை வலானுக்கு ஏவல்செய் அடியன் யானே' என்று அனுமனிடம் தன்னை

அறிமுகப்படுத்திக்கொண்டவன். அத்தகைய அடிமைத் தம்பி இஃது அரக்கனின் வஞ்சகமான் என்று இடித்து எடுத்துக் காட்டும்போது இராமன் சிறிதாவது சிந்தித்திருக்க வேண்டாமா? முன்னரே சூர்ப்பனகையின் வரவையும் வஞ்சகத்தையும் பகையையும் இராமன் அறிவான். அவள் சீதையைத் தூக்கிச்செல்ல முயன்றதையும் அவன் அறிவான். கரன் வதைக்குப்பின் இராம இலக்குவர் தம் ஆரணிய வாழ்க்கையில் எவ்வளவு விழிப்பாக இருத்தல் வேண்டும்? சீதையை இருவரும் பிரியாது காக்க வேண்டாமா? காமுற்ற சூர்ப்பனகை உறுப்புகள் அறுபட்டபின், சும்மா இருப்பள் என வாளா இருக்கலாமா? வாள் கொண்டல்லவா சீதையைச் சுற்றிப் பிரியாது இருக்கவேண்டும்? இத்தகைய சூழ்நிலையில் இராமன் பிரிந்ததுதான் பெரும் பிழை; பின் நிகழ்ச்சிகளுக்கு அடிப்படைப் பிழை. தேவர் செய்த தவத்தால் இராமன் இப்பிழை செய்தான் என்றாலும், வினையின் பயனை இராமனாயினும் நுகர்ந்துதானே ஆகவேண்டும்? 'கடக்க ஒண்ணா வினையென வந்து நின்ற மான்' என்பர் கம்பர்.

ஒருவர் செய்த பிழையை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ கண்டிக்கலாம்; தானே உணர்ந்ததாகவோ, பிறர் உணர்த்தியதாகவோ காட்டலாம்; பல சொற்களால் அல்லது ஓரிரு சொற்களால் புலப்படுத்தலாம். யாவர் பிழை செய்யினும் எவ்வாறேனும் கண்டித்தல் என்பது வேண்டும். உலக வழக்கில் தன்னலம் கருதிச் செல்வாக்குடையவர்தம் பிழையை நாம் கண்டியாதிருக்கலாம். காப்பிய வழக்கில் எவர் பிழையும் கண்டிப்புக்கு உட்பட வேண்டும்; உட்படுத்துவதே காப்பிய நேர்மை. அதுவும் ஒருவன் மனைவியை ஒரு கயவன் தூக்கிச் செல்லுமாறு உரியவர்களே வாய்ப்பு அளித்தார்கள் என்றால் எவ்வளவு இடிப்புரைக்கு உரியவர்கள்? இராமன் தன்னேரில்லாத் தலைவன் ஆதலின், இராமனைப் பிரானாகக் கம்பர் மதிப்பவர் ஆதலின், அவன் குற்றத்தை மிக வெளிப்படையாகவும் பலபடவும் பலர் வாய்ப்படவும் பாடுவார் என எதிர்பார்ப்பது பிழை. பாத்திரத்துக்குத் தகப் பாடும் நாகரிகம் வேறுபடும்.

சீதையை இராவணன் கவர்ந்து சென்றபின், இராமனும், இலக்குவனும் சடாயுவைக் காண்கின்றனர். தனக்கும் இராவணனுக்கும் நடந்த போரையும் தானுற்ற துயரையும் சடாயு கூறுகின்றான். இராமனுக்குச் சினம் பொங்கிற்று. எல்லா உலகங்களும் எட்டுத்திசைகளும் ஞாயிறும் மீன்களும் நீரும் நிலமும் காற்றும் எல்லாம் அழியச் செய்வேன் என்று வீறுமொழிந்தான் இராமன். 'துஞ்சின உலகமெல்லாம் என்பது ஏன்? துணிந்த

நெஞ்சின் அஞ்சினன் இளையகோவும் அயலுளோர்க்கு அவதியுண்டோ' என்றபடி, அண்ணன் வெகுளி கண்டு இலக்குவனும் என்னாமோ என்று ஒடுங்கினான். அறமூர்த்தியாம் இராமனே உலகை அழிக்க முனிந்தான் என்றால் அவன் முனிவை யார் தடுக்க முடியும்? யார் முன்னின்று அறவுரை கூறமுடியும்?

வம்பிழை கொங்கை வஞ்சி
  வனத்திடைத் தமியள் வைகக்
கொம்பிழை மானின் பின்போய்க்
  குலப்பழி கூட்டிக் கொண்டீர்
அம்பிழை விரிவிற் செங்கை
  ஐயன்மீர் ஆயுங் காலை
உம்பிழை யென்ப தல்லால்
  உலகஞ்செய் பிழையும் உண்டோ?

ஆதலால் முனிவா யல்லை
  அருந்ததி யனைய கற்பின்
காதலாள் துயரம் நீக்கித்
  தேவர்தம் கருத்து முற்றி
வேதநூல் முறையின் யாவும்
  விதியுளி நிறுவி வேறும்
தீதுள துடைத்தி என்றான்
  சேவடிக் கமலம் சேர்வான்.

புயனிற வண்ணன் ஆண்டப்
  புண்ணியன் புகன்ற சொல்லைத்
தயரதன் பணியி தென்னச்
  சிந்தையிற் றழுவி நின்றான்.

இராமன் சினத்தீ சடாயுவின் அறிவுநீரால் முற்றும் அவிந்தது. தந்தை அனைய சடாயுவைத் தவிர இராமனை நேரடியாக இடித்துரைக்க வல்லார் யார்? மனையாளை வனத்தில் தனியாக இருக்கச் செய்து இருவரும் மானின்பின் போனது குலப்பழி எனவும், உண்மையாக ஆராயுமிடத்து இவ்வளவு துயரத்துக்கும் காரணம்உங்கள் தவறு தான்; உலகம் செய்த தவறில்லை எனவும், தன் தவற்றை உணராது மேலும் சினந்து உலகை அழிக்க முற்படுவது பெருந்தவறு எனவும் சடாயு கூறுகின்றான். தன்னேரில்லாத் தலைவன் வணங்கும் ஒரு பாத்திரம் சடாயு ஆதலின் அவனைக் கொண்டு இராமனை வழிப் படுத்துகின்றார் கம்பர். சடாயுவின் அறவுரையால் யார் பிழை என்ற உண்மையை மன்பதை உணர்கின்றது. கைகேசியின் சூழ்ச்சியால்

இராமன் அரசுரிமை துறந்து வனம்புகுவான் என்பது கேட்ட இலக்குவன் மின்னொத்த சீற்றக் கனல்விட்டு 'விதிக்கும் விதியாகும் என் விற்றொழில் காண்பாய்' என்று வெகுண்டு நின்றான். நின்றானைப் பார்த்து இராமன் அறங் கூறி வெகுளி தணித்தான். இஃது அயோத்தியா காண்டம். இல்லாள் கவரப் பட்டாள் என்றவுடன் ஞாலம் முழுதையும் அழிப்பேன் என்று காணாச் சினத்தன் ஆனான் இராமன். முன்சினத்துக்குப் பேர்பெற்ற இலக்குவன்கூட அண்ணன் சினத்தைக் காணப்பொறாதவன் ஆயினான். அந் நிலையில் 'உம்பிழை என்பதல்லால் உலகஞ் செய் பிழையும் உண்டோ' என்ற சடாயு விளக்கத்தால் இராமன் சினம் தணிந்தான். இஃது ஆரணிய காண்டம்.

காப்பிய நேர்மை என்ற தலைப்பில் இதுகாறும் பெரும் பகுதி இராம பாத்திரத்தைப் பற்றியே குறிப்பிட்டேன். ஏன்? தன்னேரில்லாத் தலைவனையே கம்பர் கண்டிக்கத் தவறாராயின், அவரின் புலமை யுரிமைக்கும் காப்பிய நேர்மைக்கும் வேறு சான்றும் வேண்டுங்கொல்? சிறு பாத்திரங்களையும் எவ்வாறெல்லாம் கண்டித்திருக்கின்றார் என்று எடுத்துக்காட்ட இவ்வொரு சொற்பொழிவு இடந்தராது.

## இராவணன் குற்றம்

இனி இராவணன் பக்கம் வருவோம். இவனே காப்பியத்து எதிர்த் தலைவன். பாராட்டடத்தக்க பண்பு பல நிறைந்தவன். முக்கோடி வாணாளும் பெருந்தவமும் நல்வரங்களும் இவன் பெற்றான் என்றால், கயவனுக்குக் கடவுளர்கள் இவற்றை அளித்திருப்பார்களா? தூது சென்ற அனுமன் சீதையிடம் சூளாமணி பெற்றுத் திரும்புவதை விட்டுவிட்டு, அசோகப் பொழிலை அழித்தான்; அரக்கப் படைகளைக் கொன்றான். அங்ஙனம் செய்த அனுமனை, வீடணன் வேண்டுகோட்படி கொல்லாது விடுத்தான் இராவணன். 'உன் உறுப்புக்களை வலிந்து அவர்கள் அறுப்பதென்றால் நீ செய்த குற்றம் என்ன?' என்று தங்கையை முறையாகக் கேட்டான் இராவணன். இராவணன் பல் குணங்கள் எடுத்துரைக்க நான் வரவில்லை. ஆனால் எல்லாவகையிலும் கீழானவன் என்று ஒரேடியாக இராவணனை இறக்கிவிட முடியாது. மாயமான் இராமனுக்கு வினையானது போலச் சூர்ப்பனகை இராவணனுக்கு வினைச்சியானாள்.

> கொல்லாத மைத்துனனைக் கொன்றாயென்
>     றதுகுறித்துக் கொடுமை சூழ்ந்து
> பல்லாலே இதழதுக்கும் கொடும்பாவி
>     நெடும்பாரப் பழிதீர்ந் தாளே,

என்ற வீடணன் புலம்பலில் சூர்ப்பனகையின் சூழ்வினைக் குறிப்பை உணரலாம். எல்லாத்திறமும் படைத்த இராவணன் செய்த குற்றங்கள் பல அல்ல, ஒன்றே ஒன்று தான். 'செல்வமோ அது அவர் தீமையோ இது' என்பான் அனுமன். ஆனால் அந்த ஒரு குற்றம் போதும் எல்லா நலங்களையும் கெடுப்பதற்கு. பிறன்மனை நயத்தல் என்னும் குற்றம் எல்லாக் குற்றங்களிலும் பெரியது. இக்குற்றம் அறம் பொருள் இன்பம் அனைத்தையும் கெடுக்கும்; காமம் வெகுளி மயக்கம் பலவற்றையும் உண்டாக்கும். குன்று போல் உயர்ந்தவரும் குன்றிமணியளவு குற்றஞ் செய்தாலும் குன்றிப்போவர் என்றார் வள்ளுவர். இராவணன் குன்றுபோல் பெரியவன்; ஆனால் அவன் இழைத்த பிறன் மனைப் பறிப்பு என்னும் குற்றமோ பலவா, சிலவா, என்று எண்ணிக்கை கொண்டு கணிப்பது சரியன்று. செய்தது ஒன்றாயினும் பிழை எத்தன்மைத்து என்று தன்மை நிலையில் பார்க்க வேண்டும். குற்றத்தின் ஆழம் அதனைச் செய்தவன் உயர்வையும் பொறுத்தது. பெருங்குற்றங்களும் மிகச் சிறியவர்கள் செய்யும்போது, அச்சிறியவர்களின் சிறிய வாழ்க்கைக்கு ஏற்பப் பயனும் சிறிதாகிவிடும். யார் குற்றஞ் செய்தார். யாரிடம் குற்றஞ் செய்தார், எக்குற்றஞ் செய்தார் என்ற முந்நிலையையும் கூட்டித்தான் விளைவின் நிலையைக் கவனிக்க வேண்டும். பேராற்றல் படைத்த இராவணன் தன்னினும் பேராற்றல் கொண்ட இராமன் மனைவியாம் கற்புடை நல்லாளிடம் பிறன்மனை நயத்தல் என்னும் குற்றத்தை எண்ணத்தளவில் இல்லாது செயலளவுக்கு முயன்றமையால் நிகழ்ச்சி காப்பிய அளவுக்குப் பெரிதாயிற்று

## இராவணனைக் கண்டித்தல்

இராவணன் வதைப்படலம் என்பது அவலப் படலம். எவ்வளவு பெரிய தலைவன் ஒரு பெருங்குற்றத்தால் எல்லாரையும் மடிவித்துத் தானும் மடிகின்றான்! இக் குற்றத்தைக் குணமாம் என்று இராவணன் பக்கத்தார் யாராவது ஒப்பியது உண்டா? எண்ணிப் பாருங்கள். வீடணன் ஒருவன்தான் கண்டித்தவன் என்று எண்ணுகின்றீர்களா? 'மற்றொருவர்க்காய் மனை வாழும் தாரங் கொண்டார் என்றிவர் தம்மைத் தருமந்தான் ஈருங்கண்டாய்' என்றான் மாரீசன். 'பேசுவது மானம் இடைபேணுவது காமம்' என்று அவைக்கண் கூறினான் கும்பகர்ணன். 'சீதையை விடுதியாயின் தீரும் இத்தீமை' என்றான் மாலியவான். 'தையலை விட்டு அவன் சரணம் தாழ்ந்து' என்று இறுதியாகப் போரில் மடியுமுன் மீண்டும் இடித்துரைத்தான் கும்பகர்ணன்.

உம்பி யுணர்வுடையான் சொன்னஉரை கேளாய்
நம்பி குலக்கிழவன் கூறுநலம் ஓராய்
கும்ப கருணனையும் கொல்வித்தென் கோமகனை
அம்புக் கிரையாக்கி ஆண்டாய் அரசைய,

என்று மகன் அதிகாயன் மாண்டபோது தாய் தானியமாலினி அரற்றுகின்றாள். அக்கன் இறந்தபோது 'கொன்றனை நீயே யன்றோ அரக்கர்தம் குழுவை' எனவும், அதிகாயன் இறந்தபோது, 'புந்தியில்லாய், மக்கள் துணையற்றனை இற்றது உன் வாழ்க்கை' எனவும், போருக்குப் போகுமுன் 'ஆசைதான் அச்சீதைபால் விடுதியாயின் அனையவர் சீற்றம் தீர்வர்' எனவும் பலவாறு தந்தை முன்னின்று கழறினான் இந்திரசித்தன். அரிய மகன் மாண்டபோது 'இச்சீதையென்று அமிழ்தாற் செய்த நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் அன்றோ' என்று இராவணன் கேட்கப் புலம்பினாள் மண்டோதரி. சீதையைக் கொல்ல ஓடியபோது, 'நின்புகழுக்கு மன்னா கேடு வந்தது' என்று இடித்துத் தடுத்தான் மகோதரன். மனைவியரும் தம்பியரும் புதல்வரும் உற்றாரும் பெற்றாரும் இராவணனைக் கண்டிக்கத் தயங்கவில்லை. ஆதலின் 'அடுக்கும் ஈது அடாது என்று ஆன்ற ஏதுவோடு அறிவு காட்டி இடிக்குநர் இல்லை' என்று சீதை இராவணனை இகழ்ந்தது பொருந்தாது. பலர் பல நிலையில் இடிக்கப் பெற்றமையினாற்றான்,

நோக்கறவும் எம்பியர்கள் மாளவுமிந் நொய்திலங்கை
போக்கறவும் மாதுலனார் பொன்றவுமென் பின்பிறந்தாள்
மூக்கறவும் வாழ்ந்தேன் ஒருத்தி முலைக்கிடந்த
ஏக்கற வாலின்னம் இரேனோ உனையிழந்ததும்,

எனவும்,

சினத்தொடும் கொற்றம் முற்றி
  இந்திரன் செல்வம் மேவி
நினைத்தது முடித்து நின்றேன்
  நேரிழை ஒருத்தி நீரால்
எனக்குநீ செய்யத் தக்க
  கடனெல்லாம் ஏங்கி யேங்கி
உனக்குநான் செய்வ தானேன்
  என்னின்யா ருலகத் துள்ளார்,

எனவும், இராவணனும் சோகத்தின்போது தன் குற்றத்தைச் சொல்லி அழுகின்றான். அவன் குற்றத்தைச் சுட்டிக் காட்டிய பலரும் வீடணன் போல் விலகாது, ஏன் துணை நின்றனர் என்று நீங்கள்

கேட்கலாம். உடன் பிறப்பாலும், நன்றியுணர்வாலும், குடிமைப் பண்பாலும், வீரவுணர்வாலும், கொள்கை எப்படியிருப்பினும் பகைக் காலத்து அரசனை விட்டுக் கொடுப்பது நாட்டுப்பற்று ஆகாது என்ற அன்பினாலும் துணை நின்றனர். தயரதன் இறப்பிற்கும் இராமன் துறப்பிற்கும் காரணமான, தீயவை யாவையினும் சிறந்த தீயாளான கைகேசியைக் குடும்பத்திலிருந்து ஒதுக்கினார்களா? தண்டித்தாலும் இறுதிவரை அணைத்துக் கொண்டு தானே வாழ்ந்தனர். மறுபக்கம் சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

கய்கயன் தனயை முந்தக்
காலுறப் பணிந்து மற்றை
மொய்குழல் இருவர் தாளும்
முறைமையின் வணங்கும் செங்கண்
அய்யனை அவர்கள் தாமும்
அன்புறத் தழுவித் தத்தம்
செய்யதா மரைக்கண் ணீரால்
மஞ்சனத் தொழிலும் செய்தார்.

நாடு திரும்பிய இராமபிரான் முதற்கண் யாரை வணங்கினான்? இராமாயணத்துக்கு முதற் காரணமாக இருந்த கொடிய கைகேசியைப் பணிந்தானாம். அப்புறந்தான் தன்னைப் பெற்றெடுத்த கோசலையையும், தன்னுடன் அடியனாக வந்த இலக்குவனைப் பெற்றெடுத்த சுமித்திரையையும் பணிந்தானாம். இராமன் குடும்பத்து இவ்வொற்றுமை பாராட்டப்படும் என்றால், இராவணன் குடும்பத்து உறவினர் ஒற்றுமை பாராட்டுதற்கு உரியதில்லையா?

## அறிவும் ஒழுக்கமும்

இன்றைய சொற்பொழிவின் தலையான கருத்தை இனிச் சுட்டிக்காட்டி முடித்துக் கொள்ள விரும்புகின்றேன். தன்னேரில்லாத் தலைவனான இராமனும் குற்றஞ் செய்தவனே; பெருந் தேவர்கள்பால் வரம் பெற்றுத் தேவர்களைப் பணிகொண்ட இராவணனும் குற்றஞ் செய்தவனே. தலைவர்கள் பெரும் பண்பினாலும் காப்பியம் உருவாகும். அன்னவர்தம் பெரும் பிழையாலும் காப்பியம் உருவாக வேண்டும். இது காப்பிய இலக்கியத்தின் சிறப்பிலக்கணம். இராமன் செய்த குற்றம் என்ன? மாயமான் என்று தெளிவுடைத் தம்பி எடுத்தும் தடுத்தும் காட்டியதைப் பொருட்படுத்தாது மயக்கத்தால் சீதையின் புலவிக்கு ஆட்பட்டு மானின்பின் சென்ற குற்றம். இராவணன் செய்த குற்றம் என்ன? மற்றொருவன் மனைவியைக் காமுற்ற குற்றம். இராமன்

குற்றமும் இராவணன் குற்றமும் குற்றம் என்ற பொதுப்பேர் பெற்றாலும் இரண்டின் தன்மையும் முற்றும் வேறுபாடானவை. இராமன் செயல் அறியாமைப்பாற்பட்டது. இராவணன் செயல் தீயொழுக்கத்தின் பாற்பட்டது. இராமன் அறிவில் குற்றப்பட்டான். இராவணன் ஒழுக்கத்திற் குற்றப்பட்டான். 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்பது வள்ளுவம். ஆதலின் அறிவுக் குற்றம் உணர்ந்த பின் வாழ்வில் வளர்ச்சி தரும். தெரியாமல் செய்துவிட்டேன் என்று சொல்லும்போது உலகம் பொறுத்துக் கொள்ளும். அறியாமைப் படுதோறும் அறிவு வளரும். இன்று பெற்ற அறிவு நாளை அறியாமையாகவும், நாளையறிவு பின்னொரு நாள் அறியாமையாகவும் மாறிமாறி உயரக் காண்கின்றோம்.

உலக வளர்ச்சி என்பது அறிவு வளர்ச்சி. ஆனால் ஒருத்தன் வளர்ச்சி என்பது ஒழுக்க வளர்ச்சி. 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது வள்ளுவம். அங்ஙனம் ஓம்பாதபோது உயிர்போகும் என்பது குறிப்பு. எல்லாக் குற்றங்களுக்கும் இடையறவு உண்டு. சினம் ஒருகால் வரும் போகும்; களவு ஒருகால் செய்தார் பின்பு திருந்தலாம்; பொய் பலகால் கூறினார் உணர்ந்து பின்னர் வாய்மைப் படலாம். சினப்பாரையும் பொய் கூறுவாரையும் பொறாமை கொள்வாரையும் ஈயாதாரையும் அறியாதாரையும் கண்டு வைஞ்ஞிலம் அஞ்சுவதில்லை. விலகி ஓடுவதில்லை. ஒழுக்கம் என்ற சொல்லுக்கு இடையறாமை என்பது பொருள். இது காதல் ஒழுக்கத்தையே வழக்கில் குறிக்கும். கற்பு நிலையில் ஆணோ பெண்ணோ ஒருமுறை பிழைபட்டாற் குற்றம் இல்லை என்று கூறுவார் உண்டோ? இவ்வொழுக்கம் ஒருமுறையும் பிழைபாடு எய்துதற்கு உரியதன்று. இராவணனோ தான் ஒழுக்கம் பிழைத்ததன்றி, ஒழுக்கம் உடைய ஒரு பெண்ணை வலிந்து பிழையாக்கத் தன் அரசையும் ஆற்றலையும் பயன்படுத்தினான். எவ்வளவு பெருங்கேடு? எவ்வளவு மன்குல ஒழுங்குப் பிழை. இராவணனை இராமனாலும் திருந்தச் செய்ய முடியவில்லையே எனவும், அவனைக் கொன்றுதானே சீதையை விடுதலை செய்ய முடிந்தது எனவும் வினவினார் ஒருவர். 'புக்கோடி உயிர்பருகிப் புறம் போயிற்று இராகவன் தன் புனித வாளி' என்று கம்பர் கூறுவதால், இராவணனைக் கொன்றல்லது தூய்மை செய்ய இயலாது என்பது பெறப்படும். ஏன்? இராவணன் குற்றம் ஒழுக்கக் குற்றம், பிறன் மனை நயந்த குற்றம்.

காப்பியப் பெரும் புலவர் கம்பர் இராமாயணம் பாடி மன்பதைக்குக் காட்டும் நேர்மை என்ன, அறியாமைக் குற்றத்துக்கு வாழ்வு உண்டு; ஒழுக்கக் குற்றத்துக்கு இனத்தோடு அழிவு தவிர

வாழ்வில்லை. நிகரற்ற பெருந்தலைவனான இராமனையும் குற்றம் உள்ளபோது கூறக் கம்பர் கைம் மடங்கியதில்லை; 'மதியின் ஒன்றும் தூக்கிலன்' என்று அவன் சிந்தனை செய்யாக் குற்றத்தை உரிய இடத்துப் பாடியுள்ளார். தம்பி சொன்ன வாய்மொழியை மனத்துக் கொள்ளவில்லை எனவும், மனைவியின் ஊடல் நோக்கியே நடந்து கொண்டான் எனவும் இராமன் காமத்தையும் மயக்கத்தையும் வெளிப்படுத்துக்கின்றார். இவன் காமம் கற்பின் பாற்பட்டது; மயக்கம் அறியாமைப்பாற் பட்டது; எனினும் அறியாமையின் விளைவை இராமன் பல்லாண்டு நுகர்ந்தான் என்பதைக் கவிக்கூற்றாலும் இராமன் கூற்றாலும் பிறர் கூற்றாலும் கம்பர் நேர்மைப்பட மன்பதைக்குப் புலப்படுத்தினார்.

இராவணன் எல்லாச் செல்வமும் எல்லா அறிவும் பெற்றிருந்தும், தாய்போல் தொழத்தக்க பிறன் மனைவியைக் காமுற்று வேண்டாதன செய்தமையால், ஒருமுறை தவறிய ஒழுக்கத் தீமையால், அழிந்தான்; முக்கோடி வாழ்நாள் வாழ்வதற்கு இருந்தும், தன் தீமையைப் பல வரங்களும் தடுக்கமாட்டாது, குறுகிய காலத்தில் பழியோடும் மடிந்தான்; இனத்தோடும் குடும்பத்தோடும் மடிந்தான்.

தலைவன் ஒருவனது ஒழுக்கத் தீமை எவ்வளவு பெரிய அழிவு செய்யும் என்பதனை இராமாயணக் காப்பியம் வைஞ்ஞிலத்துக்குப் பாடிக்காட்டியிருக்கின்றது. இரு தலைவர்களின் இரு குற்றங்களால் தோன்றிய இராமாயணத்திலிருந்து நாம் அறிவது என்ன? முக்கியமான இடத்தில் தலைவர்கள் பேரறியாமைப் படக்கூடாது எனவும், விழுப்பமான ஒழுக்கத்தைக் கைவிடக்கூடாது எனவும், தலைவனே பேரறியாமையுற்றால், தலைவனே தீயொழுக் கனானால் விளைவுகள் காப்பியம் ஆகும் எனவும் அறிந்து கொள்கின்றோம். அறிவு வேண்டும் அதனினும் சிறந்த ஒழுக்கம் வேண்டும் என்று காட்டுவது இராமாயணம்; தலைவர்களுக்கு இவை தவறின்றி வேண்டும் என்று காட்டுவது இராமாயணம்; தலைவர்கள் தவறினால் உலகமும் ஏனை உயிர்களும் எவ்வளவு தொல்லையும் இழப்பும் பட நேரிடும் என்று காட்டுவது இராமாயணம். இவற்றை யார் என்று பாராது அழுத்தமாக ஆர்வமாக மன்குலத்துக்குப் பாடிக் காட்டியவர் கம்பர். கம்பர் காப்பியத்தை ஆராய்வது போல, அவர் கவிதையைச் சுவைப்பது போல, அவர் நேர்மையையும் உணர்வோமாக; உணர்ந்து உலகிற்கு உணர்த்துவோமாக!

• • • • • • • •

# மெய்யப்பன் பதிப்பக சிறப்பு வெளியீடுகள்!

சங்க இலக்கியக் களஞ்சியம்

சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம்

நகரத்தார் கலைக் களஞ்சியம்

நாட்டுப்புறப் பாடல் களஞ்சியம்

2000 ஆண்டுகள் 2000 நிகழ்ச்சிகள்

இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழ்நாட்டுத் தாவரங்கள்

தமிழ்நாட்டுப் பறவைகள்

தமிழ்க் காதல்

தமிழ் பயிற்றுமுறை

தமிழ் அகராதிக் கலை

தென்னிந்திய மானிடவியல்

தமிழர் மானிடவியல்

இந்திய மொழிகள்

மணிக்கொடி காலம்